REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 செப்டெம்பர் 20 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 225 | Friday 20, September, 2024 | 20பக்கங்கள் | 50/-

**ஜனாதிபதி தேர்தல்**

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

ஜனாதிபதி தேர்தல் காரணமாக, நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று (20) விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்வரும் 23 ஆம்

06

**வெளிநாட்டு தனியார் கடன் வழங்குநர்களுடன்**

# இலங்கையின் 1750 கோடி டொ. தனியார் வணிகக் கடன் மறுசீரமைப்புக்கு இணக்கம்



2023 ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட இலங்கையின் 1750 கோடி டொலர் தனியார் வணிகக் கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான இணக்கப்பாடு நேற்று (19) எட்டப்பட்டுள்ளது.

சர்வதேச முதலீட்டாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் (Ad Hoc Group of Bondholders AHGB) மற்றும் உள்நாட்டு நிதி நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் (Local Consortium of Sri Lanka LCSL) கூட்டு நிறுவனம் ஆகியவற்றுக்கிடையிலான கலந்துரையாடலின் பின்னர், தனியார் பிணைமுறி வழங்குநர்களுடனான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்நாட்டின் தனியார் பிணைமுறிகளில் 50 வீதத்துக்கும் அதிகமானவற்றை இந்த குழுக்கள் கொண்டுள்ளன. இந்த இணக்கப்பாடுகளுக்கமைய பிணைமுறிதாரர்கள் 11 வீத தள்ளுபடி வீதத்தின் அடிப்படையில் தற்போதைய கடன் பெறுமதியில் 40.3 வீத தள்ளுபடியை வழங்க இணங்கியுள்ளனர். இந்த இணக்கப்பாடுகளுக்கமைய, 2024 ஜூலை மாதம் ஸ்தாபிக்கப்பட்ட ஒருங்கிணைந்த செயற்பாட்டு வரைவை விடவும் பெருமளவான கடன் சலுகை இலங்கைக்கு கிடைக்கவுள்ளதோடு, புதிய நிபந்தனைகள்

06

# வாக்களிப்பு ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

### 1 கோடியே 71,40,354 பேர் வாக்களிக்க தகுதி

### வாக்காளர் அட்டைகள் கிடைக்காவிடின் இணையத்தில் தரவிறக்கம் செய்யலாம்

### அனைத்து பகுதிகளிலும் பாதுகாப்பு தீவிரம்

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று ஜனாதிபதியை தெரிவு செய்யும் 2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாராகவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்னாயக்க தெரிவித்தார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்காக பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 01 கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 என தெரிவித்த அவர், நாளை (21) நாடளாவிய ரீதியிலுள்ள வாக்களிப்பு நிலையங்களில் மக்கள் வாக்களிப்பதற்கு தயாராகவுள்ளதாகவும் அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அந்த தகவல்களை மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தமக்கு அறிவித்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று, தகவல்

06

# நெடுந்தாரகை பயணிகள் படகு சேவை நேற்று முதல் ஆரம்பம்

**வடமாகாண ஆளுநர் RDA யிடம் கையளிப்பு**




சுமார் ஒரு வருடத்தின் பின்னர் நெடுந்தாரகை பயணிகள் படகு நேற்று (19) தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

இதுவரை காலம் மாகாண சபையின் பொறுப்பிலிருந்த இப் படகு 52 மில்லியன் ரூபா செலவில்

06

# தேர்தலுக்கு பின்னர் மக்களின் இயல்பு வாழ்வில் எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது

**பாதுகாப்பு கவுன்ஸிலில் ஜனாதிபதி வலியுறுத்து**

தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியில் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படாத வகையில் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்புத் தரப்பு பிரதானிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு சபை நேற்றுக் (19) காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியபோதே ஜனாதிபதி இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார். நாளை (21) நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கு அவசியமான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டது.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுதல், வேட்பாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், வாக்குச் சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணும் நிலையங்களை அண்டிய பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்துதல் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல் என்பன குறித்தும் இதன் போது ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சமூக ஊடகங்களை கண்காணிக்க தயார் நிலையில் விசேட குழுவினர்

**தவறான பதிவுகளை அகற்ற ஏற்பாடு**




ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் நிறைவடைந்துள்ள அமைதியான காலப் பகுதியில், சமூக ஊடகங்களின் செயற்பாடுகளை கண்காணிக்க தேர்தல்கள் ஆணைக்குழுவினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதி தேர்தல் ஆணையாளர் பியூமி ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

ஐவர் கொண்ட குழு மற்றும் கண்காணிப்பு அமைப்புகளின் அறிக்கைகளின்படி, சமூக ஊடகங்களில் பரவும்

06

# தேர்தலுக்காக விசேட பாதுகாப்பு; அமைதி உறுதிப்படுத்தப்படும்

**பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதித் தேர்தல் பாதுகாப்புக்காக நாடளாவிய ரீதியில் பொலிஸ் வீதி தடைகளை ஏற்படுத்துவதற்கும் வன்முறை சம்பவங்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கும் பிரதேசங்களுக்கு மேலதிகமான பாதுகாப்பை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

06



## 03 தேர்தல் நடவடிக்கைகளுக்கு விசேட பஸ், ரயில் சேவைகள்

**1538 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த தீர்மானம்**

**கெஹெலியவின் மகனுக்கு**

# கொள்ளுப்பிட்டி சொகுசு வீடுகள் இரண்டையும் பயன்படுத்த தடை

**கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**




முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் மகன் ரமித் ரம்புக்வெல்லவுக்கு சொந்தமான இரண்டு சொகுசு வீடுகளையும் பயன்படுத்த தடை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தடையுத்தரவு

06

# ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை பொதுவெளியில் திரையிட தடை



ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை பொதுவெளியில் திரையிடுவது தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை (19) நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்தார். தேர்தல் முடிவுகளை பொதுவெளியில் திரையிடுவதனால் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படலாம் எனவும் அவற்றை தடுக்கும் வகையிலேயே இந்த

06

**தரம் 05 புலமைப்பரிசில் வினாத்தாள் கசிவு விவகாரம்**

# பரீட்சை திணைக்களத்துடன் CID விசாரணைகள் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாள் சம்பந்தமாக எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பாக பரீட்சைகள் திணைக்களம் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஆகியன விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி விசாரணைகள் நிறைவு பெற்றதும் உடனடியாகவே அது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும் எனவும் கல்வியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இம்முறை நடைபெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில், முதலாவது வினாத்தாளில்

06

**தேர்தல் வாக்களிப்பு காலங்களில்**

# அனர்த்தங்களை எதிர்கொள்ள விசேட பிரிவு நேற்று ஆரம்பம்

**அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவிப்பு**

ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைக்கும் வகையில், நேற்று (19) முதல் விசேட வேலைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின்

06

# நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் மூன்று துப்பாக்கி சூட்டு சம்பவங்கள்

**மூவர் பலி, இருவர் படுகாயம்**



நாட்டின் மூன்று வெவ்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டுள்ளதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, வெலிகம – மிதிகம பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளர் கொல்லப்பட்டுள்ளதுடன், மேலும் இருவர்

06

**கனடாவில் 2025 ஆண்டு முதல்**

# வெளிநாட்டு மாணவர்களுக்கான அனுமதியை கட்டுப்படுத்த திட்டம்



வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்க கனடா திட்டமிட்டுள்ளது. தற்போது கனடாவில் தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையை மேலும் குறைக்கும் வகையில், 2025 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு தொழிலாளர் தொடர்பான சட்டவிதிகளை கடுமையாக்க கனடா திட்டமிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது. இவ்வாண்டு ஆரம்பத்தில் கனடாவின் மக்கள் தொகை

06

# கேரளாவில் 'நிபா' வைரஸ் தொற்றால் இளைஞன் பலி

**மேலும் 26 பேர் கண்காணிப்பில்**



கேரள மாநிலத்தில் நிபா வைரஸால் பாதிக்கப்பட்ட 24 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவந்த இந்த இளைஞன், சிகிச்சை பலனின்றி இவ்வாறு உயிரிழந்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. அவருடன் நேரடித் தொடர்பிலிருந்த 26 பேர் கேரளாவின்

06

# நகர்வலம்



## வடமத்திய மாகாண சபைக்கு சொந்தமான பெறுமதியான வாகனங்களை காணவில்லை

### விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

வடமத்திய மாகாண சபைக்குச் சொந்தமான 19 வாகனங்கள் மற்றும் 10 மோட்டார் சைக்கிள்கள் காணாமல் போயுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் இந்த வருடம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரியவந்துள்ளது.

பிரதான அமைச்சு, சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு உள்ளிட்ட அலுவலகங்கள் பலவற்றில் இருந்த வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பனவைகளே இவ்வாறு காணாமல் போயுள்ளன.

காணாமல் போயுள்ள 19 வாகனங்களில் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகள் பயன்படுத்திய கெப் வாகனங்கள் மற்றும் ஜீப் வாகனங்கள் என்பன உள்ளடங்குவதுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்களும் காணாமல் போயுள்ளதாக தெரியவந்துள்ளது. மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவுச் சான்றிதழ்களின்படி வடமத்திய மாகாண சபைக்கு சொந்தமான இந்த வாகனங்கள் மாகாண சபையில் காணப்படவில்லை என கண்காணிப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## உம்மு சாவியாவில் மீலாத் தின நிகழ்வுகள்



**ருஸைக் பாரூக்**

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு "மீலாதுன் நபி" தின வைபவம் திங்கட்கிழமை காலை கொழும்பு உம்மு சாவியா பள்ளிவாசலில் அஜ்வாத் அல் பாஸி அரபிக் கல்லூரி அதிபர் மற்றும் உம்மு சாவியா பள்ளிவாசலின் பிரதம இமாம் கலீபதுஷ் ஷாதுலி அஹ்மத் சூபி (மஹ்லரி) தலைமையில் நடைபெற்றது. அங்கு மவ்லித் வைபவம், மார்க்க சொற்பொழிவு மற்றும் துஆ பிரார்த்தனை போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் அஷ் சையத் முர்ஷித் பாவா, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அஹ்சன் மரிக்கார், உம்மு சாவியா பரிபாலன சபைத் தலைவர் தேசபந்து மக்கி ஹாஷிம், சமயக் குழுத் தலைவர் பௌஸான் அன்வர், கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால், பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பேருவளை நகர முஸ்லிம் வியாபாரிகள் ஏற்பாட்டில் மீலாத் தின நிகழ்வு

**பேருவளை விசேட நிருபர்**





பேருவளை நகர முஸ்லிம் வியாபாரிகள் ஒன்றிணைந்து வருடாந்தம் நடாத்தும் மீலாத் விழா மற்றும் மௌலித் மஜ்லிஸ் கடந்த (16) திங்கட்கிழமை காலை பேருவளை நவீன சந்தை கட்டடத் தொகுதியின் மேல் மாடியில் நடைபெற்றது.

பேருவளை ஐக்கிய தேசியக் கட்சி பிரதம அமைப்பாளரும் முன்னாள் நகர பிதாவுமான மஸாஹிம் முஹம்மத் , பேருவளை பொலிஸ் நிலைய குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கயன்த வடகெதர, பேருவளை நகர சபை, பேருவளை பிரதேச செயலக உயர் அதிகாரிகள் பலரும் இங்கு உரை நிகழ்த்தினர்.

முகத்தமுஷ்ஷாதுலி முர்தாஜ் ஸமீம் மற்றும் உலமாக்கள், வர்த்தகர்கள், மத்ரஸா மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இன உறவை கட்டியெழுப்பும் வகையில் ஏனைய சமூகங்களையும் அழைத்து இவ்விழாவை சிறப்பாக நடாத்த வர்த்தகர்கள் மேற்கொண்ட முயற்சியை இங்கு பலரும் பாராட்டினர்.

சிறார்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டதோடு அன்னதானமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக்களம்

ஓய்வு நிலை வங்கி முகாமையாளர் வி.ரி. ராஜேந்திரா தலைமையில் இன்று 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ள இலக்கியக்களம் நிகழ்ச்சியில் "தமிழ்த்திரை இசைப் பாடல்களில் இலக்கியம்" எனும் தலைப்பில் மூத்த ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தா உரை நிகழ்த்தவுள்ளார்.

## வீதி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் அநுராதபுரம் பிரதான வீதியின் 6 ஆம் கட்டை பகுதியில் நேற்று (19) காலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புத்தளம் , கருவலகஸ்வெவ இகலபுளியங்குளம் பகுதியைச் சேர்ந்த முதியன்சேலாகே பிரதீப் ரத்னசிறி எனும் 44 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என புத்தளம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணம் செய்த தனியார் பஸ் ஒன்று , 6 ஆம் கட்டை பகுதியில் பயணித்த உப்பு மூடைகளை ஏற்றிக் கொண்டு சென்ற லொறியுடனும், மற்றுமொரு லொறியுடனும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்போது பஸ்ஸின் மிதிப்பலகையில் நின்றுகொண்டு பயணித்த பயணிகள் இருவர் தவறுதலாக கீழே வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## 1000 பாடசாலைகளில் டிஜிட்டல் மயமாக்கும் திட்டம் அறிமுகம்

**ருஸைக் பாரூக்**



ஆயிஷா ஹபீப் அறக்கட்டளை மற்றும் Perfect Software Technology உடன் இணைந்து கல்வியின் எதிர்காலத்தை டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலம் மாற்றும் நோக்கில் 1000 பாடசாலைகள் டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வு கொழும்பு கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் முன்னாள் பாத்திமா மகளிர் கல்லூரி அதிபர் மற்றும் ஆயிஷா ஹபீப் அறக்கட்டளை நிகழ்ச்சி தலைவி ஷிஹானா சலாம் வரவேற்புரை நிகழ்த்தினார். மேற்படி அறக்கட்டளையின் தலைவர் சட்டத்தரணி ருஷ்டி ஹபீப் 1000 பாடசாலை டிஜிட்டல் மயமாக்கும் திட்டத்தை விளக்கினார். மேலும் இந்தத் திட்டத்தை எதிர்காலத்தில் நாட்டின் பிற பகுதிகளில் அறிமுகப்படுத்த அவர் உத்தேசித்துள்ளது என்றும் கூறினார்.

Perfect Software Technology நிறுவனத்தின் திட்டத் தலைவர் ஜே.எம்.எச். சரூக் இந்த Software மூலம் பாடசாலை நிர்வாகம் அன்றாட நடவடிக்கைகள் சில நொடிகளில் எவ்வாறு இலகுவாக கையாள முடியும் என விளக்கமளித்தார்.

சுமார் 30க்கும் மேற்பட்ட பாடசாலை அதிபர்கள், பிரதி அதிபர்கள், தகவல் தொழில்நுட்ப பொறுப்பாசிரியர்கள், Perfect Software Technology நிறுவனத் தலைவர் எஸ்.எம். கியாஸ், சிரேஷ்ட ஆலோசகர் எம்.ஜே.எம். மன்சூர் (நளீமி), மற்றும் எப். டி. எம். அஸீம் ( நளீமி) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அறக்கட்டளையின் தலைவர் சட்டத்தரணி ருஷ்டி ஹபீப், Perfect Software Technology நிறுவனத்தின் திட்டத் தலைவர் ஜே.எம்.எச். சரூக் ஆகியோர் இணைந்து புதிய Software ஐ அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

## குட்டிமலை ஜெலாலிய்யா ஸாவியாவில் மீலாத் நிகழ்வு

**பேருவளை விசேட நிருபர் )**



மீலாதுன் நபி தினத்தை முன்னிட்டு பேருவளை சீனன்கோட்டை குட்டிமலை ஜெலாலிய்யா தர்கா ஸாவியா மஸ்ஜிதில் ஸுப்ஹான மௌலித் தமாத் மஜ்லிஸ் சிறப்பாக நடைபெற்றது.

தென் இந்தியா மேலப்பாளையம் உஸ்மானிய்யா அரபுக் கல்லூரி முதல்வர் மௌலவி அல் உஸ்தாதா ஹைதர் அலி (மிஸ்பாஹி) விஷேட சொற்பொழிவாற்றினார்.

இறைத்தூதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து கஸீதா மற்றும் கவி பாடும் தென் இந்தியாவைச் சேர்ந்த அஹமத் ஸாலிஹ் பாஹிரியின் கஸீதா நிகழ்வும் இந்நிகழ்வில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## கலைச் சுடர், லங்கா புத்ர, தேசபந்து கௌரவ விருது பெற்றார்

### மாவடிப்பள்ளி மஜினா உமறு லெவ்வை

சர்வதேச மனித உரிமைகள் பேரவையும் சர்வதேச பௌத்த சம்மேளனமும் இணைந்து, 'தேசிய கலை அரண்' அமைப்பின் ஏற்பாட்டில் "வாழும்போதே வாழ்த்துவோம்" என்ற தொனிப் பொருளில் தேசிய கலைஞர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு (16) திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவடிப்பள்ளி மஜினா உமறு லெவ்வை சர்வதேச ரீதியில் இலக்கியத்துறைக்கு வழங்கி வரும் பங்களிப்புகளுக்காக அவரின் திறமையை கௌரவித்து "கலைச் சுடர், லங்கா புத்ர, தேசபந்து" எனும் கௌரவ விருதினை ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்ன பிரிய வழங்கி கௌரவித்தார்.

சர்வதேச மனித உரிமை பேரவையின் தலைவர் பிரதீப் சார்லஸ் இவ்விழாவுக்கு சிறப்பு கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவுக்கான சர்வதேச பௌத்த சம்மேளனத்தையும் இணைத்து அனுசரணை வழங்கினார்.

இவ்விழாவை சுமார் 22 ஆண்டுகளுக்கு மேல் கலை மற்றும் சமூகப் பணிகள் ஆற்றிவரும் "கண்ணகி கலாலயம்" தமது ஐக்கிய சுயதொழில் வியாபாரிகள் சங்கம் கலையரண் இவர்களோடு தேசிய கலை அரண் ஒன்றிணைந்து ஏற்பாடுகளைச் செய்ததுடன் இவ்வமைப்புகளின் தலைவர் ஏ.கே. இளங்கோ மற்றும் உப தலைவர் ஏ. சுரேஷ் அவர்களோடு குழுவினர்களும் இணைந்து இதன் திட்டத்தை சம்பந்தப்பட்டவர்களிடம் முன்வைத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் உச்சமுனை தீவுப்பகுதியில் சட்டவிரோத கிருமி நாசினிகள் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் உச்சமுனை தீவுப் பகுதியில் இருந்து ஒருதொகை சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட கிருமி நாசினிகள் நேற்று (19) கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினர் குறித்த தீவுப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிங்கி இயந்திர படகு ஒன்றினை சோதனை செய்துள்ளனர்.

இதன்போது குறித்த டிங்கி இயந்திர படகில் 11 உர மூடைகளில் அடைக்கப்பட்ட நிலையில் பெரும் எண்ணிக்கையிலான கிருமி நாசினிகள் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த கிருமி நாசினிகள் சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக எடுத்து வரப்பட்டு, இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் விற்பனை செய்யும் நோக்கில் இவ்வாறு எடுத்து வந்திருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

அத்துடன், குறித்த டிங்கி இயந்திர படகில் இருந்த இருவர் சந்தேகத்தின் பெயரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## மாத்தறை மாவட்டத்தில் 30,394 பேர் தபால் மூலம் வாக்களிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்ற 30,882 பேர்களுல் 30,394 பேர் வாக்களித்துள்ளதாக மாத்தறை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும், மாத்தறை மாவட்ட செயலாளருமான கனேஷ அமரசிங்க தெரிவித்தார்.

இதன் பிரகாரம் மாத்தறை மாவட்டத்தில் 98.41% சதவீதம் வாக்குகள் இடப்பட்டுள்ளதாக மாத்தறை மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவிக்கின்றது. மாத்தறை மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிக்க 32,553 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவற்றுள் 1,671 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

தபால் மூலம் வாக்களிக்க கடந்த 4, 5, 6ம் திகதிகள் மற்றும் 11, 12ம் திகதிகள் ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு ஹமீட் அல் ஹுசைனி ஏற்பாட்டில் கிரிக்கட் போட்டி



கொழும்பு ஹமீட் அல் ஹுசைனி கல்லூரி G03 குழு இரண்டாவது முறையாக ஏற்பாடு செய்திருந்த ஏழு பேர் கொண்ட உள்ளக கிரிக்கெட் போட்டி அண்மையில் பொரலஸ்கமுவையில் அமைந்துள்ள Club Fusion இல் நடைபெற்றது.

இப் போட்டியின் ஆரம்ப சுற்றில் பாடசாலையில் பயின்ற 224 பழைய மாணவர்கள் (வீரர்கள்) அடங்கிய 28 அணிகள் பங்குபற்றியதுடன் கேம் சேஞ்சர்ஸ் அணியும், கொழும்பு யூத் அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதிப் பெற்றன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கேம் சேஞ்சர்ஸ் அணி 4 ஓவர்கள் நிறைவில் 24/6 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், கொழும்பு யூத் அணி 3.4 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. இப்போட்டித் தொடரின் சிறந்த வீரருக்கான விருதினை கொழும்பு யூத் அணியின் தலைவர் ரபீக் பெற்றுக்கொண்டார். சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸ்பார்டன் அணியின் நிஸ்ரானும், சிறந்த பந்து வீச்சாளராக கொழும்பு யூத் அணியின் ஜம்ரியும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த போட்டித் தொடருக்கான முக்கிய அனுசரணையை சியாம் டிராவல்ஸ் அண்ட் டூர்ஸ் பிரைவேட் லிமிடெட் வழங்கியது. இப் போட்டிக்கு பிரதம அதிதிகளாக பாடசாலை அதிபர் மொஹமட் ரிஸ்கி மற்றும் அஸாம் அமீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அல்குர்ஆன் மனனப்போட்டியில் வெலிகம பாரி மத்ரஸா மாணவர்கள் வெற்றி

**வெலிகம தினகரன் நிருபர்**



ஈரான் தூதரகத்தினால் கடந்த சனிக்கிழமை (14) அகில இலங்கை ரீதியில் 18 வயதுக்குக் கீழ் நடாத்தப்பட்ட 30 ஜுஸ்உக்கான அல்குர்ஆன் மனனப் போட்டியில் வெலிகம பாரி அரபுக் கல்லூரியின் இரு மாணவர்கள் ஸஅத் அப்துர்ரஹ்மான் (வரகாபொல) முதலாம் இடத்தையும் அப்துல் ஹக்கீம் ஸாகிர் ஹுஸைன் (வெலிகம) இரண்டாம் இடத்தையும் பெற்று தனது மத்ரஸாவுக்கும் மத்ரஸா சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 செப்டெம்பர் 20 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්



# 2024 சிறுபோக நெற் செய்கையில் 2.6 மில்.மெ.தொ.சாதனை அறுவடை

## நாட்டுக்கான அரிசித் தேவை பூர்த்தி

இவ்வாண்டின் சிறுபோக செய்கையினூடாக 2.6 மில்லியன் மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டு சாதனை படைக்கப் பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களத்தின் அறிக்கைகளில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த பெரும்போகத்தில் 3.2 மில்லியன் மெற்றிக்தொன் நெல் அறுவடை மற்றும் சிறுபோகத்தில் 2.6 மில்லியன் மெற்றிக்தொன் நெல் அறுவடை காரணமாக இவ்வாண்டு மொத்த நெல் அறுவடை 5.8 மில்லியன் மெற்றிக்தொன்களாக அதிகரித்துள்ளது.

நாட்டில் மாதாந்த அரிசி தேவை 200,000 மெற்றிக்தொன்னாக உள்ளது. இதன்படி, வருடாந்த அரிசி தேவை சுமார் 2.4 மில்லியன் மெற்றிக் தொன்னாக குறிப்பிடப் பட்டுள்ளது.



ஏனைய போகங்களில் நாட்டின் நெல் அறுவடை 1.6 மில்லியன் மெற்றிக் தொன் அல்லது 02 மில்லியன் மெற்றிக் தொன்களாகவே பதிவாகியுள்ளன. எனினும், இம்முறை 2.6 மில்லியன் மெற்றிக்தொன் நெல் அறுவடை நாட்டின் வருடாந்த அரிசித் தேவையைப் பூர்த்திசெய்ய போதுமானதாக பார்க்கப்படுகின்றது.

மொத்த நெல் அறுவடை 5.8 மில்லியன் மெற்றிக்தொன்னாகும். உற்பத்தி செய்யக் கூடிய அரிசியின் அளவு 03 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கும் அதிகமாகும். இதன் காரணமாக பல வருடங்களின் பின்னர் முதன்முறையாக இவ் வருடம் இலங்கையில் அரிசி மேலதிக விளைச்சலை தந்துள்ளது.

அரசு வழங்கிய மானியம், உரங்களின் விலை குறைப்பு, அதிக விளைச்சல் தரக்கூடிய புதிய விதை இனங்கள் அறிமுகம் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியதால், குறிப்பிட்ட நெல் விளையும் பகுதிகள் அதிக விளைச்சலை பதிவு செய்யமுடிந்தது.

இதன்படி, ஹம்பாந்தோட்டை, உடவளவ, பொலன்னறுவை, இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களில் ஒரு ஹெக்டெயார் நெல் விளைச்சல் இவ் வருடம் 12 மெற்றிக்தொன்னைத் தாண்டியுள்ளதாகவும் இதன் காரணமாக அரிசியை இறக்குமதி செய்யவேண்டிய அவசியமில்லையெனவும் அமைச்சர் தெரிவித்தார். இதேவேளை, இவ் வருடம் ஏற்பட்ட வெள்ளத்தில் 100,000 ஹெக்டேயர் நெற்செய்கை சேதமடைந்திருக்காவிட்டால் இதனை விட உற்பத்தி மேலும் அதிகரித்திருக்குமென அமைச்சர் அமரவீர மேலும் தெரிவித்தார்.

# ஓமந்தையில் கோர விபத்து இருவர் ஸ்தலத்திலேயே பலி





**வவுனியா விசேட நிருபர்**

ஏ9 வீதியின் வவுனியாவில் மோட்டார் சைக்கிளொன்றும் துவிச்சக்கர வண்டியொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

வவுனியா, ஓமந்தை, பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கருகில் நேற்று முன்தினம் (18) மாலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

ஏ9 வீதியூடாக வவுனியா நோக்கி வந்த மோட்டார் சைக்கிளொன்று, அதே வீதியில் பயணித்துக்கொண்டிருந்த துவிச்சக்கர வண்டிடன் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வட்டக்கச்சி, மாயவனூர் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய வீரசிங்கம் ஜனிதரன் மற்றும் துவிச்சக்கர வண்டியில் பயணித்த ஓமந்தைப் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய சண்முகம் யோகராசா ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளதாகவும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் ஓமந்தை பொலிசார் தெரிவித்தனர்.

### ஜனநாயக செயல்முறைக்கு ஆதரவளிப்பதுடன்

# சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை உறுதி செய்ய தயார்

## வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்புக் குழு தெரிவிப்பு

தங்களது கண்காணிப்பினூடாக ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை உறுதி செய்வதற்கும் நாட்டின் ஜனநாயக செயல்முறைக்கு ஆதரவளிப்பதற்கும் தயாரென வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்புக்கமைய, ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக ரஷ்யா, பிலிப்பைன்ஸ், மாலைதீவு, பூட்டான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் உள்ளிட்ட ஆறு நாடுகளின் ஏழு பிரதிநிதிகள் குழு, இலங்கைக்கு விஜயம் செய்துள்ளது.

இந்நிலையில், வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பு குழுவினர் நேற்று (19) கொழும்பில் ஊடக மாநாடொன்றையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது, கண்காணிப்பு குழுவின் தலைவரும் மாலைத்தீவு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருமான ஃபுவாத் தௌஃபீக் குழுவின் பணிகள் தொடர்பாக விளக்கமளித்திருந்தார்.

06



வெகுஜன ஊடகத்துறையில் பயிற்சிகளை வழங்கும் நோக்குடன் லேக்ஹவுஸ் நிறுவனம் ஆரம்பித்துள்ள MEDIA ACADEMY யின் புதிய பிரிவு, நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசத்தினால் நேற்று முன்தினம் (18) ஆரம்பித்து வைக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

### பொலன்னறுவை ஆடை தொழிற்சாலையில்

# காலை உணவு விஷமாகியதில் சுமார் 500 ஊழியர்கள் பாதிப்பு

பொலன்னறுவை, பகமூன பிரதேசத்திலுள்ள பிரதான தனியார் ஆடைத் தொழிற்சாலையொன்றில், நேற்று (19) காலை வழங்கிய உணவு விஷமடைந்தமையினால், 500 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் சுகவீனமடைந்து பகமூன மற்றும் அத்தனகடவல பிரதேச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நோய்வாய்ப்பட்ட தொழிலாளர்கள், ஆடைத் தொழிற்சாலையிலிருந்து பஸ்கள் மற்றும் அம்பியூலன்ஸ்கள் மூலம் பகமூன பிரதேச வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். பகமூன பிரதேச வைத்தியசாலையில் நிலவிய இடப்பற்றாக்குறை காரணமாக அதிகளவானோர் அத்தனகடவல பிரதேச வைத்தியசாலைக்கும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வரும், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களின் நிலை கவலைக்கிடமாக இல்லையென, பகமூன மற்றும் அத்தனகடவல வைத்தியசாலையின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# தேர்தல் நடவடிக்கைகளுக்கு விசேட பஸ், ரயில் சேவைகள்

## 1538 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 1358 பஸ்கள் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

மாவட்டத் தேர்தல் அலுவலகங்கள் ஊடாக விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோளுக்கிணங்க இவ்வாறு பஸ்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.



அதன்படி, தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக 175 பஸ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பண்டுக ஸவர்ணஹங்ச

06

### வடமாகாணத்தில் திட்டமிட்ட

# 32,000 வீட்டு திட்டத்துக்கு நிதி ஒதுக்கீட்டுக்கு அங்கீகாரம்

வடக்கு மாகாணத்தில் சன் பவர் குழுமத்தினால் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள 32 ஆயிரம் வீடுகளுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்ட வங்கியொன்றின் ஊடாக இந்த திட்டத்துக்கான நிதி வழங்கப்படவுள்ளது.

தலா 50 இலட்சம் ரூபா செலவில் முற்றுமுழுதாக இலவசமாக பயனாளர்களுக்கு இந்த வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன.

வீட்டுத் திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ள சன் பவர் குழுமத்தினால் சுமார் நான்காயிரம் ஏக்கர் காணியில் சூரிய மின்கல பூங்கா (Solar Park) நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான முழுமையான காணி விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை கடன் விடுவிப்பு தொடர்பான சான்றுபடுத்தல் பெறப்படவுள்ளது. இந்த இரண்டு செயற்பாடுகளும் இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இலவச வீட்டு திட்டத்துக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

06

# அதிவேக நெடுஞ்சாலையில் விபத்துக்குள்ளான பாரவூர்தி



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், கொள்கலன் பாரவூர்தியொன்று வீதியின் நடுவே கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து, நேற்று (19) காலை பின்னதுவைக்கும் பத்தேகமவுக்குமிடையில் இடம்பெற்றுள்ளது.

வாகனத்தின் பின்னாலுள்ள இரண்டு டயர்கள் வெடித்துள்ள நிலையில், சாரதியால் வாகனத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமையினால் இந்த கொள்கலன் பாரவூர்தி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, கொழும்பு நோக்கிச் செல்லும் இரண்டு பாதைகளில் ஒரு பாதை தடைப்பட்டதுடன், மற்றொரு பாதையில் வாகனப் போக்குவரத்து நடைபெற்றதாகவும் விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் பதிவாகவில்லை எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

### வானிலையில் எதிர்பாராத மாற்றம்

# அனர்த்தங்களை எதிர்கொள்ள தேர்தல்கள் ஆணைக்குழு தயார்

## வானிலை குறித்து தேர்தல் ஆணைக்குழு வெளியிட்ட அறிவிப்பு

ஜனாதிபதி தேர்தல் வாக்குப்பதிவு காலத்தின்போது எதிர்பாராத வானிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அனர்த்த நிலைமைகள் ஏற்படக்கூடுமென சந்தேகிக்கப்படும் மாவட்டங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

இன்று 20ஆம் திகதி முதல் மூன்று மணி நேரத்துக்கு ஒருமுறை வளிமண்டலவியல் திணைக்களத்திடமிருந்து வானிலை அறிக்கை பெறப்படுமென அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அனர்த்தங்கள் காரணமாக ஜனாதிபதி தேர்தலுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளை நிர்வகிப்பதற்கான விசேட கூட்டு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

இதவேளை, இன்று(20) முதல் எதிர்வரும் (22)ஆம் திகதி வரை இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெடிப்பொருட்களுடன் 4 சந்தேகநபர்கள் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெடிப்பொருட்களுடன் முச்சக்கரவண்டியொன்றில் பயணித்துக்கொண்டிருந்த நான்கு சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாவுல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, நாவுல பிபில பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போது, இந்த நான்கு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

38, 49, 50 மற்றும் 65 வயதுகளையுடைய கட்டுகஸ்தோட்டை, கம்பளை, எலஹெர மற்றும் உடலகவின்ன பகுதிகளை

06

நாம் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய இரகசியம்!
தேசிய ரூபவாஹினியின் தேர்தல் ஒளிபரப்பை நாளை இரவு 9.35 மணிக்கு கட்டாயம் பாருங்கள். இந்த வாய்ப்பை தவறவிடாதீர்கள்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 04ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 16

## குறள் தரும் சிந்தனை



அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து

*தீய வழியில் சென்றால் துன்பம் ஏற்படுமென் பதை அறிந்தவர்கள் பொறாமையினால் தீச்செயல்களில் ஈ.டுபடமாட்டார்கள்.*

# அமைதியான தேர்தலுக்கு ஏற்பாடுகள் பூர்த்தி

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தலை அமைதியாகவும் நேர்மையாகவும் நடாத்துவதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது. இத்தேர்தலின் நிமித்தம் நாளை காலை 7.00 முதல் மாலை 4.00 வரை வாக்களிப்பு இடம் பெற உள்ளது.

இத்தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் வாக்களிப்பதற்கென பாடசாலைகள், மத வழிபாட்டு தளங்கள் உட்பட நாடெங்கிலும் 13 ஆயிரத்து 421 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதன் நிமித்தம் நாடெங்கிலுமுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று 20 ஆம் திகதி விடுமுறை அளிக்கப்பட்டு வாக்குசாவடிகள் அமைப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

இந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு இன்று காலை முதல் வாக்கு பெட்டிகளும் கடமைக்கான உத்தியோகத்தர்களும் மாவட்ட மட்ட தேர்தல் அதிகாரிகளால் அனுப்பி வைக்கப்பட உள்ளனர். அத்தோடு வாக்களிப்பு நிறைவுற்றதும் வாக்குகளை எண்ணவென 1713 மத்திய நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேநேரம் இத்தேர்தல் பாதுகாப்பு கடமையில் 63 ஆயிரம் பொலிஸாரும் 10 ஆயிரம் சிவில் பாதுகாப்பு பிரிவினரும் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இவர்களுக்கு மேலதிகமாக 1500 விஷேட அதிரடிப்படையினரும் பணிக்கு அமர்த்தப்பட இருக்கின்றனர். அதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களப் பேச்சாளரான பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ தெரிவித்திருக்கிறார்.

சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கும் ஜனாதிபதி தேர்தல் சட்டங்களை உச்சபட்சம் நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேநேரம் தேர்தல் தினத்தில் வாக்களிப்பு நிலையங்களில் வன்முறைகளை மேற்கொள்ளவோ, முறைகேடுகளில் ஈடுபட அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுமாயின் அத்தகைய வாக்குச்சாவடிகளின் வாக்களிப்பு இரத்து செய்யப்பட்டு பின்னர் மீண்டும் அந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்களிப்பு நடாத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் தேர்தலின் பின்னர் வன்முறைகள் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான மத்திய நிலையம் குறிப்பிட்டிருக்கிறது.

இந்த சூழலில் அமெரிக்கா, 'ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில் நாட்டில் பாதுகாப்பு சிக்கல்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகிறது. அதனால் இலங்கைக்கு பயணம் செய்வது குறித்து தம் பிரஜைகளுக்கு முன்னறிவித்தலை விடுத்திருக்கிறது.

மேலும் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் வன்முறைகள் ஏற்படலாம் என்று ஏற்கனவே சில தரப்புகளும் தெரிவித்தும் உள்ளன.

இவ்வாறான பின்புலத்தில் நாட்டின் சட்டம் ஒழுங்கை அச்சொட்டாக நடைமுறைப்படுத்துவதில் பொலிஸாரும் முப்படையினரும் உச்ச பட்ச கவனம் எடுத்துக் கொண்டுள்ளனர். சட்டத்திற்கு முன் அனைத்து தரப்பினரும் சமம். அனைவரும் சட்டம் ஒழுங்கை மதித்து நடக்க வேண்டுமேயொழிய சட்டத்தைக் கையில் எடுக்க எவருக்கும் முயற்சிக்கலாகாது. அனைத்து மக்களது எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.அதனால் ஜனாதிபதி தேர்தலை அமைதியாகவும் நேர்மையாகவும் நடாத்த ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அ

அந்த வகையில் தேர்தல் தினத்தன்றும் அதன் பின்னரான காலப்பகுதியிலும் பொருளாதார மத்திய நிலையங்கள், மின்னுற்பத்தி நிலையங்கள், நீர்த்தேக்கங்கள் உள்ளிட்ட முக்கிய கேந்திர நிலையங்களின் பாதுகாப்புக்கு இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இதன் நிமித்தம் 3000 படையினர் பணியில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதியில் நாடெங்கிலும் 269 வீதிச் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. பொலிஸாரையும் விஷேட அதிரடிப்படையினரையும் உள்ளடக்கி இச்சாவடிகள் அமைக்கப்படும். அவற்றில் 3250 உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட இருக்கின்றனர். சந்தேகத்திற்கிடமான வாகனங்களும் அவற்றில் பயணிப்பவர்களும் இத்தகைய சோதனைச் சாவடிகளில் சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

இவ்வாறு இந்த ஜனாதிபதித் தேர்தலை அமைதியாகவும் நேர்மையாகவும் நடாத்துவதற்கென ஏற்பாடுகள் விரிவாக முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனால் இந்த ஏற்பாடுகளுக்கு முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். இதனை ஒவ்வொரு அபேட்சகரும் அனைத்து வாக்காளர்களும் தங்கள் பொறுப்பாகக் கருதி செயற்பட வேண்டும். அப்போது தேர்தல் அமைதியாக நடைபெறும். இதற்காக ஒவ்வொரு வாக்காளரும் ஒத்துழைப்பு நல்குவது இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# குருத்துவப் பணியில் பொன்விழா காணும் அருட்பணி அந்தனி லீயோ அடிகளார்

குருத்துவ வாழ்வில் ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்திசெய்து பொன்விழாக் கொண்டாடுகின்ற மட்டக்களப்பு மறைமாவட்ட சிரேஷ்ட குருக்களுள் ஒருவராகிய அருட்திரு அந்தனி லீயோ அடிகளார் சிறிய குருமடத்திற்கு அனுப்பப்படுவதற்கான அனைத்து ஆயத்த முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இன்று திருகோணமலை மறைமாவட்டத்தின் குருவாகத் திகழும் நான் மறைமாவட்டத் திருஅவையோடு இணைந்து அவரை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அருட்பணி லீயோ அடிகளார் மட்டக்களப்பு புளியந்தீவு காலஞ்சென்றவர்களான அன்ரனிப்பிள்ளை மற்றும் பியற்றிஸ் செலர் தம்பதியரின் புதல்வராவார்.

தனது முன்பள்ளி கல்வியை புளியந்தீவு புனித சிசிலியா கல்லூரியில் அமைந்துள்ள பாலர் பாடசாலையில் கற்றார். அதன் பின்னர் 1 – 5 வகுப்பு வரையிலான கல்வியை வந்தாறுமூலை கனிஷ்ட வித்தியாலயத்தில் கற்றார். அதன் பின்னர் ஆண்டு 6 – 13ஆம் வகுப்பு வரையிலான கல்வியை மட்டக்களப்பு புளியந்தீவு புனித மிக்கேல் கல்லூரியில் கற்றார்.

இக்கால கட்டத்தில் இளைஞன் லீயோவின் ஆன்மீக வழிகாட்டியாக மட்டக்களப்பு மண்ணில் வாழ்ந்த புகழ்பூத்த அமெரிக்க நாட்டு இயேசுசபைத் துறவி மறைந்த அருட்பணி ஜோன் ஹரல்ட் வெபர் அடிகளார் பணியாற்றினார்.



குருத்துவ உருவாக்கலுக்காக குருமடத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட லீயோ அடிகளாரை ஆயர் கிளேனி ஆண்டகை 1965ஆம் ஆண்டில் இந்தியாவின் கர்நாடக மாநில மேற்குக் கரையிலுள்ள மங்களூர் இயேசுசபை குருமடத்திற்கு பயிற்சிக்காக அனுப்பி வைத்தார். மெய்யியல் மற்றும் இறையியல் கற்கைகளை பூர்த்தி செய்து, அங்கேயே தியாக்கோன் பட்டத்தினையும் பெற்று நாடு திரும்பினார்.

குருவாகி முதற் பங்குத் தந்தையாக அருட்பணி அன்ரனி லீயோ அடிகளாரை ஏற்றுக்கொண்ட பங்கு கல்முனை மறைக்கோட்டத்தின் சொறிக்கல்முனையாகும். 1977ஆம் ஆண்டில் அப்பணியினை பொறுப்பேற்றுக் கொண்டார்.

1978ஆம் ஆண்டு சூறாவளிக்கு பின்னர் திருகோணமலை மறைக்கோட்டத்தின் மூதூர்ப் பங்கிற்கு அனுப்பப்பட்டார். மூதூர்ப் பங்கில் பணியாற்றுகின்ற காலத்தில், திருகோணமலை சமூக சேவைகள் நிலையத்தில் அமையப்பெற்றிருந்த திருகோணமலை மாவட்டத்திற்கான எகெட்கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குனராக 1979ஆம் ஆண்டில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

2012ஆம் ஆண்டில் திருகோணமலை மறைமாவட்டத்திலிருந்து புதிய மட்டக்களப்பு மறைமாவட்டம் உதயமானபோது, தந்தையவர்கள் தனது பிறந்த இடமாகிய மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்கு திரும்பினார். அவர் கல்முனை திரு இருதயநாதர் ஆலயத்தின் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டார். அங்கு ஐந்து ஆண்டுகள் பணியாற்றினார். பின்பு பொத்துவில் புனித அந்தோனியார் ஆலயமானது (கோமாரி புனித மிக்கேல் ஆலயம் உள்ளடங்கலாக) திருக்கோவில் புனித சூசையப்பர் ஆலயப் பங்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு புதிய பங்காக 2018ஆம் ஆண்டில் பிரகடனம் செய்யப்பட்டது. அவ்வாறு புதிதாக உருவாக்கப்பட்ட பங்கின் முதற் பங்குத்தந்தையாக கடமையேற்று மூன்று ஆண்டுகள் பணியாற்றினார். 2021ஆம் ஆண்டிலிருந்து சத்துருக்கொண்டான்'அன்பகம்'(ர்ழஅந ழக டுழஎந ஒய்வுநிலை குருக்களுக்கான வதிவிடம்) பொறுப்பாளராகவும், இறைஇரக்கத் திருத்தலத்தின் பரிபாலகராகவும் நியமிக்கப்பட்டார். தற்போது அப்பணியிலிருந்து ஓய்வுபெற்று அங்கேயே தங்கி தனது ஓய்வு காலத்தை கழித்து வருகின்றார்.

ஐம்பது வருடங்களைக் குருத்துவ வாழ்வில் பூர்த்தி செய்துள்ள நிறைவில் மகிழ்கின்ற அருட்பணி அந்தனி லீயோ அடிகளாரால் நாமும், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மறைமாவட்டங்களும் சமூகங்களும் வாழ்த்துவோம்.

அருட்பணி.
**அ.நவரெத்தினம்** (நவாஜி)...
திருகோணமலை மறைமாவட்டம்

# மனித வாழ்வின் முன்னேற்றத்துக்கு தடையாக அமையும் பயம், பதற்றம்!

## வெற்றி கொள்வது எவ்வாறு?

பயமும் பதற்றமும் எமது முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தும். அதை நாம் எவ்வாறாவது சமாளிப்பது அவசியம்.

பயம் மற்றும் பதற்றத்தை போக்க முதலில் அதைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும். உங்கள் பயத்தை பற்றி நீங்கள் அறிந்துகொள்வது அதை எவ்வாறு தடுப்பது அல்லது எவ்வாறு அதை சமாளிப்பது என்பதை அறிந்துகொள்ள உங்களுக்கு உதவும்.

எப்போதெல்லாம் பய உணர்வு உங்களுக்கு ஏற்படுகிறது? அது எங்கிருந்து தொடங்குகிறது? என்ற மூலத்தை நீங்கள் கண்டறியும்போது உங்கள் பயத்தின் pattern என்ன என்பதை உங்களால் காண முடியும்.

சில நேரங்களில் பயத்தையும்,பதற்றத்தையும் அனுபவிக்கும் போது, நம் உணர்ச்சிகள் மற்றும் எண்ணங்களின் மீது நமக்குக் கட்டுப்பாடு இருக்கிறது என்பதை நாம் மறந்து விடுகிறோம். எப்போதும் நாம் ஏதாவது தவறாக நடந்து விடுமோ என்று எதிர்மறையாக எண்ணி அஞ்சுகிறோம். ஆனால் பெரும்பாலும் அவ்வாறு நடப்பதில்லை.

நீங்கள் எதிர்கொள்ளப்போகும் ஒரு சூழ்நிலை உங்களுக்கு பயத்தையும் பதற்றத்தையும் தருகிறது என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். எதிர்மறையாக சிந்திப்பதை விட்டுவிட்டு நீங்கள் அந்த சூழ்நிலையை சந்தித்து, அதைச் சமாளித்து அதில் வெற்றி அடைவது போல எண்ணிப் பாருங்கள், உங்களது பயமும் பதற்றமும் உங்களை விட்டு விலகிவிடும். நம்பிக்கை பிறக்கும்.

பயம் மற்றும் பதற்றத்தை உணரும் போது உங்கள் உணர்ச்சிகளுடன் சிறிது நேரம் உட்கார முயற்சி செய்யுங்கள். அமைதியாக உட்காந்து தற்போதைய தருணத்தில் கவனம் செலுத்துங்கள். நீங்கள் நிகழ்காலத்தில் கவனம் செலுத்தும் போது வருங்காலம் குறித்த பயமும் பதற்றமும் குறைவதைக் காண்பீர்கள்.



பயமும் பதற்றமும் உங்களுக்கு கிடைக்கின்ற நல்ல வாய்ப்புகளை உங்களிடம் இருந்து பறிக்கின்றன. பயத்தை சமாளிப்பதற்கான ஒரே வழி அதை எதிர்கொண்டுமுன்னேறுவதுதான். உங்களை பயமுறுத்தும் அனைத்தையும் எதிர்கொள்ளுங்கள், முதலில் சிறிய பயங்களை வெற்றி கொள்ளுங்கள்.

ஒருவரிடம் சென்று பேச சிலருக்குப் பயமாக இருக்கலாம், நாம் சரியாக வேலை செய்தாலும் அலுவலக கூட்டத்தில் கலந்து கொள்ள பதற்றமாக இருக்கலாம், அல்லது சில நேரங்களில் மாற்றத்தைக' கண்டு நாம் அஞ்சலாம், இவ்வாறு உங்கள் சிறிய பயங்களை கண்டறிந்து அவற்றை துணிந்து எதிர்கொள்ளுங்கள். இன்னும் சிலருக்கு அவர்களது துறை சார்ந்த பயம் எப்போதும் இருக்கும், அதற்குக் காரணம் அந்த துறை சார்ந்த அறிவு அவர்களிடம் குறைவாக இருப்பதுதான். நாம் அதிகம் கற்றுக்கொள்ள கற்றுக்கொள்ள துறைசார் அறிவு நம்மிடம் அதிகரிக்கும், பயமும் பதற்றமும் விலகும். ஆழ்ந்த சுவாசம் உங்கள் எண்ணங்களை ஒருமுகப்படுத்த உதவும். மீண்டும் உங்கள் எண்ணங்களின் மீது கவனம் செலுத்த உதவும். நீங்கள் பதற்றத்தில் இருக்கும்போது உங்கள் இதயத்துடிப்பும், சுவாசமும் மிக வேகமாக இருக்கும், உங்களை ஆசுவாசப்படுத்திக்கொள்ள இந்த ஆழ்ந்த சுவாசப் பயிற்சி கைகொடுக்கும்.

நீங்கள் சுவாசப் பயிற்சி செய்யும் போது அது உங்களை அமைதிப்படுத்தும். இது உங்கள் பதற்றமான சூழ்நிலையை சமாளிக்க உதவும். இந்த ஐந்து உத்திகளையும் முயற்சி செய்து பாருங்கள். பயத்தையும் பதற்றத்தையும் வெல்வதற்கு முயற்சியுங்கள்.

**ந.பாலகிருஷ்ணன்...**

# இஸ்ரேல் மீது ஆயுதத்தடை விதிக்கும் பல நாடுகள்!




உலக நாடுகள் பலவும் இஸ்ரேலுக்கு ஆயுதத் தடை விதித்து வரும் வேளையில், போர்க்குற்ற விசாரணை சாத்தியமா எனும் கேள்வியும் எழுந்துள்ளது. ஆயுதங்கள் வழங்க பல நாடுகள் மறுப்புத் தெரிவித்தாலும் இஸ்ரேலின் போர்க்குணாம்சம் இன்னமும் மாறவில்லை.

இஸ்ரேலுக்கு ஆயுதம் விற்பனை செய்யும் முடிவில் இருந்து விலகியுள்ள நாடுகளின் வரிசையில் தற்போது பிரித்தானியாவும் இணைந்துள்ளது. காசா போரின் பின்னர் நீண்ட காலம் முன்னெடுத்த ஆய்வின் முடிவில் தற்போது இந்த முடிவை எடுத்துள்ளதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் லாம்மி அறிவித்துள்ளார்.

இதனைப் போலவே, கடந்த ஜனவரி மாதம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்ட இத்தாலி, புதிதாக இஸ்ரேலுக்கு எந்த ஆயுத ஒப்பந்தமும் முன்னெடுக்கப்படாது, ஆனால் ஒக்டோபர் 7 ஆம் திகதிக்கு முன்னர் ஏற்படுத்திய ஒப்பந்தங்கள் அமுலில் இருக்கும் எனக் குறிப்பிட்டது.

பல வருடங்களாக இஸ்ரேலுக்கு இராணுவ உபகரணங்களை வழங்கும் மூன்றாவது பெரிய நாடாக இத்தாலி உள்ளது. தற்போது ஸ்பெயின் நாடும் இஸ்ரேலுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதில்லை என ஜனவரி மாதம் அறிவித்தது. ஸ்பெயின் அரசு வெளியிட்ட அறிக்கையில், இஸ்ரேலுக்கு ஆயுதங்களுடன் செல்லும் கப்பல்களும் தங்கள் துறைமுகத்தை பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்க முடியாது எனவும் அறிவித்தது.

இவ்வருட மார்ச் மாதத்தில் இருந்து கனடாவும் இஸ்ரேலுக்கு ஆயுதம் விற்பனை செய்வதை நிறுத்தி வைத்துள்ளது. இஸ்ரேலுக்கு ஆயுதம் விற்பனை செய்வதில் கடுமையான கட்டுப்பாடுகளை பெல்ஜியம் அரசாங்கம் விதித்துள்ளது. அத்துடன் ஐரோப்பிய நாடுகள் இஸ்ரேலுக்கு ஆயுதம் விற்பனை செய்வதை தடை செய்ய வேண்டும் என்றும் அது கோரி வருகிறது.

பெப்ரவரி மாதத்தில் இருந்தே இஸ்ரேலுக்கு ஆயுதம் விற்பதில்லை என நெதர்லாந்து முடிவெடுத்துள்ளது. ஆனால் உதிரிப்பாகங்களை அமெரிக்காவுக்கு விற்பனை செய்து வருகிறது. அவற்றை அமெரிக்கா இஸ்ரேலுக்கு வழங்கி வருகிறது.

கடந்த 18 மே 2024இல் இஸ்ரேலுக்கு ஆயுதங்களுடன் சென்ற சென்னை கப்பலுக்கு ஸ்பெயின் அனுமதி மறுப்பும் தெரிவித்தது. இந்த நிலையில் அமெரிக்கா, ஜேர்மனி மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் இஸ்ரேலுக்கு தாராளமாக ஆயுதங்கள் வழங்கி வருகின்றன.

## போர்க்குற்ற விசாரணை சாத்தியமா?

ஆபிரிக்க நாடான நமீபியா அண்மையில் அதிரடி நடவடிக்கையாக, இஸ்ரேல் கப்பலுக்கு அனுமதி மறுப்பு தெரிவித்தது. வெடி மருந்துகளுடன் வந்த இஸ்ரேல் ஆயுத கப்பலை நங்கூர மிட அனுமதி மறுத்த நமீபியா பின்தங்கிய நாடாக இருந்தாலும் துணிச்சல் முடிவு என்றே கருதப் படுகிறது.

காசாவில் நடைபெறும் போர்க்குற்றங்களை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக நமீபியா நீதித்துறை பெண் அமைச்சர் இவோன் தௌசாப் (*Yvonne Dausab*) குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நமீபியா பின்தங்கிய நாடாகும். இருப்பினும் துணிச்சலுடன் அமெரிக்காவின் கூட்டாளியான இஸ்ரேலுக்கு கறுப்புக்கொடி காட்டியுள்ளது.




இஸ்ரேலுக்கு நிலக்கரி ஏற்றுமதி செய்வதை தென்அமெரிக்க நாடான கொலம்பியா நிறுத்தியுள்ளது. பல தென் அமெரிக்க நாடுகள் இஸ்ரேலுடனான தூதரக உறவுகளை துண்டித்துள்ளன.

ஆனால் சவுதி, ஐக்கிய அரபு இராச்சியம் , எகிப்து, ஜோர்டான் உள்ளிட்ட முஸ்லிம் ஆட்சியாளர்கள் தொடர்ந்து இஸ்ரேலுடன் உறவுகளை பராமரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலுக்கு ஆயுத விற்பனையை இங்கிலாந்து நிறுத்தியதை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன. பிரித்தானிய அரசாங்கம் பலஸ்தீன பொதுமக்களின் இறப்பு எண்ணிக்கை மற்றும் அழிவின் அளவு ஆகியவை பெரும் கவலையை ஏற்படுத்தியதாக தெரிவித்துள்ளது.

பிரிட்டன் இஸ்ரேலுடன் பல ஏற்றுமதி உரிமங்களைக் கொண்டுள்ளது. இது நாட்டின் மொத்த இறக்குமதியில் ஒரு சிறிய அளவையே குறிக்கிறது.

தற்போது இஸ்ரேலின் பிரதமர் உள்நாட்டு எதிர்ப்புகள் மற்றும் வேலைநிறுத்தங்களால் அதிகரித்த அழுத்தத்தை எதிர்கொள்வதைப் போலவே, இந்தத் தடை முடிவு பெஞ்சமின் நெதன்யாகுவின் நிர்வாகத்தை பாரியளவில் கோபப் படுத்தும்.

இஸ்ரேலுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதை கனடா நிறுத்தக் கோருவதாக கூறியுள்ளது. கனடா முழுவதிலும் உள்ள பல ஆயுதக் கம்பெனிகள் காசாவில் நடந்த படுகொலைகள் மற்றும் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்களைக் கொன்று குவித்த ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தொழில்நுட்பத்தை இஸ்ரேலுக்கு விற்பதன் மூலம் பாரிய இலாபத்தை ஈட்டியிருக்கின்றன.

தொடர்ந்தும் இஸ்ரேலிய இராணுவம் காசாவில் பொது மக்கள் சுற்றுப்புறங்கள் மற்றும் உள்கட்டமைப்புகள் மீது கண்மூடித்தனமாக குண்டுவீசி வருகிறது. 42,000 பேரைக் கொன்றதுடன், அவர்களில் பாதி குழந்தைகள் ஆவர். உணவு மற்றும் எரிபொருள் தடுக்கப்பட்டதுடன், கற்பனை செய்ய முடியாத பேரழிவை பலஸ்தீனம் கண்டுள்ளது. அத்துடன் பாதுகாப்பான பிரதேசங்களில் குண்டுகள் வீசப்பட்டதால், சுமா 2 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

கொடும் போரை நிறுத்த கனேடிய அரசாங்கம் இறுதியாக போர்நிறுத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்த போதிலும், காசா மீதான இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதல்களை கனடா தொடர்ந்து ஆதரிக்கிறது என்பதே உண்மையாகும்.

உடனடியாக இஸ்ரேல் மீது ஆயுதத்தடையை விதிக்க கனடாவை பல பொதுஅமைப்புக்கள் கேட்டுக்கொண்டுள்ளன. இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் செல்வதைத் துண்டித்து, ஆயுதத் தடையை அமுல்படுத்துவதன் மூலம் போர்நிறுத்தத்திற்கான அழைப்பை கனடா உண்மையானதாக மாற்ற வேண்டிய நேரம் இதுவென பொதுஅமைப்புக்கள் கேட்டுக் கொண்டுள்ளன.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# ஸீராவின் ஒளியில் பெண்கள்



இஸ்லாத்தின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் முழு மனித வாழ்வுக்கும் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியுள்ளார்கள். அன்னாரின் வாழ்வும் வழிகாட்டல்களும் உலகம் இருக்கும் வரையும் உயிரோட்டம் மிக்கவையாகவும் எல்லாக் காலங்களுக்கும் நடைமுறைச் சாத்தியமானவையும் இருக்கக்கூடியவையாகும்.

அந்த வகையில் மனிதர்களில் ஒரு பிரதான அங்கமாக விளங்கும் பெண்கள் தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் வழங்கியுள்ள போதனைகள், அறிவுரைகள் மாத்திரமல்லாமல் அவர்களுடன் நடந்து கொண்டுள்ள ஒழுங்குமே முழு உலகிற்கும் முன்மாதிரியாகும்.

நபி (ஸல்) அவர்களுக்கு ஒரு சிறிய பேத்தி பிள்ளை இருந்தாள். அவளது பெயர் உமாமா (ரழி) என்பதாகும். இவர் ஸைனப் (ரழி) அவர்களின் மகளாவார். தந்தை பெயர் அபுல் ஆஸ் இப்னு அல் ரபீஃ (ரழி) என்பதாகும். நபியவர்கள் தனது பேத்தியை மிகக் கடுமையாக நேசித்தார்கள். தொழுகையில் அவரை சுமந்து கொண்டு தொழுவார்கள். ஸூஜூத் செய்யும் போது அவரைக் கீழே வைப்பார்கள். நிலைக்குவரும் போது சுமந்து கொள்வார்கள். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

ஆனால் நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்தில் பெண் பிள்ளைகள் மதிக்கப்படவில்லை. இருந்தும் நபியவர்களின் செயல்பாடு ஜாஹிலிய்ய மரபுக்கு முரணாக அமைந்திருந்தது. இதனூடாக உலகிற்கும் அரபு சமூகத்திற்கும் பெண்கள் மதிக்கப்பட வேண்டும் என்ற செய்தியை அன்னார் வழங்கினார்.

இதுமாத்திரமன்றி பெண் பிள்ளைகள் கண்ணியப்படுத்தப்படல் வேண்டும். அவர்கள் சீராக வளர்க்கப்படல் வேண்டும். எதிர்காலத்தை உருவாக்கக் கூடியவர்களாகவும் நாகரிகத்தைக் கட்டியெழுப்புபவர்களாகவும் ஆளுமையுள்ளவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும் என்ற விடயத்திலும் நபி (ஸல்) அவர்கள் கவனம் செலுத்தினார்கள். இப்படி வளர்க்கின்றவர்கள் மறுமையில் தன்னோடு நெருக்கமாக இருப்பதாகக் குறிப்பிட்டார்கள்.

'யார் இரு பெண் பிள்ளைகளை அவர்கள் பருவ வயதை அடையும் வரை (செலவளித்து, சிறப்பாக) வளர்க்கிறாரோ அவரும் நானும் இவ்வாறு இருப்போம் என்று தனது இரு விரல்களையும் இணைத்துக் காட்டினார்கள். (ஆதாரம்: முஸ்லிம், திர்மிதி)

ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் ஆன்மாவும், அறிவும், உணர்வுகளும் உள்ளன. இந்த உலகம் ஆண்களுக்கு மாத்திரம் உரியதல்ல. பெண்களுக்கும் இதில் உரிமையுண்டு. மார்க்க விடயங்களில் ஆண்கள் இஜ்திஹாத் என்ற ஆய்வு செய்வது போன்று பெண்களும் முயற்சிக்கலாம். அடிப்படையில் இருவரும் சமமானவர்கள் தான். சில விதிவிலக்கான விடயங்களில் தான் அவர்களுக்கும் ஆண்களுக்குமிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஆண்கள் பலர் படுகொலை செய்யப்பட்டு எஞ்சியிருந்தவர்கள் கைது செய்யப்பட்டு படுதோல்வி அடைந்திருந்த ஜெர்மனியைக் கட்டியெழுப்பியவர்கள் பெண்கள் தான்.

'ஆண்கள் பெண்களுக்கு சமமானவர்கள்' என்ற நபிமொழியும் இதனையே குறிக்கிறது. (ஆதாரம்: அபூதாவூத், திர்மிதி)

சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக பெண்களின் பங்களிப்பை நபியவர்கள் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் சமூக செயற்பாடுகளிலிருந்து ஓரங்கட்டப்பட்டு இருக்கவில்லை. அவர்கள் கற்றுக்கொண்டார்கள், கற்பித்தார்கள், செயல்பட்டார்கள். அவர்கள் உழைப்பதற்கும் செலவு செய்வதற்கும் கணவனைத் தெரிவு செய்வதற்கும் கணவனிடமிருந்து பிரிந்து வாழ்வதற்கும் மார்க்க, சமூக, அரசியல் விவகாரங்களில் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்கும் உரிமை பெற்றிருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்களின் மனைவியான கதீஜா (ரழி) அவர்கள் நபியவர்களின் இறைத்தூதை முதலாவது ஏற்று, நபியவர்களுக்கு ஆறுதல் கூறி, வரகத் இப்னு நவ்பல் என்ற பழைய வேதங்களைக் கற்றிருந்த ஒரு அறிஞரிடம் அழைத்துச் சென்று உறுதிப்படுத்தினார். இது இன்றைய மொழியில் 'உளவியல் முதலுதவி' அல்லது ஆற்றுப்படுத்தல் ஆகும். அத்தோடு தனது செல்வத்தை மார்க்கத்தினதும் சமூகத்தினதும் வளர்ச்சிக்காக செலவு செய்த ஒரு செல்வந்தப் பெண்ணும் ஆவார் அவர்.

ஆயிஷா (ரழி) அவர்கள் பல ஹதீஸ்களைக் கற்பித்த ஆசிரியராகவும் ஒரு வைத்தியராகவும் கவிதைகளை எழுதிய கவிதாயினியாகவும் விளங்கினார்கள். அவர் சுமார் 2210 ஹதீஸ்களை அறிவித்துள்ளார்கள். 350 மாணவர்கள் அவரிடம் கல்வி கற்றுள்ளார்கள். தந்தை அபூபக்கர் (ரழி), உமர் (ரழி), அபூ ஹூரைரா (ரழி), அபூ மூஸா அல் அஷ்அரீ (ரழி), அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி), அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி), போன்ற பெரிய ஸஹாபாக்கள் அவரிடம் ஹதீஸ்களைக் கற்றுள்ளார்கள். சொத்துக்களைப் பங்கீடு செய்யும் 'மீராஸ்' என்ற கலையிலும் அவருக்கு நல்ல தெளிவு இருந்தது.

எனவே மூத்த ஸஹாபாக்கள் அவரிடம் சென்று அது பற்றிக் கேட்டறிந்து கொண்டார்கள் என்று மஸ்ரூக் (ரஹ்) என்ற தாபிஈ குறிப்பிடுகிறார். அத்தோடு அவர் மனிதர்களில் அதிகம் சிறந்தவராகவும் விளக்கமும் அறிவும் உள்ளவராகவும் பெரும்பான்மையினர் கருதினார்கள் என்று அதாஃ இப்னு அபீ ரபாஹ் (ரஹ்) கருதுகின்றார்கள். ஆயிஷா (ரழி) அவர்களின் மிக நெருக்கமான மாணவனாகிய உர்வா இப்னு ஸூபைர் ரழி) அவர்கள் 'ஆயிஷா (ரழி) அவர்களை விட மிக சிறப்பான மார்க்க விளக்கம், மருத்துவ தெளிவு,கவியாற்றல் உள்ள ஒருவரை நான் காணவில்லை' என்று குறிப்பிடுகிறார்.

நபி (ஸல்) அவர்களது காலத்தில் ஸஹாபாப் பெண்கள் விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார்கள். 'எனக்கு ஸூபைர் இப்னுல் அவாம் (ரழி) அவர்களைத் திருமணம் முடித்து வைத்திருந்தார்கள். அவருக்கு விவசாய நிலங்களோ அடிமைகளோ இருக்கவில்லை. மாற்றமாக நீர் இழுக்கக்கூடிய ஒரு ஒட்டகையும் ஒரு குதிரையும் இருந்தது. நான் குதிரைக்குத் தீன் கொடுப்பேன், நீர் புகட்டுவேன், பெரிய பாத்திரங்களையும் வாளிகளையும் செய்வதற்காக பதனிடப்பட்ட தோலைத் தைப்பேன், ரொட்டி சுடுவதற்காக மாவைப் பிசைவேன். நான் சிறப்பாக மாவு பிசைய மாட்டேன். எனவே அன்ஸாரி அடிமைப் பெண்கள் எனக்கு அதனை செய்து தருவார்கள். நபி (ஸல்) அவர்கள் ஸூபைர் (ரழி) அவர்களுக்குக் கொடுத்த நிலத்திலிருந்து ஈத்தம் விதைகளை எனது தலையில் வைத்து நான் சுமந்து வருவேன். இது சுமார் மூன்றில் இரண்டு பர்ஸக் (4கி.மீ) தூரம் இருக்கும்.

(ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்)

'எனது மாமி தலாக் சொல்லப்பட்டு விட்டார். அவர் அவரது ஈத்த மரத்திலிருந்து அறுவடை செய்ய விரும்பினார். அவர் அவ்வாறு செய்வதை ஒரு ஆண் கடிந்து கொண்டார். இவ்விடயத்தை அவர் நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டார்கள். அதற்கவர் 'நீங்கள் அறுவடை செய்யுங்கள். அப்போது தான் உங்களால் ஸதகா செய்யவோ நல்ல விடயங்களை முன்னெடுக்கவோ முடியும்' என்றார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்)

உம்மு ஸூலைம் (ரழி), உம்மு அதிய்யா (ரழி), ரபீஅதுல் அஸ்லமிய்யா (ரழி) போன்றவர்கள் வைத்தியம், காயம்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்தல் போன்றவற்றில் ஈடுபட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தனது மனைவி ஸைனப் (ரழி) அவர்களை நீண்ட கையுடையவர் என்று வர்ணித்தார்கள். அவர் தமது கரங்களால் பல வேலைகள் செய்து ஸதகா கொடுக்கக் கூடியவராக இருந்துள்ளார்கள். இது போன்றே இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களின் மனைவி ராஇதா (ரழி) அவர்களும் கைவேலைப்பாடுகள் மூலம் உழைத்து அதனை நல்ல விடயங்களில் செலவு செய்துள்ளார்கள். அத்தோடு தனது பிள்ளைக்கும் செலவு செய்துள்ளார்கள். அஸ்மா பின்த் உமைஸ் (ரழி) அவர்கள் தோல்களைப் பதனிடுவார்கள். ஒரு நாளில் 40 தோல்களை அவர் பதனிடுவதாக குறிப்புகள் காணப்படுகின்றன.

இவை நபி (ஸல்) அவர்களின் வாழ்விலிருந்து சில எடுத்துக்காட்டுகள் மாத்திரமே. இதுபற்றிய விரிவான விளக்கங்கள் ஏராளமாக காணப்படுகின்றன. ஆகவே நபி (ஸல்) அவர்களது காலப் பெண்கள் குறித்து அறிந்து கொள்வதில் கவனம் செலுத்துவது பயன்மிக்கதாக அமையும் எனலாம்.

அஷ் ஷெய்க் யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் கல்வி



இஸ்லாத்தில் கல்வி என்பது வெறும் புத்தகப் பாடங்களை கற்பதைக் கடந்து, மனிதனை ஒரு முழுமையான நபராக உருவாக்கும் ஒரு விரிவான செயன்முறையாகும். இஸ்லாம் கல்வியை இறைவனை அறியும் வழிமுறையாகக் கருதுகிறது. இறைவனின் படைப்புகளை ஆராய்வதன் மூலம், அவனது அறிவு, படைப்பாற்றல், சக்தி ஆகியவற்றை நாம் புரிந்து கொள்ள முடியும். கல்வியைக் கற்க வேண்டிய கடமையாக இஸ்லாம் கருதுகிறது.

இஸ்லாமானது தோற்றம் பெற்ற பொழுது அல் குர்ஆனில் 'இக்ரஉ' என்ற வசனமே முதலில் அருளப்பட்டது. தமிழில் இதற்கு அர்த்தம் 'படிப்பீராக...' என்று பொருள் தரும். எனவே அம்மதம் தோன்றும் பொழுதே 'கற்றுக்கொள்' என வலியுறுத்துகிறது.

இஸ்லாத்தில் அக்ல் என்னும் அரபு வசனம் உள்ளது. இது மனிதனின் பகுத்தறிவு என சொல்லப்படுகிறது. மனிதனின் அறிவு சார்ந்த உலகியல் கலைகளான அறிவியல், மருத்துவம், கணிதம் போன்ற எல்லாத் துறைகளையும் இஸ்லாம் ஏற்றுக் கொள்வதோடு அதை கற்கவும் ஊக்கப்படுத்தவும் செய்கின்றது. இஸ்லாத்தின் பார்வையில் அறிவின் அடிப்படை இறைவழிகாட்டுதலே என்று சொல்ல முடியும். கற்றல், கற்பித்தல் முறையைப் பொறுத்தமட்டில் இஸ்லாம் வெறும் ஏட்டுக்கல்வி முறைமை அல்ல. அது நடைமுறை ஆய்வுகளின் வழியாக கற்றுக்கொள்வதை வலியுறுத்துகின்றது. குர்ஆனின் பல்வேறு இடங்களில் இந்த ஆய்வு ரீதியான கற்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வசனங்களைக் காண முடியும். உதாரணமாக பின்வரும் வசனங்களை கூறலாம்.

'ஒட்டகங்களை இவர்கள் பார்க்கவில்லையா, அவை எவ்வாறு படைக்கப்பட்டுள்ளன என்று! மேலும், வானத்தை பார்க்கவில்லையா, அது எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது என்று! மேலும், மலைகளை பார்க்கவில்லையா, அவை எவ்வாறு ஊன்றப்பட்டுள்ளன என்று! மேலும், பூமியை பார்க்கவில்லையா, அது எவ்வாறு விரிக்கப்பட்டுள்ளது என்று! (88:1720)'

'சிந்திக்க வேண்டாமா?','ஆராய்ச்சி செய்ய வேண்டாமா?','நுணுக்கமாக பார்க்க வேண்டாமா?','உங்களது அறிவை பயன்படுத்தக் கூடாதா?', 'அறிவுள்ளவர்கள் விளங்கிக் கொள்வார்கள்' இதுபோன்ற சொற்பிரயோகங்கள் அல் குர்ஆனின் பல வசனங்களில் இடம்பிடித்துள்ளன. இவை ஆய்வு, மதிப்பீட்டு ரீதியான அறிவை தூண்ட கூடியவையாகும்.

மேலும் கல்வியில் உலகக்கல்வி, மார்க்கக்கல்வி என எந்தப் பிரிவினையும் கிடையாது. நபி(ஸல்) அவர்கள் இறைவனிடம் பயனற்ற கல்வியை விட்டும் பாதுகாப்பு தேடினார்கள். 'இரவின் ஒரு சிறுபகுதியில் கல்வி கற்பது, இரவு முழுவதும் விழித்திருந்து இறைவணக்கம் புரிவதை விடச் சிறந்ததாகும்' இக் கருத்துக்கள் மூலம் வேண்டுமானால் பயனுள்ள கல்வி, பயனற்ற கல்வி என்று பிரித்துக் கொள்ளலாம். எல்லாக் கல்வி ஞானமும் இறைவனிடமிருந்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக கொடுக்கப்படுகின்றன. எனவே எல்லாவிதமான பயனுள்ள கல்வியையும் கற்பதற்கு விரும்ப வேண்டும். இதுபோன்ற பயனுள்ள கல்வியைக் கற்பதற்கு விரும்பாமல் அதில் அலட்சியமாக இருந்த காரணத்தினால்தான் இன்றும் முஸ்லிம் சமுதாயம் முன்னேறாமல் இருக்கின்றது. இவ்வாறு கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நிறைய உதாரணங்கள் இஸ்லாத்தில் விரவிக் காணப்படுகின்றன.

இந்நூற்றாண்டில் மாணவர்கள் மத்தில் ஒழுக்கவிழுமியங்கள் பெரிதும் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றன. ஆனால் இஸ்லாம் ஒழுக்க கொள்கைகளையே பிரதானமாகக் கொண்டுள்ளது. கல்வியின் வாயிலாகவும் அது வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றது. நவீன மதசார்பற்ற கல்வி ஒழுக்கத்தை விட அறிவிற்கே முன்னுரிமை அளிக்கின்றது. ஆனால் இஸ்லாம் அறிவை விட ஒழுக்கத்தையே முதன்மைப்படுத்துகின்றது.

தற்காலத்தில், உலகமயமாக்கல், நவீன தொழில்நுட்பம் மற்றும் பல்வேறு கலாசாரங்களின் தாக்கம் ஆகியவை இஸ்லாமிய தத்துவத்தின் அடையாளத்தை மங்கச் செய்துள்ளது. மேற்கத்திய கல்வி முறைகள், உலகமயமாக்கல் காரணமாக பல்வேறு கலாசாரங்கள் ஒன்றோடு ஒன்று இரண்டறக் கலந்துள்ளது. அதனால் இஸ்லாமிய கல்வியின் தனித்துவம் பாதிக்கப்படக் கூடிய நிலை காணப்படுகிறது.

இஸ்லாமியக் கல்வித் தத்துவ நோக்கம் அவனுக்கும், அவன் சார்ந்துள்ள சமூகத்திற்கும், இவ்வுலகத்திற்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும். அக்கல்வியின் மூலம் வளர்ச்சியும், அபிவிருத்தியும் ஏற்பட வேண்டும். மாறாக, அது மனித சமூகத்தின் அழிவிற்கு வித்திடக் கூடாது.

எனவே, இஸ்லாம் மட்டுமல்ல கல்வி ரீதியான எல்லா தத்துவங்களும் கல்வியின் அடிப்படை கருத்துக்கள், நோக்கங்கள், விதிமுறைகள் போன்றன மாணவர்களது சிந்தனையை மேம்படுத்தவும், மாணவர்களுக்கு நல்ல ஒழுக்கங்களை கற்றுக் கொடுக்கக் கூடியதாகவும் கல்வியில் பல்வேறு அம்சங்களை விமர்சிக்கவும், ஆய்வு செய்து ஆராயவும் கற்றுக் கொடுக்கக் கூடியதாக உள்ளது.

அறிவைத் தேடுவது ஒவ்வொரு முஃமினுக்கும் கடமையாகும்.

(ஆதாரம்: திர்மிதி)

வைத்துள்ளா முஹமட் மாஜீத்...
இரண்டாம் வருட கல்வியியல் சிறப்பு
கற்கைநெறி மாணவன், கல்வி, பிள்ளை
நலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

# இஸ்லாத்தில் இளமையின் முக்கியத்துவம்

மனிதனின் வாழ்க்கைக் காலத்தையும் அவனது இளமைக் காலத்தையும் அல் குர்ஆன் இப்படிச் சித்தரித்துக் காட்டுகின்றது.

'அவன்தான் மண்ணிலிருந்தும் பின்னர் இந்திரியத் துளியிலிருந்தும் பின்னர் (கருவறைச் சுவரில்) ஒட்டிக் கொள்ளக் கூடியதிலிருந்தும் உங்களைப் படைத்தான். பின்னர் உங்களை சிசுவாக வெளியேற்றுகிறான். பின்னர் உங்கள் இளமையை நீங்கள் அடைவதற்காகவும், பின்னர் உங்கள் வயோதிபத்தை நீங்கள் அடைவதற்காகவும் (உங்களுக்கு ஆயுளை ஏற்படுத்தினான்.) இதற்கு முன்னரே மரணிப்போரும் உங்களில் உள்ளனர். குறிப்பிட்ட தவணையை நீங்கள் அடைவதற்காகவும், நீங்கள் விளங்கிக் கொள்வதற்காகவும் (இவ்வாறு செய்தான்.)' (அல் குர்ஆன் 40:67)

இந்த வசனம் சிறு பிள்ளைப் பருவம் இளமைப் பருவம், முதுமைப் பருவம் என மனித வாழ்க்கைப் படித்தரத்தைப் பிரிக்கின்றன.



'அல்லாஹ்தான் உங்களைப் பலவீனத்திலிருந்து படைத்தான். பின்பு, அவனே பலவீனத்தின் பின்னர் பலத்தை ஏற்படுத்தினான். பின்பு, பலத்தின் பின்னர் பலவீனத்தையும் (முதுமையின்) நரையையும் அவன் ஏற்படுத்தினான். அவன் நாடுவதைப் படைப்பான். அவன் யாவற்றையும் அறிந்தவன், பேராற்றலுடையவன்.'

(அல் குர்ஆன் 30:54)

இவ்வசனத்தில் குழந்தைப் பருவம், முதுமைப் பருவம் என்பவற்றை பலவீனமான பருவமாகக் கூறும் அல்லாஹ் இளமைப் பருவத்தை பலமான பருவம் என்றும் குறிப்பிடுகிறான். பலம்மிக்க இளமைப் பருவத்தை உடையவர்கள்தான் சமூகத்தில் உள்ள சிறுவர்கள், முதியவர்கள் எனும் பலவீனமான பருவத்தினரைப் பாதுகாப்பவர்களாகவும் பராமரிப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

இஸ்லாம் இளமையும், துடிப்பும் உள்ள இளைஞர்கள் சமூகத்தின் காவலர்களாகவும், சமூகக் கொடுமைகளுக்கு எதிராகப் போராடக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்று கூறுகின்றது.

ஆனால் இன்றைய காலகட்டத்தில் அனைத்து சக்திகளும் இளைஞர்களையே குறிவைத்துள்ளன. இளைஞர்களை சுய சிந்தனையுடையவர்களாக வாழ விடாமல் தடுப்பதற்காக அவர்களை போதைக்கும், ஆபாசத்திற்கும், கேளிக்கைகளுக்கும் அடிமையாக்குவது, அவர்களது வாழ்வை இலட்சியமற்றதாக மாற்றுவது என்ற அடிப்படையில் செயற்பட்டு வருகின்றன. இதேவேளை, இளமை பற்றி தப்பான பல கண்ணோட்டங்களும் மக்கள் மனதில் இடம் பிடித்துள்ளன. ஆனால், இஸ்லாம் இளமையை பொறுப்புக்களின் ஆரம்பப் பருவமாகப் பார்க்கின்றது.

உறங்குபவர் விழிக்கும் வரை 'சிறுவர் பருவ வயதை அடையும் வரை, பைத்தியக்காரர் புத்தி தெளியும் வரை (செய்யும் தவறுகளைப்)பதிவதை விட்டும் பேனை உயர்த்தப் பட்டு விட்டது' என நபி(ஸல்) அவர்கள் நவின்றார்கள்.

(ஆதாரம்: அஹ்மத், அபூதாவூத், நஸாஈ, இப்னு குஸைமா)

இந்த ஹதீஸில் சிறு பிள்ளைப் பருவம் பொறுப்பற்றது என்றும் இளமைப் பருவத்தில் இருந்து செய்யப்படும் தவறுகள் பதியப்படும் என்றும் கூறுகின்றது. எனவே, பருவ வயதை அடைந்தவர்கள் பக்குவமாக இருக்க வேண்டும். தப்புத் தவறுகளைச் செய்வதற்குரிய பருவம் அல்ல இளமைப்பருவம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இளமை என்பது ஆற்றல்மிக்கது. இந்த ஆற்றல் மிக்க பருவம் உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். அதனைப் பாழ்படுத்தி விடக் கூடாது. இளைஞர்களின் இளமை, சக்தி, ஆற்றல் என்பன அவர்களது எதிர்கால மற்றும் மறுமை நலனுக்காகவும் அவர்களது குடும்பம், ஊர், சமூகம், மனித இனம் என்பவற்றின் நலனுக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

'உனது முதுமை வருவதற்கு முன் உனது இளமையைப் பயன்படுத்திக் கொள்!' என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: நஸாஈ, ஹாகிம்)

கல்வியைத் தேடுவது உடல் ஆரோக்கியத்தை வலுப்படுத்துவது, உழைப்பது, குடும்பத்தைக் காப்பது, ஊருக்கும் சமூகத்திற்கும் நல்லது செய்வது, தனிப்பட்ட வணக்க வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவது, இவை அனைத்துக்கும் ஏற்ற பருவமே இளமைப் பருவமாகும்.

இன்றைய இளைஞர்களின் சக்திகளெல்லாம் வீணாக விரையமாகின்றன. எத்தனையோ தந்தையர்கள் 10-20 வருடங்களாக வெளிநாடுகளில் அடிமை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களது இளமை, ஆரோக்கியம், உடல் சுகம், உள அமைதி அத்தனையையும் பாலைவன மண்ணில் போட்டுப் புதைத்துவிட்டு தனது மனைவி மக்களின் நலனுக்காக மாடாய் உழைக்கின்றனர்.

தாய்-தந்தையின் கஷ்டத்தை உணராத இளைஞர்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் தொல்லையாக தமது வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றனர். தந்தையின் உழைப்பைத் தவறான வழியில் செலவு செய்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால் முதுமையில் செய்யும் இறை வழிபாட்டை விட இளமையில் செய்யும் இறை வழிபாடு ஏற்றம் மிக்கதாகும். இந்த வகையில் இளமைப் பருவத்தை இறைவனுக்கு மாறு செய்யும் விதத்தில் கழித்துவிடாமல் இறைவனுக்கு ஏற்ற விதத்தில் கழிப்பது இன்றியமையாததாகும்.

மறுமையில் அல்லாஹ்வின் நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத அந்நாளில் அல்லாஹ் 07 கூட்டத்தினருக்கு தனது நிழலில் இடம் கொடுப்பான் எனக் கூறிய நபியவர்கள் அதில் ஒரு கூட்டமாக தனது இளமைக் காலத்தை இபாதத்தில் கழித்த இளைஞர்களையும் குறிப்பிட்டார்கள். (ஆதாரம்: புஹாரி)

எனவே, இளமை என்பது இறைவனுக்கு மாறு செய்வதற்கல்ல. மாறாக, இறைவனை வழிபடுவதற்கான பருவம் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

பிந்த் இஸ்மாயீல்...



## இலங்கையின் 1750 கோடி டொ....

அடிப்படையில் வட்டிக் கொடுப்பனவிலும் குறைப்புச் செய்யப்படும். இலங்கை 3.3 பில்லியன் டொலர் தனியார் கடனை மறுசீரமைப்பு செய்வதற்கான நிதி நிபந்தனைகள் தொடர்பாக சீன அபிவிருத்தி வங்கியுடன் (CDB) கொள்கை ரீதியான இணக்கப்பாட்டை எட்டியுள்ளது.

சீன எக்ஸிம் வங்கி, ஸ்ரீ லங்கா உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழு (OCC), சீன அபிவிருத்தி வங்கி (CDB) மற்றும் பிணைமுறிதாரர்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் பலனாக, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்ட காலப்பகுதிக்குள் இலங்கை 17 பில்லியன் டொலருக்கும் அதிகமான கடன் சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதில் சீன எக்ஸிம் வங்கியின் 2.4 பில்லியன் டொலர்களும், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவின் 2.9 பில்லியன் டொலர்களும், சீன அபிவிருத்தி வங்கியின் (CDB) 2.5 பில்லியன் டொலர்களும், பிணைமுறிதாரர்களின் 9.5 பில்லியன் டொலர்களும் அடங்கும்.

இந்த செயன்முறை முழுவதிலும் இலங்கையின் கடன் வழங்குநர்களும் சர்வதேச நாணய நிதியமும், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களின் செயலகமும் வழங்கிய தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கு இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்தார்.

இது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பை பெற்றுக்கொள்ள கீழ்காணும் Linkக்குள் பிரவேசிக்கலாம்.

https://links.sgx.com/FileOpen/Sri%20Lanka%20%20Announcement%20of%20Agreement%20in%20Principle%20%2019_09_2024.ashx?App=Announcement&FileID=819175

## அனர்த்தங்களை எதிர்கொள்ள...

பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் உதய ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதற்கான திட்டம் தேர்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு, அனர்த்த முகாமைத்துவ நிலையம், முப்படையினர், பொலிஸ் மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் நிறுவப்பட்டுள்ள விசேட தேர்தல் கூட்டு அனர்த்த செயற்பாட்டுப் பிரிவினூடாக இந்த விசேட வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன்படி, அனர்த்த சூழ்நிலை காரணமாக தேர்தல் கடமைகள் அல்லது வாக்களிப்பதில் இடையூறுகள் ஏற்பட்டால், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 117 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 0113668032, 0113668087 அல்லது 0113668025 ஆகிய விசேட அவசர தொலைபேசி இலக்கங்களுக்கும் அழைப்பினை முடியும்.

இந்த விசேட கூட்டு அவசரப் பிரிவு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 22 ஆம் திகதி வரை இயங்குமெனவும் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் உதய ஹேரத் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோத கிருமி நாசினிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

புத்தளம் உச்சமுனை தீவுப் பகுதியில், சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஒரு தொகை கிருமிநாசினிகளுடன் இரு சந்தேகநபர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்த தீவுப் பகுதியில், சந்தேகத்துக்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிங்கி ரக இயந்திரப் படகொன்றினை சோதனையிட்ட வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய கடற்படையினர், 11 உரமூடைகளில் சூட்சுமமாக அடைக்கப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான கிருமி நாசினிகளை கண்டுபிடித்துள்ளனர்.

அத்துடன், குறித்த டிங்கி இயந்திர படகில் இருந்த இருவரையும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்த கிருமி நாசினிகள் சட்டவிரோதமான முறையில் வெளிநாடொன்றிலிருந்து கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்டு, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்திருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள கடற்படையினர், கைப்பற்றப்பட்ட கிருமி நாசினிகளுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களையும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவித்தனர்.

## சமூக ஊடகங்களை கண்காணிக்க...

தவறான தகவல்கள் அகற்றப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்குகள் எண்ணும் நிலையங்களில் கைத்தொலைபேசிகளை பயன்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட இடங்களை புகைப்படம் மற்றும் வீடியோ எடுப்பதை தவிர்க்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த இடங்களில் ஆயுதங்களை வைத்திருப்பது, புகைத்தல், மதுபானம் அருந்துதல் மற்றும் போதைப் பொருள்பாவனைபோன்றவைதடை செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்னாயக்கா சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் அறிவித்துள்ளார்.

## நெடுந்தாரகை பயணிகள் படகு...

திருத்தப்பட்டு, வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

திருத்தப்பணிகளைத் தொடர்ந்து வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் நெடுந்தாரகை பயணிகள் படகை நேற்று (19)காலை உத்தியோகப்பூர்வமாக கையளித்தார்.

நெடுந்தீவு இறங்குத்துறைக்குச் சென்ற ஆளுநர், படகை பார்வையிட்டதுடன், நெடுந்தாரகை பயணிகள் படகின் திருத்தப் பணிகளுக்காக துரித நடவடிக்கையை மேற்கொண்ட ஜனாதிபதிக்கும், ஜனாதிபதி செயலகத்துக்கும், துறைசார் அமைச்சுக்கும் நன்றி தெரிவித்தார்.

மேலும், தீவுகளுக்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

இதன்போது, நீண்டகாலமாக காணப்பட்ட போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுத்தமை தொடர்பாக, ஆளுநருக்கு நெடுந்தீவு மக்கள் நன்றி தெரிவித்தனர்.

ஆளுநரின் கடும் முயற்சியின் பயனாக, நேற்று (19)முதல் பயணிகள் சேவையை ஆரம்பித்துள்ள நெடுந்தாரகை படகு, தினமும் நெடுந்தீவிலிருந்து ஒரு தடவை குறிகட்டுவான் இறங்குத்துறைக்கு பயணிக்கவுள்ளது. அதன்படு இப் படகில் ஒரு தடவையில் சுமார் 80 பேர் பயணிக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கொள்ளுப்பிட்டி சொகுசு வீடுகள்...

பிறப்பித்துள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன, நேற்று(19) இந்த தடை உத்தரவை பிறப்பித்தார்.

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் மகன் ரமித் ரம்புக்வெல்ல கொள்ளுப்பிட்டி பகுதியிலுள்ள சொகுசு வீட்டுத் தொகுதியில் இரண்டு வீடுகளை 80 மில்லியன் ரூபா மற்றும் 65 மில்லியன் ரூபாவுக்கும் கொள்வனவு செய்துள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருந்தது.

இது தொடர்பான விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருவதனால், மேற்படி சொத்துக்களை பயன்படுத்த தடை விதித்து உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நீதிமன்றத்தை கோரியிருந்தது.

இந்த கோரிக்கையை பரிசீலித்த உயர்நீதிமன்ற நீதிபதி, எதிர்வரும் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி வரை அந்த சொத்துக்களைப் பயன்படுத்த தடை விதித்து மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டின் வெவ்வேறு பகுதிகளில்...

படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவத்தில் 37 வயதான ஒருவரே கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை, நிகவரட்டி – ரஷ்னாயனபுர பகுதியில் நேற்று(19) அதிகாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 30 வயதுடைய இளைஞன் ஒருவர் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கொஹுவல – சரணங்கர வீதியிலும் துப்பாக்கச்சூட்டு சம்பவமொன்று பதிவாகியுள்ளது. வர்த்தக நிலையமொன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில், தெஹிவளை பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம்(18) இரவு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர், இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு மாணவர்களுக்கான...

41 மில்லியனைத் தாண்டியுள்ளது. இதனை கவனத்திற்கொண்டு குடிவரவை கட்டுப்படுத்தும் நோக்கில் பல நவடிக்கைகளை கனடா மேற்கொண்டுள்ளது.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் அரசாங்கம், அந்நாட்டின் வீட்டு வசதி, தொழில் சந்தை மற்றும் சமூக சேவைகள் ஆகியவற்றில் தற்போது இடம்பெற்றுள்ள குடிவரவு அதிகரிப்பை சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 'கனடாவுக்கு வருவது ஒரு பாக்கியம். அது ஒரு உரிமை அல்ல' என்று அந்நாட்டு குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டில், கனடா 437,000 வெளிநாட்டு மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கான அனுமதிகளை வழங்க திட்டமிட்டுள்ளது. இவ்வாண்டு 485,000 பேருக்கும், 2023 இல் 500,000 பேருக்கும் அனுமதி வழங்கப்பட்டது. இந்த எண்ணிக்கை அதிகமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச மாணவர்கள் மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் துணைவர்களுக்கு வழங்கப்படும் தொழில் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதிலும் கனடா புதிய கட்டுப்பாடுளை விதித்துள்ளதுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் தினம் உட்பட ஒரு வாரம்...

ஜனாதிபதித் தேர்தல் பாதுகாப்புக்காக முப்படை வீரர்களையும் போதியளவில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில், நடைமுறைப் படுத்தப்படவேண்டிய இறுதிப் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகளுக்கு நேற்று(19) கையளிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

ஜனாதிபதித் தேர்தல் பாதுகாப்புக்காக பொலிஸாருக்கு மேலதிகமாக முப்படையினரையும் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அச்சுறுத்தல் காணப்படும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் பிரசார நடவடிக்கைகள் நிறைவுபெற்றுள்ள நிலையில், ஏனைய வேட்பாளர்களுக்கும் தொடர்ந்தும் பாதுகாப்பு அவசியமாகும்.

இதேவேளை, பொலிஸாருக்கு உதவுவதற்காக எந்த சந்தர்ப்பத்தில் அழைத்தாலும் கடமைக்கு திரும்புவதற்கு முப்படையினரும் தயார் நிலையில் இருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கேர்ணல் நளின் ஹேரத் தெரிவித்தார்.

அத்துடன், தேர்தல் நடைபெறும் தினம் மற்றும் அதனைத்தொடர்ந்து ஒரு வாரத்துக்கு பொதுமக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு அமைதியை உறுதி செய்வதற்கு விசேட பாதுகாப்புத் திட்டமும் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாக்களிப்பு ஏற்பாடுகள்...

திணைக்களத்தில் நேற்று(19) நடைபெற்றபோதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் விளக்கமளித்த தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர்,

நேற்று 19 ஆம் திகதி நள்ளிரவு முதல் தேர்தல் தொகுதிகள் மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் அலுவலகங்கள் அனைத்தையும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட வேட்பாளர்களால் அந்த அலுவலகங்கள் அகற்றப்பட்டு மாவட்டத்துக்கு ஒரு பிரதான காரியாலயம் மட்டுமே செயற்படமுடியும். அவ்வாறு அலுவலகங்களை உரிய வேட்பாளர்கள் அகற்றாவிட்டால் பொலிஸார் தலையிட்டு அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பர். தேர்தல் வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக தண்டனை வழங்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்குகளை எண்ணும் நடவடிக்கைகள் நாளைய 21ஆம் திகதி பிற்பகல் 4:15 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. அந்த நடவடிக்கைகள் நிறைவுபெற்று பெறுபேறுகள் கிடைத்ததும் அதனை ஊடகங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கிணங்க உத்தியோகபூர்வ பெறுபேறுகள் கிடைக்கும் வரை உத்தியோகபூர்வமற்ற வேறு பெறுபேறுகளை வெளியிடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இதேவேளை, வாக்காளர் ஒருவர் தனது விருப்புவாக்கை அளிப்பது எவ்வாறு என்பது தொடர்பாக தெளிவுபடுத்திய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர்,

ஒரு வேட்பாளருக்கு தமது வாக்கை வழங்கிய பின் மேலும் இருவருக்கு வாக்காளர்கள் தமது விருப்பு வாக்கை வழங்க முடியும் என குறிப்பிட்டார்.

அவ்வாறு தமக்கு விருப்பமான வேட்பாளருக்கு வாக்களிக்க விரும்பும் வாக்காளர், அந்த வேட்பாளரின் பெயர் மற்றும் சின்னத்திற்கு முன்பாக இலக்கம் 1 என பதிவு செய்யவேண்டும். அதேபோன்று தமக்கு விருப்பமான இரண்டாவது மூன்றாவது வேட்பாளருக்கு விருப்பு வாக்கை அளிக்க அவர்களின் பெயர் மற்றும் சின்னத்துக்கு முன்பாக 2,3 என்ற இலக்கத்தைப் பதிவு செய்யவேண்டும்.

ஒருவருக்கு மட்டும் வாக்களிக்கவும் முடியும். எனினும் மூன்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு வாக்குகள் மற்றும் விருப்பு வாக்கை அளித்தால் அது நிராகரிக்கப்படும்.

அதேபோன்று வாக்களிப்பின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில், அடையாள அட்டை, வெளிநாட்டு கடவுச்சீட்டு, நடைமுறையிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரம், அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை ஆகியவற்றை பயன்படுத்தமுடியும்.

அத்துடன், தெளிவற்ற அல்லது தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்டுள்ள ஆவணம், புகைப்படம் அல்லது புகைப்படம் இல்லாத நிலையில் காணப்படும் பத்திரங்கள் எதுவும் வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலும், இம்முறை ஜனாதிபதி தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுக்கள் இதுவரை கிடைக்காத வாக்காளர்கள் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்குள் பிரவேசித்து தமக்கான உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டின் பிரதியொன்றை பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பும் வாக்காளர்கள் தமது பகுதி தபால் அலுவலகத்தில் தமக்கான உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், வாக்களிக்கச் செல்லும் போது கையடக்கத் தொலைபேசியைக் கொண்டு செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறும் வாக்களிப்பின் பின்னர் அமைதியாக தத்துமது வீடுகளுக்குச் செல்லுமாறும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பரீட்சை திணைக்களத்துடன்...

இடம்பெற்றிருந்த சில கேள்விகளுக்கு சமமான கேள்விகள், அளவ்வைப் பகுதியில் நடத்தப்படும் டியூசன் வகுப்பின் ஆசிரியர் ஒருவரால் பரீட்சைக்கு முன்பே வெளியிடப்பட்டிப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இப் பரீட்சை வினாத்தாளை தயாரித்த நிபுணர்கள் குழுவின் இணக்கப்பாட்டுக்கமைய, மேற்படி மூன்று கேள்விகளும் நீக்கப்பட்டு இறுதிப் புள்ளிகளை வழங்குவதற்கு பரீட்சைகள் திணைக்களம் கடந்த 17ஆம் திகதி தீர்மானித்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம்(18) மாணவர்களின் பெற்றோர் பரீட்சைகள் திணைக்களத்துக்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது, கலகம் அடக்கும் பொலிஸாரினால் முயற்சியினால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களின் பெற்றோர்களில் ஆறு பேருக்கு பரீட்சைகள் ஆணையாளருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.

இதனையடுத்து, ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர, தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்துவதற்கான அவசியம் காணப்பட்டால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என குறிப்பிட்டிருந்தார்.

எனினும், இச் சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென, மாணவர்களின் பெற்றோர்களால் முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

## இன்றைய பலன்கள்

(20.09.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)





**மேஷம்:**
பல செயல்களில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் கிடைக்காமல் போகலாம். சில செயல்களில் அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு.



**ரிஷபம் :**
எடுத்த காரியங்களில் முயற்சியுடன் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். என்றாலும் சில செயல்களில் சிறு சிறு தடைகளை சந்திப்பீர்கள்.



**மிதுனம்:**
சில காரியங்களில் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும் பலன் தந்த பல காரியங்களை எண்ணி மகிழ்ச்சியடைவீர்கள்.



**கடகம்:**
நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். பணவரவுகளில் திருப்தியான சூழ்நிலை காணப்படும்.



**சிம்மம்:**
உங்கள் செயல்கள் பலவற்றில் நன்மையான பலன்களை அடைவீர்கள். கடினமான செயல்களையும் முயற்சியோடு செய்து முன்னேற்றம் அடைவீர்கள்.



**கன்னி:**
நீங்கள் எடுத்த முயற்சிகளில் நல்ல பல முன்னேற்றங்களை காண்பீர்கள். வரவேண்டிய தன வரவு தாமதம் இன்றி வந்து சேரும்.



**துலாம்:**
உங்கள் முயற்சிகள் பலவற்றில் முன்னேற்றமான சூழ்நிலை காணப்பட்டாலும் சிலவற்றிலேயே வெற்றி காண்பீர்கள்.



**விருச்சிகம்:**
முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில செயல்களில் தொடர்பு இருந்தாலும் தக்க நபர்களில் உதவியுடன் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.



**தனுசு:**
காரியங்கள் பலவற்றில் தீவிர முயற்சியுடன் ஈடுபட்டாலும் சிலவற்றிலே எதிர்பார்க்கும் பலனை அடைய முடியும்.



**மகரம்:**
பல செயல்களில் முயன்று செயலாற்றினாலும் சிலவற்றில் மட்டுமே முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள்.



**கும்பம்:**
ஒப்பந்தங்களில் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். வரவேண்டிய தன வரவு சிறிது தாமதித்தே வந்து சேரும்.



**மீனம்:**
செயல்கள் பலவற்றில் சிறப்பாக முயற்சிகள் செய்தாலும் சில வற்றிலையை எதிர்பார்க்கும் நன்மைகளை அடைய முடியும்.

## தேர்தல் நடவடிக்கைகளுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

குறிப்பிட்டார். அத்துடன், வாக்களிப்பதற்காக தமது சொந்த ஊர்களுக்குச் செல்லும் மக்களின் நலன் கருதி, நேற்று (19)முதல் விசேட பஸ் சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இன்றும் (20) தூரப் பிரதேசங்களுக்கான விசேட பஸ் சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதேவேளை, கொழும்பு கோட்டை மற்றும் காங்கேசன்துறை வரையிலான விசேட ரயில் சேவையொன்று ஈடுபடுத்தப் படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்ததுள்ளது.

இன்றும் (20) நாளையும் (21) இந்த ரயில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து காங்கேசன்துறை ரயில் நிலையம் வரை பயணிப்பதுடன் 22ஆம் திகதி காங்கேசன் துறையிலிருந்து கொழும்பு கோட்டை வரை சேவையில் ஈடுபடும் என ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## வெடிப்பொருட்களுடன்... (03ஆம் பக்கத் தொடர்)

சேர்ந்த சந்தேகநபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து 05 டெட்டனேட்டர்கள், 03 வோட்டர் ஜெல் குச்சிகள் மற்றும் வயர் ரோல் ஆகியவை மீட்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுதந்திரமான மற்றும்... (03ஆம் பக்கத் தொடர்)

நாட்டின் பல்வேறு வாக்களிப்பு நிலையங்களுக்கும் கண்காணிப்பாளர்கள் விஜயம் செய்து, வாக்களிப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பார்கள் என என தெரிவித்தார். மேலும், வாக்காளர்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற மற்றும் சாதகமான சூழ்நிலை நிலவுகிறதா? என்பதிலும் கூடுதலான கவனம் செலுத்தப்படும் என அவர் தெரிவத்தார்.

## 32,000 வீட்டு திட்டத்துக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

தலா 50 இலட்சம் ரூபா செலவில் 32 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. வீட்டு நிர்மாணப்பணிகள் அனைத்தும் சன் பவர் குழுமத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளன. வீடு முழுமையாக நிர்மாணிக்கப்பட்டதன் பின்னரே பயனாளர்களிடம் கையளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்துக்குரிய முன்மொழிவுக்கான அனைத்து அனுமதிகளும் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை...

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை பொதுமக்கள் தங்களது வீடுகளில் இருந்தவாறு தனிப்பட்ட முறையில் பார்வையிடுமாறும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ கேட்டுக்கொண்டுள்ளார்.

## கேரளாவில் 'நிபா' வைரஸ்...

மஞ்சேரி மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதாக, கேரள சுகாதாரத்துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் தெரிவித்தார்.

உயிரிழந்த இளைஞன் கர்நாடகா மாநிலம் பெங்களூரிலுள்ள கல்லூரியில் கல்வி பயின்று வந்தவர் எனவும் அவருடன் தொடர்பிலிருந்த எவருக்கேனும் இந்நோய் அறிகுறிகள் உள்ளதா? என்பதைக் கண்டறியுமாறும் சுகாதாரத் துறை பணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைகளுக்கு...

திகதி திங்கட்கிழமை மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

வாக்களிப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகள் நேற்று (19) பாடசாலை நேரத்தின் பின்னர் கிராம உத்தியோகத்தர்களின் தேவைக்கேற்ப வழங்கப்பட்டதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை, சில பிரதேசங்களில் வாக்கெண்ணும் நிலையங்களாக பயன்படுத்தப்படும் பாடசாலைகள், எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்படுமென கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தலைவர் அஷ்ரஃப் அவர்களும் தவிசாளர் பாரூக் அவர்களும்

## சவால்களும் சாதனைகளும் - 09



வரலாற்றில் தடம் பதித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தாபகர் பெருந் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப் எம்மை விட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் ஆகின்றன. எனினும் அவர் எங்களுடன் இல்லை என்ற மனக் குறையிருந்தாலும் அவருடைய வழிகாட்டல்களின் படியே அக்கட்சியின் தவிசாளர் எச். எம். பாரூக் இன்னும் பயணித்துக் கொண்டு இருக்கிறார் என்பதைக் காணும் போது எமக்கு மனநிறைவைத் தருகின்றன.

எமது நாளைய முஸ்லிம் சமூகத்தின் விடிவுக்கான அரசியல் விலாசத்தை அஷ்ரஃப் காட்டினார். அதையே வளர்த்தார். அதற்குப் பாத்திரமாக தவிசாளர் எச். எம். பாரூக் தலைவருடைய தலைமைத்துவப் பண்புகளைப் பேணி நடந்தார். சிறந்த அரசியல்வாதியாகவும் பரிணமித்தார்.

1988 களில் மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கி வெற்றிபெற்றார். இதன் மூலம் கண்டி வாழ் முஸ்லிம் சமூகமும் ஏனைய சமூகங்களைப் போல் சகல துறைகளிலும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற இலட்சிய நோக்குடனே செயற்பட்டு வந்தார். அவர் மத்திய மாகாண சபை உறுப்பினர் பதவியில் இருந்து கொண்டு அவர் ஆற்றிய கல்வி, சமூகப் பணிகள் ஏராளம். அஷ்ரஃப் அவர்களுடன் சேர்ந்து கட்சியின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதைப் போன்று மாகாண சபையின் ஊடாக அரசியலில் பிரவேசித்து பல்வேறுபட்ட சமூகப் பணிகளை மேற் கொண்டு கண்டி மக்களின் மனதில் ஆழமான இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

இக்காலங்களில் அரசியல் அதிகாரத்தின் மூலம் கண்டி மாவட்டத்தில் பல சேவைகள் செய்தார் என்பது மாத்திரமன்றி இம்மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சியில் அதிகப்படியான பங்களிப்பைச் செய்தவர் என்ற பெருமையும் தவிசாளர் எச். எம். பாரூக்குக்கு உண்டு.

அஷ்ரஃபின் கொள்கைப்படி முஸ்லிம்களின் அரசியல் பிரவேசத்தின் மூலமே முஸ்லிம் மக்களுடைய தேவைகளைக் கண்டறிந்து அதற்குரிய தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதற்கேற்ப எச். எம். பாரூக் தான், அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது கண்டி மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு தேவையானவற்றை பெற்றுப் கொடுப்பதில் ஒருபோதும் தவறியதில்லை.

பாரூக் மீது கண்டி வாழ் மக்கள் அபார நம்பிக்கை வைத்துள்ளார்கள். என்றுமே அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக அவர் மாறாக நடந்ததில்லை. அவரை நாடிச் சென்றவர்களை ஒரு நாளும் வெறும் கையோடு திரும்பியதும் இல்லை. உண்மையிலேயே பாரூக், அஷ்ரஃபுடைய கொள்கைகளை உயிர்ப்பிக்க வந்தவர்களில் முக்கியமான ஒருவர் என்று கூடக் கூறலாம்.

முதன் முதலில் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே கண்டி மாவட்டத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கோட்டையாக மாற்றிய பெருமை எச். எம். பாரூக் அவர்களைச் சாரும்.

**இவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கும் தொடர் செவ்வி**

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான அரசியல் திருத்தம்தான் 13 ஆவது அரசியல் சட்ட சீர்திருத்தம். அதன் அடிப்படையில் தான் 1988 ஆம் ஆண்டுக்கான மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு முதலாவது அங்கீகாரம் மாகாண சபைத் தேர்தலுக்குத் தான் கிடைத்தது. பாராளுமன்றத் தேர்தலில் அல்ல.

கண்டி மாவட்டத்தில் நானும் அக்குறணையைச் சேர்ந்த உபைதுல்லாவும் தெரிவு செய்யப்பட்டோம். மாத்தளை மாவட்டத்தில் அத்ஹம் என்பவர் தெரிவு செய்யப்பட்டார். மத்திய மாகாண சபைக்கு முதன் முதலாக மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டோம். மத்திய மாகாண சபையில் ஒரு பலமான சக்தியாகவே நாங்கள் இருந்தோம். இந்தக் குழுவின் தலைவர் நான் இருந்தேன். அப்பொழுது ஐக்கிய தேசிய கட்சியின் எம். எச். ஏ. ஹலீம் இருந்தார். அவர் மாகாண சபையின் அமைச்சராக இருந்தார்.

மாகாண சபையில் இருந்து கொண்டு முஸ்லிம் காங்கிரஸைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு செயற்படுவது பெரிய சவாலாக இருந்தது. ஏனென்றால் அக்கால கட்டம் மக்கள் விடுதலை முன்னணியின் போராட்ட காலகட்டம். தென்னிலங்கையில் இத்தேர்தலில் போட்டியிடுவது என்பது ஆபத்தான விடயமாக இருந்தது. மக்கள் விடுதலை முன்னணியினால் அவர்களுக்கு உயிர் ஆபத்து விடுக்கப்பட்டிருந்தது. இத்தகைய பிரச்சினைகளுக்கு மத்தியில் தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டோம். ஏனைய கட்சியில் போட்டியிட்ட மாகாண உறுப்பினர்களும் இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கினார்கள்.

1988-1993 வரையிலான இக்கால கட்டத்தில் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. காரணம் நான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தியதால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களினால் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அப்பொழுது ஐக்கிய தேசிய கட்சி ஒரு பலம் வாய்ந்த கட்சியாக இருந்தன. கண்டி மாவட்டத்தில் ஏ. ஸீ. எஸ். ஹமீட் வெளி விவகார அமைச்சராக இருந்தார். கண்டியில் வேறு கட்சியில் முஸ்லிம் பிரதிநிதிகள் வருவதை அவர் விரும்பவில்லை. எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர் நேரடியாக இல்லாவிட்டாலும் அவருடைய ஆதரவாளர்களின் ஊடாக இடையூறுகளை விளைவித்தார்கள். அதேநேரத்தில் கம்பளைத் தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டு பாராளுமன்ற உறுப்பினராக ஏ. ஆர். எம். ஏ. காதர் இருந்தார். அவர் ஓர் வித்தியாசமான அரசியல்வாதி. முன்னாள் அமெரிக்கா ஜனாதிபதி ட்ரெம் போன்றவர். முகத்தில் நேரடியாகப் பேசக் கூடியவர். அப்பொழுது சகல மாகாண சபை உறுப்பினர்களுக்கு அரசாங்கம் பெஜ்ரோ ஜீப் வண்டி வழங்கியிருந்தார்கள். கம்பளைக்கு ஒரு கூட்டத்திற்கு சென்றால் அவருடைய ஆதரவாளர்கள் எனது வாகனத்தைக் கூட நிறுத்தி வைக்க இடம் தரமாட்டார்கள். வேறு எங்கேயாவது என்னைக் காணும் பட்சத்தில் அந்தா போகுது தூக்கு மரம் என்று சொல்வார். இதில் இருந்து நாங்கள் ஒரு தெளிவொன்றை பெற்றுக் கொள்ள வேண்டும். இந்தக் கட்சியை முன்னெடுப்பதற்கு எத்தகைய சவால்களை எதிர்நோக்கியுள்ளோம் என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுது முதல் அமைச்சர் திசாநாயக்கவுடன் நெருக்கமான உறவைப் பேணி வந்தேன். நான் எப்பொழுதும் நீதிமன்றத்தில் சட்டத்துறையில் கடமைகளைச் செய்வதாக இருந்தால் அவருடைய விருப்பத்தையும் அனுதாபத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். முதலமைச்சர் திசாநாயக்க அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலும் என்னுடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார். அதன் மூலம் கண்டி மாவட்டத்திலுள்ள முழு முஸ்லிம் கிராமங்களுக்கு சென்று ஏதோ என்னால் இயன்றளவு சேவையை வழங்கக் கிடைத்தது.



அவர் சிங்களப் பாடசாலைகளுக்கு இரு மாடி வகுப்பறைக் கட்டடங்கள் வழங்கும் பட்சத்தில் முஸ்லிம் கிராமங்களிலுள்ள பாடசாலைக்கும் ஒரு கட்டிடம் வழங்கின. இப்படி வழங்கும் பட்சத்தில் அக்குறணை சாஹிராக் கல்லூரிக்கு கொண்டு செல்வதற்கு அப்பொழுது மாகாண சபையில் அமைச்சர் பதவியில் இருந்த ஹலீம் முயற்சி செய்தார். ஆனாலும் முதல் அமைச்சர் எனது வேண்டுகோளை ஏற்று கல்ஹின்னை அல்மனார் தேசிய பாடசாலைக்கு அதைப் பெற்றுக் கொள்ள வழி செய்தார். இன்றைக்கும் அப்பாடசாலையின் கட்டடத்தில் எனது பெயர் நாமம் சூட்டப்பட்டுள்ளது. அதன் திறப்பு விழா கல்லிலும் எனது நாமம் பொறிக்கப்பட்டு இருந்தது. அப்பொழுது அந்தக் கட்டடத்தில் பொறிக்கப்பட்ட பதாகையைக் கூட அகற்றினார்கள். மாற்றுக் கட்சியினர் பெயர் போடப்படக் கூடாது என்ற நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளின் ஆதரவாளர்கள் இருந்தார்கள். இப்படியான சவால்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டுதான் மாகாண சபை மூலம் மக்களுக்கு சேவையாற்ற வேண்டிய சூழல் இருந்தது. அதுவும் எமது ஆரம்ப காலம் என்பதால் ஆகப் பெரிய வேலைகளைச் செய்வது மிகவும் கடினமானவையாக இருந்தன.

ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து முஸ்லிம் கிராமங்களின் தேவையைக் கண்டறிந்து பல வேலைகள் செய்தேன். எனது சேவைகள் வித்தியாசமானவையாகும். மடவளைப் மதீனா தேசிய பாடசாலையை எடுத்துக் கொண்டால் அப்பாடசாலையில் நான் ஒரு வருடம் கல்வி கற்பித்தேன். அங்குள்ள சிற்றுண்டிச்சாலையானது ஒரு பெட்டிக் கடை மாதரி. அந்த சிறிய இடத்திற்குள் இருந்து நாம் தேநீர் அருந்துவோம். சாப்பிடுவோம். அந்த இடத்தில் ஒரு சிற்றுண்டிச்சாலையை நிர்மாணித்துக் கொடுத்தேன். அக்கட்டிடத்தில் எனது பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு அக்கட்டடத்தின் மூலம் மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா வருமானம் வந்து கொண்டிருக்கிறது.

கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி நிலையைப் பொறுத்தவரையில் நான் அங்கு இனங்கண்டு கொண்டது ஆசிரியைகளுக்கு ஓய்வு எடுத்துக் கொள்வதற்கான சரியானதொரு ஆசிரியர் ஓய்வறையில்லை. மலசலகூட வசதிகளுடன் கூடிய ஓய்வறை ஒன்றை நிர்மாணித்துக் கொடுத்தேன். அங்கு கற்பிக்க வரும் ஆசிரியைமார்கள் அதன் பயனை பூரணமானளவுக்கு இன்று வரை அடைந்து வருகின்றார்கள். இப்படி கண்டியிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கு பல உதவிகள் செய்துள்ளேன். அதே போன்று தெல்தோட்டை நகரில் அமைந்துள்ள முஸ்லிம் பாடசாலையின் மைதானம் நிர்மாணிக்கின்ற பணிகளிலும்ஈடுபட்டேன். விளையாட்டு மைதானம் என்பது பாடசாலைக்கு மிகவும் அத்தியாவசியமானதொன்று ஆகும். அதற்கான நிதியை ஒதுக்கி வேலை ஆரம்பிக்கின்ற வேலையில் அங்குள்ள அரசியல் பிரதிநிதி ஸ்ரீயாணி டேனியல் தடையாக இருந்தார். அப்பொழுது அவர் எனக்கு மைதானத்தை வெட்டுவதாக இருந்தால் ஆகாயத்திற்குச் சென்று வெட்டும்படி சவால் விட்டார்,அதை நான் சவாலாக எடுத்து செயற்பட்டேன். ஒரு நாள் அங்கு நின்று ஊர் மக்களின் ஆதரவுடன் அந்த இடத்தில் நள்ளிரவு 12 வரை வேலை செய்து வெட்டி முடித்தேன். அந்த ஊர் மக்கள் என்னைக் கண்டால் இன்றைக்கும் அந்த மைதானம் பயனுள்ளதாக இருக்கின்றது என்று வியப்புடன் கூறி மகிழ்வார்கள். இப்படி கண்டியிலுள்ள முஸ்லிம் கிராமங்களுக்கு பல்வேறுபட்ட அபிவிருத்தி தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுத்துள்ளேன்.

கட்சியின் தாபகத் தலைவர் எம். எச். எம். அஷ்ரஃப் அவர்கள் துறைமுக அபிவிருத்தி அமைச்சராக இருந்தார். கிழக்கு மாகாணத்திலுள்ள பெரு எண்ணிக்கையிலான இளைஞர்களுக்கு அதில் தொழில் வாய்ப்பினை வழங்கினார். அப்பொழுது கண்டி மாவட்டத்திலுள்ள இளைஞர்களுக்கும் அதில் தொழில் வாய்ப்பினைப் பெற்றுத் தர வேண்டும் என்று ஒரு தடவை கோரிக்கை விடுத்தேன். அதற்கிணங்க அவர் உடனே நீங்கள் முன் வைத்துள்ள கோரிக்கையானது மிகவும் நியாயமானது. 100 பேர்களைக் கொண்ட பெயர் பட்டியலைத் தருமாறு கேட்டார். நான் 100 பேர்களை அல்ல. நான் 150 பேர்களைக் கொண்ட பெயர் பட்டியலைத் தயாரித்தேன். கண்டியிலுள்ள ஒவ்வொரு ஊர்களிலும் இருந்து தெரிவு செய்தேன். நான் உறுதி செய்த அந்த அத்தனை இளைஞர்களுக்கும் தொழில் வாய்ப்பு கிடைத்தன. உடத்தலவின்னை என்ற ஊருக்குச் சென்றால் அங்கு 20 பேருக்கு அந்த தொழில் கிடைத்தது. பொதுத் தேர்தலின் போது மடவளையில் துப்பாக்கிச் சூட்டின் போது பலர் உயிரிழந்தனர். அதில் மூன்று பேர் துறைமுகத்தில் வேலை செய்தவர்கள் உயிரிழந்திருந்தார்கள். அந்த நபர்களுக்கான தொழில் வாய்ப்பை நானே வழங்கியிருந்தேன். அவர்கள் துரதிருஷ்டவசமாக உயிரிழந்து விட்டார்கள். கல்ஹின்னை. தெஹிதெனிய மடிகே, தெஹிஅங்க, உடுதெனிய, இப்படி பல ஊர்களிலும் இருந்து பரந்துபட்ட அடிப்படையில் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தேன். சிலர் தொழிலை விட்டுப் இராஜினாமா செய்து விட்டார்கள். அவர்கள் அவ்வாறு வெளியேறும் போது பெரு எண்ணிக்கையிலான கொடுப்பனவுகள் பெற்றுக் கொண்டார்கள். அதே போன்று இன்னும் ஒரு சிலர் அங்கு வேலை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்று மகிழ்ச்சியுடன் கூறலாம். அங்கு வேலை செய்த ஒவ்வொருவரும் பெரும் சம்பளம் பெற்றார்கள்.

இப்படி இந்த மாதிரியான சேவைகளைச் செய்துதான் கண்டி மாவட்டத்தில் ஸ்ரீ முஸ்லிம் காங்கிஸினை வலுப்படுத்தினேன். இந்த கட்சியின் வளர்ச்சிக் காலத்தில்தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெற்றது. கண்டி மாவட்டத்திலுள்ள சகல பிரதேச சபைகளுக்கும் போட்டியாளர்களைத் தெரிவு செய்கின்ற தேவை ஏற்பட்டது. அப்பொழுது முஸ்லிம் காங்கிரஸில் சேர்ந்து போட்டியிடுவதற்கு ஆட்கள் தெரிவு செய்வது மிகவும் குறைவு. அப்பொழுது நான்தான் கண்டி மாவட்ட அமைப்பாளர். அதனை நான்தான் பொறுப்பாக இருந்து செய்ய வேண்டும். ஒவ்வொரு பிரதேச சபையிலும் போட்டியிடுவதற்காக குறைந்தளவு வேட்பு மனுப்பத்திரத்தில் 25 வேட்பாளர்களுடைய பெயர்கள் இருத்தல் வேண்டும். கண்டி மாநகர சபை, அக்குறணை பிரதேச சபை, ஹறிஸ்பத்துவ, கங்ஹவெட்டக்கொரல ஆகிய உள்ளிட்ட கண்டியில் உள்ள அனைத்து பிரதேச சபைகளுக்குமான வேட்பாளர்களைத் தெரிவு செய்தேன்.

கண்டி மாநகர சபைக்கு அஸ்மி மரைக்கார் அவர்களை அறிமுகப்படுத்தினேன். அவர் வெற்றிபெற்றார். அவர் இப்பொழுதும் ஹக்கீம் அவர்களைப் பார்த்து எனக்கு அரசியல் முகவரி தந்தவர் பாரூக் அவர்கள்தான் நீங்கள் இல்லை என்று அழுத்தமாகக் கூறுவார். அவர் வீட்டுக்குச் சென்று அவரை சந்தித்து தேர்தலில் களமிறக்கி வெற்றி பெறச் செய்தேன். அவர் அன்று முதல் இன்று வரை கடைசியாக உள்ளூராட்சி மன்ற சபை இருக்கும் வரையிலும் பதவி வகித்துள்ளார். அவர் தொடர்ந்து போட்டியிட்டு தோல்வியடையாமல் வெற்றி பெற்று முஸ்லிம் காங்கிஸின் பெருமையை நிலை நாட்டி வந்துள்ளார்.

பாத்ததும்பர பிரதேச சபைக்காக வேட்பு மனுக்கலைத் தாக்கல் செய்ய வேண்டும். அதற்காக பெயர் பட்டியலைத் தயார் செய்து கொண்டிருந்தேன். ஆனால் வேட்பாளர்களைத் தேடுவது மிகவும் கடிமான இருந்தது. அப்பொழுது மடவளையைச் சேர்ந்த ரியாஜ் அவர்கள் என்னிடம் வழக்கு ஒன்றுக்காக வந்தார். அவரிடம் இந்த விடயத்தைக் கூறினேன். அப்பொழுது அவர் 'எங்கள் ஊரில் ஒரு காணிப்பிரச்சினை இருக்கிறது. அதற்கு மக்கள் எல்லோரும் ஒன்றுபடுவார்கள். அதனைத் தீர்த்து தந்தால் வேலை சுமூகமாக முடியும். அந்த இடத்திலே பெயர் பட்டியலைப் போடுவோம்' என்றார் மடவளை ரியாஜ். குறித்தபடி அந்த இடத்திற்குச் சென்றேன். அங்கு கலந்துரையாடியதன் பின்னர் அந்தப் பிரதேச சபைக்கான வேட்பாளர்கள் 27 பேரை மிகவும் சுலபமாகப் போட்டுக் கொண்டேன். அந்த ரியாஸ் இன்று வரையிலும் மடவளையில் அரசியலில் ஒரு பேசுபொருளாக இருந்து வருகின்றார்.

அதேமாதிரி தெஹிஅங்கயை ஊரைப் பொறுத்தவரையில் சட்டத்தரணி பஸ்வி வாஹிட் அவர்களை அறிமுகப்படுத்தி அரசியலுக்குள் பிரவேசம் செய்ய வைத்தேன். இப்படிப் எதிர்பார்க்காத அளவுக்கு பல புதுப்புது அரசியல் முகங்களை அறிமுகம் செய்துள்ளேன். தெல்தொட்டை என்றால் இல்லியாஸ் மௌலவி. தெல்தெனிய என்றால் அபூஹனிபா மாஸ்டர் என எத்தனையோ புதிய அரசியல்வாதிகளைக் குறிப்படலாம். இத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் இத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக 17 பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். அவர்களுடைய வெற்றிக்குப் பின்புலமாக இருந்து உழைத்தவன் என்ற வகையில் நான் இன்று மிக்க சந்தோசம் அடைகின்றேன். அந்த நேரத்தில் இப்போதுள்ள கட்சித் தலைவர்கள் இருக்கவில்லை. நான் கட்சின் ஆரம்ப கால வளர்ச்சிக்காக மிகவும் கஷ்டப்பட்டுள்ளேன். அதற்காக மாகாண சபையில் பெஜரோ வாகனம் சன்மானமாகக் கிடைத்தது. மக்கள் மாகாண சபை உறுப்பினர் பாரூக் அவர்களுடைய வாகனம் பொது மக்களுடைய வாகனம் என்பார்கள். அதில் எங்கு வேண்டுமானாலும் எல்லோரும் பயணம் செய்யலாம். அதில் யாரையும் ஏற வேண்டாம் என்று சொல்ல மாட்டேன். அந்த வாகனம் மக்களுடைய வாக்கினால் கிடைக்கப் பெற்ற வாகனம். அதன் உரிமையாளர்கள் மக்கள். அவர்கள் அங்கு போக வேண்டும். இங்கு போக வேண்டும் என்பார்கள். நான் சலிக்காமல் அவர்கள் சொல்வதைச் செய்தேன். அந்த வகையில் இப்படி எல்லாம் எல்லோரையும் ஏற்றிக் கொண்டு கட்சியாக அங்குமிங்கும் ஓடி கட்சியை வளர்த்தேன்.

அதாவது கிழக்கு மாகாணத்திற்கு வெளியே கண்டி மாவட்டத்தை முஸ்லிம் காங்கிரஸின் கோட்டையாக மாற்றியமைத்த வேளையை செய்தேன்.

அதன் பின்னர் கண்டி மாவட்ட அமைப்பாளர் பதவியை தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களுக்கு பாரம் கொடுத்து விட்டு ஏனைய தேசிய கட்சியின் விவகாரங்களில் ஈடுபட்டேன்.

**இன்னும் தொடரும்**

நேர்காணல்: இக்பால் அலி ...



கிழக்கு மாகாணத்தில்

## 1,124 பாடசாலைகளுக்கு சூரிய மின்சக்தி திட்டம்

*கிழக்கு மாகாணத்தில் முதன்முறையாக 1,124 பாடசாலைகளுக்கு சூரிய மின்சக்தி திட்டத்தை அம்மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்துள்ளார்.*

*கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் முயற்சியால் முதற் கட்டமாக திருகோணமலையில் 348 பாடசாலைகளுக்கு Solar Panel வழங்கி வைக்கப்பட்டது.*

*கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் மின்சார கட்டணம் செலுத்த இயலாத நிலையில் பல்வேறு பாடசாலைகள் காணப்படுவதாக ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, கிழக்கு மாகாணத்தில் 1,124 பாடசாலைகளில் சூரிய மின்சக்தி திட்டத்தை அவர் ஆரம்பித்து வைத்துள்ளார்.*



*இந்த திட்டத்தை ஆரம்பித்து வைத்த ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் பாராட்டு மற்றும் நன்றி தெரிவித்துள்ளனர்.*

## தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்ற அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி

***அட்டாளைச்சேனை குறூப் நிருபர்***

*முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தால் மாணவர்களிடையே அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட போட்டியில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி நான்கு போட்டிகளில் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தை பெற்றமையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரால் மிக விமரிசையாக நடத்தப்பட்டது. அக்கரைப்பற்று ஹல்லாஜ் மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி டாக்டர் கே.சமீம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை நீதவான் எம்.எஸ்.சம்சுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.*

*கொழும்பு சாஹிரா கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டியில் ரக்சூரபான், கஸீதா, அரபு எழுத்தணிக்கலை, அரபுத்தமிழ் இலக்கியம் ஆகிய போட்டிகளில் இக்கல்லூரி மாணவர்கள் முதலாமிடத்தை பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில் பங்கு கொண்ட மாணவர்கள், அவர்களை பயிற்றுவித்த வளவாளர்கள், உதவிகள் வழங்கிய ஆசிரியர்கள் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.*




ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.09.18
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5600 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.27,991,760.00
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 0 0 1 4 3 4

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 175
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 1 4 3 4

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3842 — சீட்டிழுப்பு திகதி 2024.09.18 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.63,260,648.00
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 18 45 48 62 — விசேட எழுத்து D — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 96323

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1948 — 2024.09.18 — 56315 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.446,451,206.00
ஆங்கில எழுத்து T — சுப்பர் இலக்கம் 07 — வெற்றி இலக்கங்கள் 29 40 43 55
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.09.18 — சீட்டிழுப்பு இலக்கம் 426
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 3 9 5 7 1 3
L7 எழுத்து A
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 20,035,057.60

ராசி சுப பலன் — திகதி 2024.09.18 — சீட்டிழுப்பு இலக்கம் 909 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 01 11 30 50 — தனயோக இலக்கம் 02281 — நாளுக்கான விதி எண் 27

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1630 — 2024.09.18 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,000,000.00
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 09 21 40 44 — விசேட எழுத்து X — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 19841

# கிழக்கின் குரல்



மட்டக்களப்பு மாவட்டத்தில்

## ஜனாதிபதி தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகின்றன

அரச அதிபர் தெரிவிப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

ஜனாதிபதி தேர்தல் நாளை 21ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டு வருவதாக, அம்மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட அரசாங்க அதிபருமான ஜஸ்டினா முரளிதரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு 449,686 பேர் தகுதி பெற்றுள்ளதுடன், அவர்கள் வாக்களிப்பதற்காக 442 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.



கடந்த தேர்தல்களின் போது மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலக நிர்வாக எல்லைக்கு உட்பட்ட மாந்தீவு தொழுநோய் வைத்தியசாலையில் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வந்த இரண்டு நோயாளர்களுக்காக மாந்தீவில் விசேட வாக்களிப்பு நிலையம் நிறுவப்பட்டு வாக்களிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்நிலையில் தற்சமயம் இந்த இரண்டு நோயாளர்களும் மாந்தீவு வைத்தியசாலையில் இல்லாமையால் இந்த தேர்தலில் இவர்கள் இருவரும் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை தேர்தல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. இவர்கள் இருவருக்கும் மட்டக்களப்பு புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் மண்டப இல. 3 இல் வாக்களிப்பதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இவ்வாக்களிப்பு நிலையத்துக்கு இவர்கள் இருவரும் வருகை தந்து தமது வாக்குகளை பதிவு செய்யலாம். பொதுவான வாக்கெடுப்பு நிலையத்தில் பின்பற்றப்படும் சகல நடைமுறைகளும் இங்கு பின்பற்றப்படுமென, மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் எம். பி.எம்.சுபியான் தெரிவித்தார்.

## திருமலையை சேர்ந்தவர் சுவிஸில் சடலமாக மீட்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**



சுவிஸ் நாட்டில் வசித்து வந்த திருகோணமலை செல்வநாயகபுரம் பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் அகால மரணமடைந்துள்ளார்.

சுவிஸ் சூரிச் நகரின் அடுக்குமாடி கட்டட தொகுதியில் வசித்து வந்த கோபிநாத் என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளதாக, உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர் வசித்து வந்த அறையில் அண்மையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகத்தின் அடிப்படையில் அவருடைய அறையில் வசித்து வந்த வெளிநாட்டவர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர் பெண் குழந்தையொன்றின் தந்தையாவார்.

இந்த சம்பவம் தொடர்பாக சுவிஸ் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய புரட்டாதி பௌர்ணமி பூஜை

**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்றில் முதல் தடவையாக நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தில் புரட்டாதி பௌர்ணமி பூஜை கடந்த செவ்வாய்க்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஆலய குரு சிவஸ்ரீ சபா கோவர்த்தன சர்மா தலைமையில் இந்த சிறப்பு பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

இந்நிலையில் மேற்படி ஆலய பரிபாலன சபை தலைவர் கலாநிதி கே.ஜெயசிறில் தெரிவித்த போது, அம்மனுக்கு உரிய இந்த நன்நாளில் எமது ஆலயத்தில் முதல் தடவையாக புரட்டாதி பௌர்ணமி அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. ஏராளமான பக்தர்கள் கலந்து சிறப்பித்துள்ளதாக தெரிவித்தார்.

இதன்போது ஆலய பரிபாலன சபை ஆலோசகர் வி.ரி.சகாதேவ ராஜா புரட்டாதி பௌர்ணமியின் சிறப்பு பற்றிய சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார். இந்த சொற்பொழிவில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



## மட்டக்களப்பில் வாக்குகள் எண்ணும் நிலையமாக இந்து கல்லூரி தயார்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

ஜனாதிபதி தேர்தலுக்கான மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்குகளை எண்ணும் நிலையமாக மட்டக்களப்பு இந்துக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், வாக்குகள் எண்ணும் நிலையத்தில் வாக்குகள் எண்ணும் அறைகள் உட்பட நிலைய தயார்ப்படுத்தல் நடவடிக்கைகள் மிகவும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக, மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான ஜஸ்டினா முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் வாக்குகள் எண்ணுவதற்கான தயார்ப்படுத்தலில் பொலிஸ் திணைக்களம், இலங்கை மின்சார சபை, சுகாதார திணைக்களம், சமூக சேவை திணைக்களம், மாவட்ட செயலகம் தேர்தல் திணைக்களம் உட்பட பல்வேறு திணைக்களங்கள் துரித தயார்ப்படுத்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளன.




மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 இலட்சத்து 49 ஆயிரத்து 686 வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு ஆகிய தொகுதிகளில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில் மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் 210,293 வாக்காளர்களும் கல்குடா தேர்தல் தொகுதியில் 134,104 வாக்காளர்களும் பட்டிருப்பு தொகுதியில் 105,289 வாக்காளர்களும் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## காட்டு யானைகளின் தொல்லையால் மக்கள் அசௌகரியம்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு, நிந்தவூர் மற்றும் சம்மாந்துறை பிரதேசங்களில் மாலை மற்றும் இரவு வேளைகளில் மக்களுக்கு தொல்லை கொடுத்து வந்த காட்டு யானைகள் தற்போது பகல் வேளையிலும் மக்கள் நடமாட்டமுள்ள இடங்களுக்கு சர்வ சாதாரணமாக நடமாட ஆரம்பித்துள்ளதாக, அப்பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

கூட்டம் கூட்டமாகவும் தனியாகவும் பிரதேசங்களுக்குள் நுழையும் காட்டு யானைகள் குடியிருப்புகள், மதில்கள் மற்றும் பயன் தரும் தென்னை, வாழை மரங்களுக்கும் பாரிய சேதத்தை உண்டுபண்ணி வருகின்றன. அண்மைக்காலமாக காட்டு யானைகளின் தொல்லையால் இப்பிரதேசங்களில் பல உயிர்களும் காவுகொள்ளப்பட்டுள்ளதாகவும், அப்பிரதேச வாசிகள் மேலும் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில்

## தேர்தல் கடமைகளுக்காக 6,750 உத்தியோகத்தர்கள்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் கடமை மற்றும் வாக்குகள் எண்ணும் பணிகளுக்காக 6,750 அரசாங்க உத்தியோகத்தர்கள் ஈடுபடவுள்ளதாக, அம்மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் எம்.பி.எம். சுபியான் தெரிவித்தார்.

அங்கு நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். மட்டக்களப்பில் 1,514 பொலிஸார் உட்பட விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடவுள்ளனர். இந்நிலையில் இதுவரையிலும் வாக்காளர் அட்டை கிடைக்காத வாக்காளர்கள் நேரடியாக தபால் நிலையங்களுக்கு சென்று வாக்காளர் அட்டையை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாகவும், அவர் கூறினார்.

இதேவேளை இதுவரையில் 52 முறைப்பாடுகள் தேர்தல் பிணக்குகளை ஈர்க்கும் நிலையத்துக்கு கிடைத்துள்ளதுடன், தேர்தல் முறைப்பாட்டு காரியாலயங்களாக போரதீவுப்பற்று மற்றும் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகங்கள் கடந்த 13ஆம் திகதியிலிருந்து செயற்பட்டு வருகின்றன. தேர்தல் கடமைக்காக உணர்த்தப்பட்டுள்ள அதிகாரிகள் உரிய நேரத்துக்கு தேர்தல் கடமைக்கு செல்ல வேண்டுமென்பதுடன், வாக்குகள் எண்ணும் உத்தியோகத்தர்கள் அன்றையதினம் பிற்பகல் 4.00 மணிக்கு தேர்தல் மத்திய நிலையமாக காணப்படும் மட்டக்களப்பு இந்து கல்லூரிக்கு அறிக்கையிடுமாறும் அவர் மேலும் கூறினார்.

## சாய்ந்தமருதில் மீலாத் தின நிகழ்வு





கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்ட மீலாதுன் நபி பிறந்த தினம் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் அண்மையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

உதவி பிரதேச செயலாளர் எம். ஐ.மு.ஆபிகாவின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றின்ஸான், உதவி பிரதேச செயலாளர் என்.எப். அய்மா, நிர்வாக பிரிவு பிரதம முகாமையாளர் ஏ.சீ.முஹம்மட், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் நிலைய பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான், சாய்ந்தமருது பிரதேச முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் அஸீம் (நளீமி), கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் ஏ.எம். தௌபீக் (நளீமி), கலாசார பிரிவை சார்ந்த உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட தஃவா இஸ்லாமிய கலாபீட மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். ஒருங்கிணைப்பாளர் ஏ.எச். சபிக்காவின் நெறிப்படுத்தலின் கீழ் இனிதே நடைபெற்ற இந்நிகழ்வில் தஃவா இஸ்லாமிய கலாபீட மாணவர்களின் இஸ்லாமிய நிகழ்வுகளும் மற்றும் அஷ்ஷெய்க் மௌலவி ஏ.எம்.தௌபீக் (நளீமி) முகம்மது நபி (ஸல்) அவர்களின் குண இயல்புகளும் வாழ்க்கை நடைமுறைகளும் என்ற தலைப்பில் மார்க்க சொற்பொழிவும் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட மாணவர்கள் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

அம்பாறையில்

## விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாத வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்ட வர்த்தக நிலையங்களில் பொருட்கள், சேவைகளுக்கான விலை மற்றும் கட்டணத்தை நுகர்வோரின் பார்வைக்கு காட்சிப்படுத்தாத வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என். எம்.சாலிய பண்டார தெரிவித்தார்.

கிராமப்புறங்களிலுள்ள வர்த்தக நிலையங்களில் கூடுதல் விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவித்த முறைப்பாட்டை தொடர்ந்து அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரமவின் ஆலோசனைக்கமைய பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சோதனையில் ஈடுபட்டு வருதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் கட்டணத்தை மீறி அதற்கு மேலதிகமாக பொருட்களை விற்பனை செய்தல், அறவீடு செய்வதை தவிர்க்குமாறும் வர்த்தகர்களிடம் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்தியாவசிய பொருட்களை பதுக்கி வைத்தல், வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், பொருட்களை பதுக்கி வைத்து சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்தல், நுகர்வுக்கு பொருத்தமில்லாத பொருட்களை விற்பனை செய்தல் பாரிய குற்றமாகும்.

காலாவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்தல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதி காலத்தை வழங்காமை உள்ளிட்ட போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## முஸ்லிம் கலாசார போட்டியில் அக்கரைப்பற்று கல்வி வலய மாணவர்கள் வெற்றி

**அட்டாளைச்சேனை மத்திய நிருபர்**



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான முஸ்லிம் கலாசார போட்டியில் பங்குபற்றிய அக்கரைப்பற்று கல்வி வலய பாடசாலை மாணவர்கள் 7 பேர் முதலாமிடத்தை பெற்றுள்ளனர்.

இந்நிலையில் ஒரு மாணவர் இரண்டாமிடத்தையும் மற்றுமொரு மாணவர் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள், இம்மாணவர்களுக்கு வழிகாட்டிய அதிபர், பயிற்றுவித்த ஆசிரியர்கள், உறுதுணையாக இருந்த பெற்றோர் ஆகியோருக்கு அக்கரைப்பற்று வலய கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் பாராட்டு தெரிவித்துள்ளார்.

28 போட்டி நிகழ்வுகளில் கிழக்கு மாகாணம் 16 முதலாமிடங்களையும் 3 இரண்டாமிடங்களையும் 4 மூன்றாமிடங்களையும் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தை பெற்றுள்ளது. இந்நிலையில் 11 போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றிய அக்கரைப்பற்று கல்வி வலய மாணவர்கள் 9 பேர் வெற்றி பெற்றுள்ளனர். இப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகா வித்தியாலய மாணவர்கள், அப்பாடசாலை அதிபர் ஏ.ஜி.பஸ்மில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பரிசு வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# கலேவல, நமடகஹவத்த அல் புர்கானில் சிறப்பாக இடம்பெற்ற மீலாத் தின நிகழ்வு

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேரடி ஒலிபரப்பு






















இவ்வருட (2024) மீலாத் தின நிகழ்ச்சிகள் மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை தேர்தல் தொகுதியில் கலேவல நமடகஹவத்த அல் புர்கான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் (16) வெகு விமர்சையாக நடைபெற்றது. இம்மீலாத் தின நிகழ்ச்சியினை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து அல் புர்கான் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் சட்டத்தரணி டப்ளியு. எம். சமீர் தலைமையில் இப்பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பாடசாலை பழைய மாணவ சங்க உறுப்பினர்கள், இப் பகுதி பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் , ஊர் பிரமுகர்கள் ஒன்றிணைந்து இதற்கான பூரண ஏற்பாடுகளை மேற்கொண்டனர்.

மீலாதுன் நபியை முன்னிட்டு வருடாந்தம் நடைபெற்று வரும் மீலாத் தின நிகழ்வுகள், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையினால் ஒலிப்பதிவு செய்யப்பட்டு தேசிய வானொலியில் கடந்த காலங்களில் ஒலிபரப்பு செய்யப்பட்டு வந்த இந்நிகழ்ச்சி, கடந்த 2023 ஆண்டு முதல் இந் நடைமுறை மாற்றப்பட்டு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையினால் மீலாத் நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு நேரடியாக வானொலியில் அஞ்சல் செய்யும் முறை முதல் முறையாக குருணாகல் மாவட்டத்தில் கெகுனுகொல்ல தேசிய பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க, பாடசாலை அதிபர் ஆகியோர் இங்கு உரையாற்றினர். அதிபர் தனது உரையில், பல்வேறு வழிகளில் தற்போது வளர்ச்சி கண்டு வரும் இப்பாடசாலையின் இடநெருக்கடி காரணமாக புதிய காணியொன்றினை கொள்வனவு செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2025 ஆம் ஆண்டில் உயர் தர விஞ்ஞான , கணித பிரிவுகளுக்கான விசேட செயற்திட்டமொன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றார்.

முஸ்லிம் சேவை பணிப்பாளர் திருமதி பாத்திமா ரினோஸியா மற்றும் முன்னாள் முஸ்லிம் சேவை பணிப்பாளர் அஹ்மத் முனவ்வர், நிகழ்ச்சி தயாரிப்பு பிரதிப் பணிப்பாளர் மயூரி அபேசிங்க, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மூத்த அறிவிப்பாளர்கள், செய்தி ஆசிரியர்கள், கலைஞர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் அறிவிப்பாளர்களாகவும், தயாரிப்பாளர்களாகவும் பணியாற்றி வரும் ஏ.எம்.எம்.ரழீன், சாகிர் மொஹமட் ஆகிய இருவரும் அல் புர்கான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய தினம் காலை 11 முதல் 12 மணி வரை மௌலூது மஜ்லிஸ் இடம்பெற்று பிற்பகல் 1 முதல் 5 மணி வரை நிகழ்சிகள் யாவும் வானொலியில் நேரடி அஞ்சல் செய்யப்பட்டன. இலங்கை வானொலி வரலாற்றில் மௌலூது மஜ்லிஸ் பாடசாலை ஒன்றில் வானொலியில் நேரடியாக அஞ்சல் செய்யப்படுவது இதுவே முதல் தடவையாகும் என முஸ்லிம் சேவை பணிப்பாளர் பாத்திமா ரினோஸியா தெரிவித்தார். மேலும் வானொலி கலைஞர்களின் சஞ்சாரம், சுவடுகள் போன்ற பல கலை நிகழ்ச்சிகளும், பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் கவியரங்கும் இங்கு இடம்பெற்றன.

முஸ்லிம் சேவைக்கு உதவி செய்து வரும் சமூக சேவையாளர்களான தேசமானிய தேசகீர்த்தி தொழிலதிபர் கலாநிதி ராயிஸ் மீரா , தொழிலதிபர் எம்.ஏ.எம். இல்யாஸ் ஹாஜியார், தொழிலதிபர் ஏ.எம்.அஸ்ரப் ஹாஜியார், கலாபூஷணம் எஸ். எம். ஜின்னா, கெபே அமைப்பின் பணிப்பாளர் மின்னாஸ் மக்கீன், ஆகியோர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவரால் பொன்னாடை போர்த்தி இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தலைவர் ஹட்சன் சமரசிங்க, முன்னாள் முஸ்லிம் சேவை பணிப்பாளர் அஹ்மத் முனவ்வர், நிகழ்ச்சி தயாரிப்பு பிரதிப் பணிப்பாளர் மயூரி அபேசிங்க, முஸ்லிம் சேவை பணிப்பாளர் பாத்திமா ரினோஸியா, திருமதி சலீம் ஆகியோருக்கு பாடசாலை நிர்வாகத்தினால் நினைவுச் சின்னம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

அதேபோல், கலந்துகொண்ட மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டதோடு, பாடசாலைகளுக்கும் நினைவுச்சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன. அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் களுத்துறை, காலி மாவட்டங்களுக்கான பணிப்பாளர் எம்.ஐ. இஸ்மத் உட்பட கல்விமான்கள், புத்தி ஜீவிகள், பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், ஊர் பிரமுகர்கள் என பெருந்திரளான மக்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**படமும் தகவலும்:**
**எம். சதூர்தீன் (JP), (மாத்தளை சுழற்சி நிருபர்)**
















# யாழில் ஜனாதிபதித் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வு

(யாழ்.விசேட நிருபர்)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பெறுபேறுகளை தயாரித்து வெளியிடும் நிலையத்தில் கடமையாற்றவுள்ள அலுவலர்களுக்கான செயலமர்வு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றைய தினம் புதன்கிழமை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் கருத்துத் தெரிவித்த தெரிவத்தாட்சி அலுவலர்,

நாளை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்கெண்ணும் நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பெறுபேற்றை தயாரித்து வெளியிடும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள 511 வாக்களிப்பு நிலையங்களினதும் வாக்குகளை எண்ணுவதற்காக, 41 வாக்கெண்ணும் நிலையங்களும், அஞ்சல் வாக்குகளை எண்ணுவதற்காக 14 வாக்கெண்ணும் நிலையங்களுமாக மத்திய கல்லூரியில் 55 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு வாக்கெண்ணும் நிலையங்களின் பெறுபேறுகளையும் செவ்வை பார்ப்பதே பிரதான பணியாகும் என்பதால், நியமிக்கப்பட்ட அலுவலர்களின் பங்களிப்பானது காத்திரமானதுடன் மிகவும் வினைத்திறனாகவும் இருத்தல் வேண்டும் என அவர் தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களின் பெறுபேறுகளையும் தொகுத்து யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் இறுதிப் பெறுபேற்றை வெளியிட வேண்டி இருப்பதால் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு நீதியான, சுதந்திரமான தேர்தல் நடைபெற ஒத்துழைப்பை நல்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர் கேட்டுக் கொண்டார்.

## கட்டிலில் உறங்கியவர் தரையில் வீழ்ந்து மரணம்

(யாழ்.விசேட நிருபர்)

தூக்கத்தில் கட்டிலிலிருந்து சரிந்து கீழே விழுந்தவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள உணவகமொன்றில் கடமையாற்றி வரும் காத்தான்குடியை சேர்ந்த நீரான் சாய்பு முகமது மர்சூ என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கட்டிலில் இருந்து கீழே விழுந்து மயங்கிய நிலையில் இவர் காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து அவரை அங்கிருந்தவர்கள் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வடக்கின் உதயம்

## குப்பிவிளக்கிலிருந்து ஆடையில் தீப்பற்றியமையால் மூதாட்டி உயிரிழப்பு

(யாழ்.விசேட நிருபர்

குப்பி விளக்கிலிருந்து ஆடையில் தீ பற்றியமையால் மூதாட்டியொருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாழ் பகுதியை சேர்ந்த நிக்கலஸ்ப் பிள்ளை வல்லமரி (வயது 88) எனும் மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி இரவு வீட்டின் வெளியே குப்பி விளக்குடன் சென்ற போது, விளக்கின் தீ ஆடையில் பற்றிக்கொண்டது. இதனையடுத்து வீட்டார் தீயை அணைத்து, மூதாட்டியை காப்பாற்றி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## யாழில் கிருமி தொற்றினால் குழந்தை உயிரிழப்பு

(கரவெட்டி தினகரன் நிருபர்)

கிருமி தொற்று காரணமாக குழந்தையொன்று உயிரிழந்துள்ளது. சுன்னாகம் பகுதியை சேர்ந்த குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த 01ஆம் திகதி தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் தாய் குழந்தையை பிரசவித்துள்ளார்.

இந்நிலையில் குழந்தைக்கு தாய் பால் ஊட்டிய வேளை, பால் குழந்தையின் வாயிலிருந்து வெளியே வந்துள்ளது.

இதனையடுத்து தாயும் குழந்தையும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் குழந்தை கடந்த 16ஆம் திகதி உயிரிழந்துள்ளது. கிருமி தொற்று ஏற்பட்டமையே உயிரிழப்புக்கு காரணமென பிரேத பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.

## தேர்தல் தினத்தன்று மனிதவுரிமை ஆணைக்குழுவும் களத்தில்

(யாழ் . விசேட நிருபர் )

தேர்தல் தினத்தன்று வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பதை கண்காணிக்கும் முகமாக களபணிகளில் மனிதவுரிமை ஆணைக்குழுவின் அலுவலகர்கள் ஈடுபடவுள்ளதாக இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, 'ஜனாதிபதி தேர்தல் 2024' கண்காணிப்பு நடவடிக்கையை எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் தினத்தன்று வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பதை கண்காணிப்பதற்கும், தேவை ஏற்பட்டால், களவிஜயம் மேற்கொள்வதற்கும் ஆணைக்குழுவின் அலுவலர்கள் கடமையிலிருப்பார்கள்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகமும் நாளை 21 ஆம் திகதி தேர்தல் கண்காணிப்பு கடமைகளுக்காக திறந்திருக்கும் என்பதுடன் வாக்காளர்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்துவதில் ஏதேனும் உரிமை மீறலை எதிர்கொண்டால் 0212222021 மற்றும் 070 3654910 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு






(மன்னார் குறூப் நிருபர் )

மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட மணி மாஸ்டர் விருது திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

வி.எம்.சி.ரி (V.M.C.T) நிறுவனத்தின் இயக்குநர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டார்.

கௌரவ விருந்தினரான மன்னார் உதவி கல்வி பணிப்பாளர் பா.ஞானராஜ் மற்றும் பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற திருக்குறள் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பெறுமதியான பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு அவரின் மகத்தான சேவையை பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில் மீலாத் விழா சிறப்பாக நடைபெற்றது





மாணவர்களின் கிராஅத் இஸ்லாமிய கீதங்கள், சந்தர்ப்ப துஆக்கள், கஷீதா, பேச்சு, கவிதைகள் போன்ற நிகழ்வுகளோடு கண்ணிய மிக்க உலமாக்களின் சொற்பொழிவும் மாணவர்களின் அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சியும் நடைபெற்றது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் என்.எம்.எம்.இர்பான் (நூரி), ஏ.எம்.றழீம் (மக்கி), கலாபூஷனம் பரீட் இக்பால் ஆகியோர் இணைந்து அறிவுக் களஞ்சியப் போட்டியை வெகு சிறப்பாக நடாத்தினர். வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படம் : கலாபூஷணம் பரீட் இக்பால்)



உரும்பிராய் ஞான வைரவ சனசமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற முழுநிலா கலந்துரையாடலைத் தொடர்ந்து உரும்பிராயைச் சேர்ந்த ச.விவேகானந்தன் என்பவரால் ஒரு தொகுதி ஆங்கிலப் புத்தகங்கள் நூலகத்துக்கு அன்பளிப்பாக சனசமூக நிலைய தலைவர் இரா.ஜெயக்குமாரிடம் வழங்கப்பட்டன. அருகில் கருத்துரை வழங்கிய ம.செல்வின் மற்றும் சனசமூக அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர்.

## யானைத் தாக்குதலினால் ஆசிரியர் வைத்தியசாலையில்

(ஓமந்தை விஷேட நிருபர்)



காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகிய ஆசிரியர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியிலிருந்து கேப்பாபிலவு வீதியால் பாடசாலைக்கு சென்றுக் கொண்டிருந்த போது புதுக்குடியிருப்பு கள்ளியடி பாலத்தடியில் நின்றுக் கொண்டிருந்த யானை வீதியை வழிமறித்து தாக்குதல் நடத்தியதில் ஆசிரியர் மோட்டார் சைக்கிளுடன் தூக்கி எறியப்பட்டார்.

ஆசிரியர் காயங்களோடு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியர் நடனசபாபதி சிவசோதி கணுக்கேணி முள்ளியவளையை சேர்ந்த 28 வயதுடைய உடையார் கட்டு குரவில் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் என்பதும் குறிப்பிடதக்கது.

# மலைச்சாரல்

## நுவரெலியாவில் வர்த்தக நிலைய கட்டடம் திறப்பு





(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

நுவரெலியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலைய கட்டடம் நுவரெலியா மேலதிக மாவட்ட செயலாளர் திருமதி டினிகா கவிசேகர தலைமையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

நுவரெலியா நகர அபிவிருத்தி திட்டத்துடன் இணைந்து இவ்வர்த்தக நிலையம் புனரமைக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் பெண் தொழில் முயற்சியாளர்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கில் இவ்வர்த்தக நிலையம் புனரமைக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபடவின் முழு வழிகாட்டுதலிலும் நிதியுதவியிலும் வர்த்தக நிலையம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டத்தின் கீழ் 30 பெண் தொழில்முயற்சியாளர்களின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி நவீனமயமாக்கப்பட்டுள்ளதுடன், நுவரெலியா மாவட்ட செயலக ஊழியர்கள், USAID SCORE செயற்பாட்டின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மாத்தளை மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

(மாத்தளை சுழற்சி, தம்புள்ள தினகரன் நிருபர்கள்)

மாத்தளை மாவட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாத்தளை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்ட செயலாளருமான தேஜானி திலகரத்ன தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் மாத்தளை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 4 இலட்சத்து 29 ஆயிரத்து 91 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

இம்மாவட்டத்தில் நான்கு தேர்தல் தொகுதிகளில் 330 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் 3300 அரச அதிகாரிகள் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

தம்புள்ளை தேர்தல் தொகுதியில் 108 வாக்களிப்பு நிலையங்களில் 151,373 பேரும் மாத்தளை தேர்தல் தொகுதியின் 68 வாக்களிப்பு நிலையங்களில் 95,694 பேரும் இரத்தொட்டை தேர்தல் தொகுதியில் 83 வாக்களிப்பு நிலையங்களில் 104,856 பேரும் லக்கல தேர்தல் தொகுதியில் 70 வாக்களிப்பு நிலையங்களில் 78,118 பேரும் இம்முறை வாக்களிக்க தகுதிப் பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் நூற்றாண்டு விழா



(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

தலவாக்கலையில் அமைந்துள்ள இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விசேட வைபவமொன்று அதன் வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இலங்கை தேயிலை சபையின் தலைவர் நிராஜ் டி மெல், இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர் கலாநிதி எம். ஏ. பி. ரணதுங்க, பிரதிப் பணிப்பாளர் கலாநிதி கே. ரவீந்திரநாத், தாவர நோயியல் துறைத் தலைவர் டொக்டர் கங்கா சின்னையா என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## தொழிலதிபர் சம்பத் கமகே கொலை: பிரதான சந்தேகநபர் கைது

தொழிலதிபர் சம்பத் கமகேவை கட்டையால் அடித்துக் கொலை செய்த வழக்கின் பிரதான சந்தேகநபர் நேற்று (19) கலவான வெத்தாகல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இக்கொலை இடம் பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொலைச் சம்பவம் தொடர்பான ஆதாரங்கள் எதுவும் இல்லாத நிலையில், அத்துருகிரிய பொலிஸ் நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில் சந்தேகநபர் குறித்த தகவல்களை திரட்டியுள்ளனர்.

தெடிகமுவ வெலிபில்லேவ பிரதேசத்தில் வசிக்கும் வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹோமாகம, பனாகொட சமகி மாவத்தையிலுள்ள வர்த்தகர் சம்பத் கமகேவின் இல்லத்தில் இக்கொலை இடம்பெற்றது.

சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# பங்களாதேஷ் இராணுவத்திற்கு நீதி அதிகாரம்: தேவையெனில் 'சூடு' நடத்தவும் அனுமதி



நாட்டில் நீதி ஒழுங்கை மேம்படுத்துவதற்கும் நாசகார செயல்களைத் தடுப்பதற்கும் பங்களாதேஷ் இராணுவத்திற்கு அந்நாட்டு இடைக்கால அரசு இரண்டு மாதங்களுக்கு நீதி அதிகாரத்தை வழங்கியுள்ளது.

பொது நிர்வாக அமைச்சு அரசின் இந்த முடிவு குறித்த அறிவிப்பை கடந்த செவ்வாயன்று வெளியிட்டதோடு இது உடன் அமுலுக்கு வரும் வகையில் செயற்படுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இராணுவத்தின் நியமன அதிகாரிகளுக்கு இந்த அதிகாரங்கள் வழங்கப்படுகிறது. அடுத்த 60 நாட்களுக்கு இந்த உத்தரவு அமுலில் இருக்கும்.

குற்றவியல் நடைமுறைக் கோவையின் 17ஆம் பிரிவின் பிரகாரம், இராணுவ அதிகாரிகளுக்கு சிறப்பு நிறைவேற்று நீதிபதிகளின் அந்தஸ்த்து வழங்கப்படுகிறது. இந்த அதிகாரிகள் மாவட்ட நீதிபதிகள் அல்லது பிரதி ஆணையாளர்களுக்கு கீழ்ப்பட்டவர்களாக இருப்பார்கள்.

இதன்படி சட்டவிரோதமான பேரணிகளை நடத்துபவர்களை கைது செய்வது மற்றும் அவ்வாறான பேரணிகளை கலைப்பது உட்பட அதிகாரங்கள் இராணுவத்தின் நியமன அதிகாரிகளுக்கு வழங்கப்படும். தற்பாதுகாப்பு மற்றும் கடுமையான நிலைமையில் அதிகாரிகளால் சூடு நடத்தவும் அதிகாரம் வழங்கப்படுவதாக இடைக்கால அரசின் ஆலோசகர் ஒருவர் அந்நாட்டி 'டெய்லி ஸ்டார்' பத்திரிகைக்கு குறிப்பிட்டுள்ளார்.

'பல இடங்களில், குறிப்பாக நாடு முழுவதும் உள்ள தொழில்துறை பகுதிகளில், நாசகார செயல்கள் மற்றும் ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதை நாங்கள் காண்கிறோம்.

இந்த நிலைமையை கருத்தில் கொண்டு இராணுவத்தினருக்கு நீதி அதிகாரம் வழங்கப்படுகிறது' என்று சட்ட ஆலோசகர் ஆசிப் நஸ்ருல் குறிப்பிட்டுள்ளார்.

இதனை இராணுவ தரப்பினர் தவறுதலாகப் பயன்படுத்த மாட்டார்கள் என்று நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார். 'பொலிஸார் இன்னும் முறையாக இயங்கவில்லை.

நாசகாரச் செயல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன' என்று இடைக்கால அரசின் பெயர் குறிப்பிடாத மற்றொரு ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் பிரதமர் ஷெய்க் ஹசீனா தலைமையிலான அரசு கடந்த ஒகஸ்ட் 5ஆம் திகதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அடுத்து கலைக்கப்பட்டது தொடக்கம் பல பொலிஸாரும் பாதுகாப்புப் பணிகளில் இருந்து விலகி உள்ளனர்.

ஹசீனா பதவி கவிழ்க்கப்பட்டதை அடுத்து பொலிஸார் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கோபத்தை வெளியிட்டதோடு அவர்களின், சொத்துகள் தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்டன. இதனையடுத்து பங்களாதேஷ் பொலிஸ் துணை ஊழியர் சங்கம் கடந்த ஒகஸ்ட் 6 ஆம் திகதி கால வரையின்றி வேலை நிறுத்தத்தை அறிவித்தது. எனினும் உள்துறை அமைச்சுடன் இடம்பெற்ற பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து கடந்த ஒகஸ்ட் 10 ஆம் திகதி வேலை நிறுத்தத்தை பொலிஸார் கைவிட்டபோதும் பல பொலிஸ் அதிகாரிகளும் தொடர்ந்து வேலைக்குத் திரும்புவதைத் தவிர்த்து வருகின்றனர்.

**சர்வதேச செய்திகள்**

# பங்களாதேஷ் சிறைகளிலிருந்து தப்பிய 900 கைதிகள் தொடர்ந்தும் மாயம்



பங்களாதேஷில் மாணவர் ஆர்ப்பாட்டத்திற்கு இடையே சிறைச்சாலைகளில் இருந்து தப்பிச் சென்ற சுமார் 900 கைதிகள் தொடர்ந்து சுதந்திரமாக நடமாடுவதாக பங்களாதேஷ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. குற்றவியல் வழக்குகளில் மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை வரை விதிக்கப்பட்ட கொடிய குற்றவாளிகள் பலரும் இவர்களில் இருப்பதாக கூறப்படுகிறது.

ஷெய்க் ஹசீனா பிரதமர் பதவியில் இருந்து விலகி நாட்டில் இருந்து வெளியேறிச் சென்ற பின் அவாமி லீக் அரசின் ஆட்சி கவிழ்ந்தபோதே 17 சிறைச்சாலைகளில் வன்முறை வெடித்ததோடு, அப்போது இரண்டாயிரம் அளவான கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர். இவர்களில் 1100 பேர் வரை மீண்டும் கைது செய்ய முடிந்ததாக பங்களாதேஷ் சிறைச்சாலை தலைமையகம் தெரிவித்துள்ளது.



காணாமல்போயுள்ள கைதிகளைப் பிடிப்பதற்கு இராணுவ நடவடிக்கை தொடர்ந்து செயற்படுத்தப்பட்டபோதும் தற்போது வரை அது வெற்றி அளிக்கவில்லை என்றும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சிறைகளில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு இடையே அங்கிருந்த காவலர்கள் 282 பேர் காயமடைந்ததோடு, அதில் பலரும் தொடர்ந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாக தெரியவருகிறது.

கைதிகள் சிறைகளில் இருந்து தப்பிச் செல்லும்போது 94 ஆயுதங்களையும் எடுத்துச் சென்றிருப்பதோடு அதில் 65 ஆயுதங்கள் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

அண்மையில் சிறைச்சாலை தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சிறைச்சாலை ஆணையாளர் பிரகேடியர் ஜெனரல் செயித் ஹுஸைன் மேலும் கூறியிருப்பதாவது காணாமல்போயிருக்கும் கைதிகளை பிடிப்பதற்கு பொதுமக்கள் உதவியை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

## பொருளாதார நெருக்கடி:

# பாகிஸ்தானில் இருந்து 13.53 மில். மக்கள் வெளியேற்றம்



பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அந்நாட்டில் இருந்து 13.53 மில்லியனுக்கும் அதிகமான தொழில்முறையாளர்கள் வெளியேறி இருப்பதாக பாகிஸ்தான் பொருளாதார ஆய்வு அறிக்கை ஒன்றில் இருந்து தெரியவந்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதோடு, அவர்கள் 50க்கும் அதிகமான வெளிநாடுகளில் பல்வேறு வேலைகளில் ஈடுபட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

அதன்படி நாட்டை விட்டு வெளியேறிச் செல்லும் அதிக மனித வளங்களைக் கொண்ட தெற்காசிய நாடுகளில் இரண்டாவது இடத்தில் பாகிஸ்தான் இருப்பதோடு கற்றவர்கள் மற்றும் தேர்ச்சி பெற்றவர்கள் வெளிநாடு செல்வது பாகிஸ்தானுக்கு எதிர் காலத்தில் அந்நாட்டில் பல்வேறு துறைகளின் அபிவிருத்தி செயற்பாடுகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்வு அறிக்கையின்படி 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் 92,000 பட்டதாரிகள் மற்றும் 3,500,000 பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் நாட்டை விட்டுச் சென்றிருப்பதோடு, 2,500 மருத்துவர்கள், 6,500 கணக்காளர்கள் மற்றும் 5,534 பொறியியலாளர்கள் இதில் அடங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மக்கள் வங்கி தர்கா நகர் சேவை மையம் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது



மக்கள் வங்கி தர்கா நகர் சேவை மையம் அண்மையில் புதிய இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளது.

426, வெலிப்பன்ன வீதி, தர்கா நகர் என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் அளுத்கமை கிளையுடன் இணைந்ததாக இச்சேவை மையம் அமைந்துள்ளதுடன், அதிநவீன டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தனித்துவமான சேவைகளை வழங்கத் தயாராகவுள்ளது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (கிளை முகாமைத்துவம்) நளின் பத்திரணகே, களுத்துறை பிராந்திய முகாமையாளர் மொனிகா சூரியப்பெரும, உதவி பிராந்திய முகாமையாளர் கபில விதானகே, உதவிப் பிராந்திய முகாமையாளர்களான றோகினி காரியவசம், சாரங்கா ஶ்ரீ விமுக்தி, புதிய கிளை முகாமையாளர் சமீர ரூபசிறி, சேவை மைய முகாமையாளர் சச்சித்த பெரேரா மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்து சிறப்பித்துள்ளனர்.

இலங்கையிலுள்ள முன்னணி வங்கிகளில் ஒன்றான மக்கள் வங்கி, ரூபா 3 டிரில்லியனுக்கும் மேற்பட்ட திரட்டிய சொத்துக்களையும், ரூபா 2.5 டிரில்லியனுக்கும் மேற்பட்ட திரட்டிய வைப்புக்களையும் கொண்டுள்ளது.

நாடெங்கிலும் பரந்துள்ள 747 கிளைகள் மற்றும் சேவை மையங்களின் வலையமைப்புடன், 15.2 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கி வருகின்றது.

# மெர்கன்டைல் கைப்பந்து சம்பியன்ஷிப் 2024 இல் சூப்பர் லீக் பட்டத்தை வென்ற Ocean Lanka



இலங்கையின் முன்னணி நெசவுத் துணி உற்பத்தியாளரும், மெர்கன்டைல் கைப்பந்து சம்பியன்ஷிப் 2024 தொடரின் பெருமைமிக்க தங்க அனுசரணையாளருமான Ocean Lanka (Pvt) Ltd நிறுவனம், அண்மையில் மஹரகமவில் உள்ள இளைஞர் மையத்தின் உள்ளக விளையாட்டரங்களில் நடந்து முடிந்த கைப்பந்துப் போட்டியில் வெற்றியை பதிவு செய்துள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. நிறுவனத்தின் ஆடவர் கைப்பந்துக் குழுவானது, ஒப்பிட முடியாத திறமையையும், அசைக்க முடியாத உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியதோடு, மலிபன் நிறுவன குழுவை 31 எனும் செட் கணக்கில் தோற்கடித்து, சூப்பர் லீக் பட்டத்தை கைப்பற்றியது.

அணியின் முகாமையாளரும், Ocean Lanka (Pvt) Ltd நிறுவனத்தின் ஊழியர் தொடர்புகள் மற்றும் நிர்வாக முகாமையாளரும் அணி முகாமையாளருமான ருவன்சிறி மல்லிகாராச்சி இது பற்றித் தெரிவிக்கையில், "எமது கைப்பந்து அணியின் முக்கிய சாதனை தொடர்பில் நாம் மிகவும் பெருமை அடைகிறோம். இந்த வெற்றி அவர்களின் ஒப்பிட முடியாத திறமையை வெளிப்படுத்துகிறது. இந்த சம்பியன்ஷிப் வெற்றியின் உச்ச கட்டத்தை அடைய, போட்டித் தொடர் முழுவதுமான அவர்களது அர்ப்பணிப்பு, குழு ரீதியான செயற்பாடு, திடமான மனப்பான்மை ஆகியன உதவின. இது உண்மையில் அவர்களது திறமையை வெளிப்படுத்தியதோடு மாத்திரமல்லாது, அவர்கள் இப்போட்டித் தொடரின் ஒவ்வொரு போட்டியிலும் ஒற்றுமை, உறுதிப்பாடு, அர்ப்பணிப்பு ஆகியவற்றைக் காட்டியது. இங்கு அணியின் செயற்பாடானது விசேடத்துவமாக அமைந்திருந்தது. அத்துடன் அவர்கள் நம்பமுடியாத திறமை மற்றும் துல்லியத் தன்மை மூலம், ஆரம்பம் முதல் இறுதி வரை தங்கள் எதிரணி மீது ஆதிக்கம் செலுத்தினர். அவர்களது கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்கு இந்த வெற்றி ஒரு சான்றாகும் என்பதோடு, நாம் அனைவரும் அவர்களது திறமை தொடர்பில் பெருமையடைகிறோம்." என்றார்.

**தினகரன் வர்த்தக உலா**

shumsfahim@gmail.com | சம்ஸ் பாஹிம்

# ஜனாதிபதி தேர்தலின் போது தவறான தகவல்களை தடுப்பதற்கு TikTok நடவடிக்கை




இலங்கையில் எதிர்வரும் செப்டம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தனது தளத்தில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தவறான தகவல்கள் பகிரப்படுவதை தடுக்க TikTok நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள இக்காலப்பகுதியில், பாதுகாப்பான, உண்மையான மற்றும் நம்பகமான தகவல்களை பயனர்களுக்கு வழங்குவதற்காக TikTok இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இதற்காக வலுவான உலகளாவிய திட்டத்தை வகுத்துள்ள TikTok, இந்நாட்டின் தேர்தல் தொடர்பான உள்ளடக்கங்களை கையாள்வதற்காக IFCN அங்கீகாரம் பெற்ற தகவல் சரிபார்ப்பு நிறுவனமான Newschecker உடன் இணைந்து செயல்படுகிறது.

இதன் மூலம் தவறான மற்றும் பொய்யான தகவல்களை அடையாளம் காண்பதற்கும், அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும், மக்களுடன் முக்கியமான விடயங்கள் குறித்த சரியான தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் வாய்ப்பு கிடைக்கிறது. மேலும், Newschecker மூலமாக TikTok சமூக வழிகாட்டுதல்களைப் பாதுகாப்பதற்கு உதவும் முக்கியமான தகவல்களும் வழங்கப்படுகின்றன. தனது பயனர்களின் அறிவை மேம்படுத்துவதற்கும், தொடர்ச்சியை பராமரிப்பதற்கும் அதிக பங்களிப்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட உத்திகளுடன் புத்தாக்க தயாரிப்பு அம்சங்களை அறிமுகப்படுத்தியுள்ள TikTok, தேர்தல் பற்றிய மும்மொழிகளிலும் உத்தியோர்பூர்வ தகவல்களை வழங்குவதற்கான மத்திய நிலையத்தை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது.

# Orient Finance, 2023/24 இல் மகத்தான நிதியியல் திருப்புமுனைகளை எட்டியுள்ளது

Orient Finance நிறுவனம், 2023/24 ஆண்டில் தனது நிதியியல் பெறுபேறுகள் மூலமாக பாரிய திருப்புமுனையை எட்டியுள்ளதுடன், கடந்த ஆண்டில் ஏற்பட்ட ரூபா 72 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில், 584% என்ற மகத்தான வளர்ச்சியுடன், ரூபா 348.53 மில்லியன் தொகையை வரிக்குப் பின்னரான இலாபமாக பதிவாக்கியுள்ளது. மொத்த சொத்துக்கள் 17% ஆல் அதிகரித்து, ரூபா 20,477 மில்லியனாக காணப்பட்டதுடன், வழங்கல் துறைசார் விரிவாக்கம் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றில் நிறுவனத்தின் வலுவான அணுகுமுறையின் உந்துசக்தியுடன், 8% என்ற தொழிற்துறையின் சராசரிக்கும் மேலாக, விரைவுபடுத்தப்பட்ட வளர்ச்சியைப் பிரதிபலித்துள்ளது.



Orient Finance நிறுவனத்தின் நிகர வட்டி வருமானம் மிகவும் போற்றத்தக்க வகையில் 81% ஆல் அதிகரித்து ரூபா 1.79 பில்லியனாக பதிவாக்கப்பட்டுள்ளதுடன், கூடுதலான கடன் வழங்கல்கள் மற்றும் மேம்பட்ட வட்டி இலாப வரம்புகளின் உந்துசக்தியுடன், கடன் நடவடிக்கைகளின் திறன்மிக்க முகாமைத்துவம் மற்றும் பிரதான வணிக தொழிற்பாடுகளில் மேம்பட்ட இலாபத்திறன் ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றது. மேலும், வட்டி அல்லாத வருமானம் 17% ஆல் அதிகரித்து, ரூபா 266 மில்லியனாகக் காணப்பட்டதுடன், கட்டண அடிப்படையிலான சேவைகளின் வலுவான பெறுபேற்றுத்திறன்கள் இதற்கு உதவியுள்ளன. நிறுவனத்தின் பல்வகைப்பட்ட வருமான மார்க்கங்கள் மற்றும் பாரம்பரிய வணிக செயற்பாடுகளுக்கு அப்பால், சந்தையில் வாய்ப்புக்களை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் நிறுவனத்தின் ஆற்றல் ஆகியவற்றை இது அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

செலவுவருமான விகிதத்திலும் பாராட்டத்தக்க மேம்பாட்டை நிறுவனம் அடைந்துள்ளதுடன், கடந்த நிதியாண்டில் காணப்பட்ட 93.44% இலிருந்து 66.53% ஆக குறைவடைந்துள்ளது. மேலும், பங்கு மீதான வருமானம் கடந்த நிதியாண்டில் காணப்பட்ட 2.18% இலிருந்து கணிசமாக மேம்பட்டு, 10.13% ஆக அதிகரித்துள்ளது.

# தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடனான தனது மூலோபாய இணைவை புதுப்பித்துள்ள செலான் வங்கி

செலான் வங்கியானது தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடன் (NCE) தொடர்ந்து 3ஆவது ஆண்டாக தமது இணைவை புதுப்பித்துள்ளது. இந்த ஒப்பந்தம் 2024, ஆகஸ்ட் 15ஆம் திகதி செலான் வங்கியின் தலைமை அலுவலகத்தில், இரு நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

அனைத்து தயாரிப்புகள் மற்றும் சேவைத் துறைகளின் முன்னணி ஏற்றுமதியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும், NCE உடனான இந்த இணைவு, சம்மேளன உறுப்பினர்களுக்கு செலான் வங்கியின் நிதி வசதிகளை வழங்க உதவுகிறது. இதன் விளைவாக, தங்கள் ஏற்றுமதியை அதிகரிக்க, சந்தைப் பங்கை விரிவுபடுத்த அல்லது அவற்றின் செயற்பாடுகளுக்கு மதிப்பு சேர்க்க முயல்கின்ற பெரிய அளவிலான வணிகங்கள் முதல் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் (SMEகள்) வரையிலான உள்ளூர் நிறுவனங்களுக்கு சர்வதேச சந்தைகளில் காலூன்றுவதற்கான சந்தர்ப்பம் கிட்டுகிறது.

நாட்டின் சமூகபொருளாதார சவால்களை எதிர்கொள்வதையும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்ட இவ்விணைவு, நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் அதன் நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்துவதற்கும் ஒரு தளமாக அமைகிறது. குறிப்பாக SME ஏற்றுமதியாளர்களை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் அந்நிய செலவாணியை அதிகரிப்பதற்கான வாய்ப்பை இது வழங்குகிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதிச் சேவைகளை உயர்த்துவதற்கு இரு தரப்பினரதும் அர்ப்பணிப்பை இந்த இணைவு மீண்டும் உறுதிப்படுத்துகிறது. தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் பல்வேறு துறைகளில் உள்ள ஏற்றுமதியாளர்களுக்கு தொழிற்படத்தகு சூழலையும் செழிப்பான எதிர்காலத்தையும் உருவாக்குவதை ஆதரிப்பதே இதன் இலக்காகும்.

இணைவு குறித்து கருத்து தெரிவித்த செலான் வங்கியின் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஜயசேகர, "தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடனான எங்கள் இணைவை புதுப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். எங்களுடைய முதல் இணைவிலிருந்து, ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக எங்கள் கூட்டு முயற்சிகளை அர்ப்பணித்துள்ளோம். இலங்கையின் ஏற்றுமதிச் சந்தையானது சர்வதேச அரங்கில் தமது நிலைப்பாட்டை உறுதி செய்யவும் விஸ்தரிக்கவும் இந்த இணைவு மேலும் உதவுகிறது.

## விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB)

SLIBTEC

**தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB)**

### ஹோமாகம, பிட்டிபன, தலகல வீதி, மஹஹேனவத்த, 1ஆம் படிநிலைக் கட்டிடம், வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில் நுட்பவியல் தனியார் நிறுவனத்தின் (SLIBTEC), Agrobiotech ஆய்வுகூடத்தின் நவீனமயப்படுத்தலுக்கான பெறுகை

**ஒப்பந்த இலக்கம்: SLIBTEC/PROC/171/NCB/Works/ Modification in the Agrobiotech Laboratory**

1. ஹோமாகம, பிட்டிபன, தலகல வீதி, மஹஹேனவத்த, 1ஆம் படிநிலைக் கட்டிடம், வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனத்தின் (SLIBTEC), Agrobiotech ஆய்வுகூடத்தின் நவீனமயப்படுத்தலுக்கான பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனத்தின் (SLIBTEC) திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

2. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தகைமை மூலப்பிரமாணத்தின் பிரகாரம் தொடர்புடைய துறையில் வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 செப்டெம்பர் 20ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 04ஆம் திகதி வரையில் SLIBTEC இணையதளத்திலிருந்து (https://www.slibtec.gov.lk/procurement) ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மேற்கூறிய முகவரியில் 2024 செப்டெம்பர் 25ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

4. மீளளிக்கப்படாத 4,000.00 இல. ரூபா கட்டணத்தை மக்கள் வங்கி, ஹோமாகம கிளையில் பேணப்படும் வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனத்தின் 049-1-001-7-0067474 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும். (கவனிக்கவும்: பண வைப்புப் பற்றுச்சீட்டில் தயவு செய்து வைப்பாளர்களின் விபரங்களைப் பூர்த்தி செய்து மற்றும் வைப்பிற்கான காரணம் என்பதற்கு ''மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் மேற்கூறிய பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனுக்களுடன் இணைத்தல் கட்டாயமாகும். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாக செலுத்துதல் வேண்டும் என்பதுடன் ஏனைய கொடுப்பனவுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)

5. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனம் (SLIBTEC), படிநிலை 1 கட்டிடம், மஹஹேனவத்த, தலகல வீதி, பிட்டிபன, ஹோமாகம எனும் முகவரிக்கு 2024 ஒக்டோபர் 04ஆம் திகதி பி.ப. 4.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச்செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

6. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 60 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் என்பதுடன் அனைத்து விலைமனுக்களுடனும் விலைக்கோரல் தொகையின் 1% பெறுமதிக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது விலைமனுக்கள் செல்லுபடியாகும் தினத்திற்கு அப்பால் 28 நாட்களுக்கு (2025 ஜனவரி 01ம் திகதி) செல்லுபடியாதல் வேண்டும்.

7. வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனம் (SLIBTEC) மற்றும் கல்வி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் ஏனைய நிறுவனங்களின் ஒரு பணியாளர் அல்லது நிறுவனம் மற்றும் / அல்லது பணியாளர்களின் நெருங்கிய தனிப்பட்ட குடும்ப உறவினர்கள் இந்த ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியற்றவர்கள் ஆவர்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனம் (SLIBTEC)**
**2024 செப்டெம்பர் 20ஆம் திகதி.**

## விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB)

SLIBTEC

**தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB)**

### ஹோமாகம, பிட்டிபன, தலகல வீதி, மஹஹேனவத்த, 1ஆம் படிநிலைக் கட்டிடம், வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனத்திற்கான (SLIBTEC), ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் பாவனைப் பொருட்களின் பெறுகை

**ஒப்பந்த இலக்கம்: SLIBTEC/PROC/174/NCB/G&S/Laboratory Chemicals & Consumables**

1. ஹோமாகம, பிட்டிபன, தலகல வீதி, மஹஹேனவத்த, 1ஆம் படிநிலைக் கட்டிடம், வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனத்திற்கான (SLIBTEC), ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் பாவனைப் பொருட்களின் பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனத்தின் (SLIBTEC) திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

2. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தகைமை மூலப்பிரமாணத்தின் பிரகாரம் தொடர்புடைய துறையில் வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 செப்டெம்பர் 20ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 04ஆம் திகதி வரையில் SLIBTEC இணையதளத்திலிருந்து (https://www.slibtec.gov.lk/procurement) ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மேற்கூறிய முகவரியில் 2024 செப்டெம்பர் 24ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

4. மீளளிக்கப்படாத 4,000.00 இல. ரூபா கட்டணத்தை மக்கள் வங்கி, ஹோமாகம கிளையில் பேணப்படும் வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனத்தின் 049-1-001-7-0067474 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும். (கவனிக்கவும்: பண வைப்புப் பற்றுச்சீட்டில் தயவு செய்து வைப்பாளர்களின் விபரங்களைப் பூர்த்தி செய்து மற்றும் வைப்பிற்கான காரணம் என்பதற்கு ''மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் மேற்கூறிய பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனுக்களுடன் இணைத்தல் கட்டாயமாகும். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாக செலுத்துதல் வேண்டும் என்பதுடன் ஏனைய கொடுப்பனவுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)

5. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனம் (SLIBTEC), படிநிலை 1 கட்டிடம், மஹஹேனவத்த, தலகல வீதி, பிட்டிபன, ஹோமாகம எனும் முகவரிக்கு 2024 ஒக்டோபர் 04ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச்செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

6. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 60 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் என்பதுடன் அனைத்து விலைமனுக்களுடனும் விலைக்கோரல் தொகையின் 1.5% பெறுமதிக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது விலைமனுக்கள் செல்லுபடியாகும் தினத்திற்கு அப்பால் 28 நாட்களுக்கு (2025 ஜனவரி 01ம் திகதி) செல்லுபடியாதல் வேண்டும்.

7. வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனம் (SLIBTEC) மற்றும் கல்வி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் ஏனைய நிறுவனங்களின் ஒரு பணியாளர் அல்லது நிறுவனம் மற்றும் / அல்லது பணியாளர்களின் நெருங்கிய தனிப்பட்ட குடும்ப உறவினர்கள் இந்த ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியற்றவர்கள் ஆவர்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனம் (SLIBTEC)**
**2024 செப்டெம்பர் 20ஆம் திகதி.**

## முன்மொழிவுகளுக்கான அழைப்பு

### இப்பாகமுவ பிரதேச சபை

### இப்பாகமுவவில் உள்ள இப்பாகமுவ நகர மண்டப கட்டிடத்தில் சீரமைப்பு வேலை

01. இப்பாகமுவவில் அமைந்துள்ள, இப்பாகமுவ பிரதேச சபையின் இப்பாகமுவ நகர மண்டபக் கட்டிடத்தில் எஞ்சியுள்ள வேலைகளை பூர்த்தி செய்வதற்கான ஆலோசனை மற்றும் நிர்மாண மேற்பார்வை சேவைகளுக்காக தகுதியுடைய ஆலோசகர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட முன்மொழிவுகள் இப்பாகமுவ பிரதேச சபை பெறுகைக் குழு தலைவரினால் கோரப்படுகின்றன.

02. ரொக்கப்பணத்தில் 3000 ரூபாவை செலுத்தி இப்பாகமுவ பிரதேச சபையின் தொழில்நுட்பப் பிரிவில் இருந்து ஆங்கில மொழியிலான முன்மொழிவு ஆவணங்களை வாங்கலாம். முன்மொழிவு ஆவணங்கள் 2024.09.23 ஆம் திகதி தொடக்கம் 2024.10.21 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00இற்கு இடையே வேலை நாட்களில் வழங்கப்படும்.

03. முன்மொழிவு ஆவணங்களை இப்பாகமுவ பிரதேச சபையின் தொழில்நுட்பப் பிரிவில் கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.

04. தகுதியுடைய ஆலோசகர்கள் பின்வரும் தகைமை அளவுகோலை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- பணிகளின் இதனையொத்த பண்பில் அனுபவம் (கடந்த 5 ஆண்டுகளுக்கு 3 ஒப்படைகள்)
- பரிந்துரைக்கப்பட்ட தொழில்முறை பணியாளர்களிடம் உள்ள அனுபவம்

  (பட்டய தகைமை பெற்ற M & E பொறியியலாளர் - குறைந்தது 5 ஆண்டு அனுபவம்)

  (பட்டய தகைமை பெற்ற கட்டமைப்பு பொறியியலாளர் - குறைந்தது 5 ஆண்டு அனுபவம்)

  (பட்டய தகைமை பெற்ற கட்டடக்கலை - குறைந்தது 5 ஆண்டு அனுபவம்)
- பணியை மேற்கொள்வதற்கு தகுதிபெற்ற ஆலோசகர்கள்

05. முன்மொழிவுக்கு முந்திய சந்திப்பு இப்பாகமுவ பிரதேச சபையின் கூட்ட அறையில் 2024 ஒக்டோபர் 10 ஆம் திகதி மு.ப. 10.00இற்கு இடம்பெறும்.

06. முன்மொழிவுகள் 2025.01.21 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

07. முத்திரை பொறிக்கப்பட்ட முன்மொழிவுகளை இப்பாகமுவ, பிரதேச சபை, செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும்.

08. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2024.10.22 அன்று 11.00 மணி என்பதோடு அது மூடப்பட்ட உடன் திறக்கப்படும்.

09. ஆலோசகர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்மொழிவுகளை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்க கோரப்படுகின்றனர்.

**செயலாளர்**
**இப்பாகமுவ பிரதேச சபை**
**தம்புள்ளை வீதி**
**பன்கொல்ல**
**தொலைபேசி 037-2259977**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### பிரதேச சபை - வாரியபொல

### வாரியபொல பஸ் நிலையத்தின் சின்க் கூரையின் மேல் பொருத்துவதற்காக 75kw சூரிய சக்தி PV உற்பத்தி முறைமையை வழங்குதல், நிறுவுதல், சரிபார்த்தல், செயற்படவைத்தல் மற்றும் பராமரித்தல்

**கேள்வி குறிப்பீட்டிலக்கம்: WPS/IND/04/12/55**

1. வாரியபொல பிரதேச சபையின் சார்பாக பெறுகைக் குழுவின் தலைவரினால் விலைமனு ஆவணங்களில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் மேற்கூறிய கேள்விக்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. முறைமையை நிறுவுதல், சரிபார்த்தல் மற்றும் செயற்படவைத்தல் என்பன ஆரம்பிக்கும் நாள் முதல் 75 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

   **அ. தேவையான அனுபவம்:**

   விலைமனுதாரர் கடந்த 05 வருடங்களினுள் இதனையொத்த தன்மை மற்றும் சிக்கலான தன்மையுடைய (KV80 குறைந்தபட்ச கொள்ளளவைக் கொண்ட சூரிய சக்தி PV முறைமையை வழங்குதல் மற்றும் நிறுவுதல்) குறைந்தபட்சம் 03 திட்டங்களையாவது பிரதான ஒப்பந்தக்காரராக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். ஒரு திட்டத்திற்கான குறைந்தபட்ச பெறுமதி 10,000,000.00 (பத்து மில்லியன் ரூபா) ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

   **ஆ. SLSEA பதிவு:**

   விலைமனுதாரர் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் (SLSEA) பதிவைப் பெற்ற கூரையின் மீது சூரிய சக்தி சேவை வழங்குநராகவிருத்தல் வேண்டும் மற்றும் ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைத் தேவைப்பாடுகள்.

05. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு ஆர்வமுள்ள எந்தவொரு தரப்பினரும் ஒப்பந்தப் பெறுமதி இலங்கை ரூபாயில் ஐந்து மில்லியன் (இலங்கை ரூபா 5,000,000.00) ரூபாவை விஞ்சும் சகல ஒப்பந்தங்களின் பொருட்டும் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் www.drc.gove.lk (e-ROC) பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

   அ. எந்தவொரு முகவர், உப முகவர், பிரதிநிதி அல்லது பெயரிடப்பட்ட ஒருவர் கேள்வி விலைக்கோரல் இறுதி நாளுக்கு முன்னர் பதிவுசெய்து கொள்ளல் வேண்டும்.

   ஆ. கேள்வி விண்ணப்பதாரர் அல்லது கேள்விதாரர் ஒரே தரப்பினராகவிருந்தால் அவர்கள் ஒப்பந்த அடிப்படைக்கு முன் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

06. கீழே கையொப்பமிடப்பட்டுள்ளவரிடமிருந்து எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்து மற்றும் ஒரு தொகுதிக்கு மீளளிக்கப்படாத ஐந்தாயிரம் இலங்கை ரூபா (இல. ரூபா 5,000.00) கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-09-30ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் 09.00 மணித்தியாலம் முதல் 14.00 மணித்தியாலம் வரையில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் பரீட்சித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்வதுடன் கொள்வனவு செய்யப்பட்டதன் பின் எக்காரணம் கொண்டும் விலைமனு ஆவணக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

07. பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளக்கூடிய விலைமனு ஆவணங்களை முறையாகப் பூர்த்தி செய்து 2024-10-11ஆம் திகதி 2.00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன் பதிவுத்தபால் உறையொன்றில் அல்லது முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையொன்றில் இட்டு தபால் /கூரியர் சேவை மூலம் வாரியபொல பிரதேச சபையின் சேவையின் ஊடாக பெறுகைக் குழுவின் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் வாரியபொல பிரதேச சபையின் தரை தளத்தில் செயலாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

08. வாரியபொல பிரதேச சபையில் 2024-10-11ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

09. விலைமனுக்கள் 2024-12-31ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

10. சகல விலைமனுக்களுடனும் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் (180,000.00) ரூபாவிற்கான விலைக்கோரல் பிணை முறியொன்றை அனுப்புதல் வேண்டும்.

11. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று வாரியபொல பிரதேச சபையில் 2024-10-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

மேலதிக விசாரணைகள்: 037-2267275

**தலைவர், பெறுகைக் குழு,**
**வாரியபொல பிரதேச சபை. 2024-09-20.**

# நுவரெலியா மாவட்டத்தில் தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி

**(நுவரெலியா தினகரன் நிருபர்)**

நுவரெலியா மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கு 605292 பேர் தகுதி பெற்றுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளரும் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான நந்தன கலபொட தெரிவித்துள்ளார். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் தேர்தல் கடமைகளுக்கு தேவையான வாக்குச்சீட்டுகள், வாக்கு பெட்டிகள், வாகனங்கள் என்பன இன்று நுவரெலியா காமினி தேசிய பாடசாலையிலும் நுவரெலியா சினிசிட்டா மைதானத்திலும் அதிகாரிகளிடம் கையளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ள சிரேஷ்ட தேர்தல் அதிகாரிகள் அனைவரையும் இன்று (20) காலை 7 மணிக்கு நுவரெலியா காமினி தேசிய பாடசாலைக்கு வருகை தருமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அவர்கள் அங்கு வருகை தந்த பின்னர் அவர்களுக்கான தேர்தல் செயற்பாடுகள் தொடர்பாகவும் தேர்தல் வாக்களிப்பு நிலையம் மற்றும் வாக்குகளை எண்ணும் நிலையங்களில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளதாகவும் நுவரெலியா மாவட்ட செயலாளரும் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான நந்தன கலபொட மேலும் தெரிவித்தார்.

நுவரெலியா, மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் 347646 வாக்காளர்களும் கொத்மலை தேர்தல் தொகுதியில் 88219 வாக்காளர்களும் அங்குரன்கெத்த தேர்தல் தொகுதியில் 78437 வாக்காளர்களும் வலப்பனை தேர்தல் தொகுதியில் 90990 வாக்காளர்களும் தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு பாதுகாப்பு கடமைகளுக்காக பொலிஸ் மற்றும் பாதுகாப்பு படையினர் 1784 பேரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேநேரம் 21 ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்பாக தபால் மூல வாக்குகளின் பெறுபேறுகளை அறிவிக்க முடியும் எனவும் இதுவரையில் நுவரெலியா மாவட்டத்தில் 36 சிறு தேர்தல் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைதியான தேர்தலை முன்னெடுப்பதற்கான அனைத்து செயற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாகவும் வாக்காளர்கள் எவ்வித அச்சமுமின்றி தங்களுடைய வாக்குகளை சுதந்திரமாக பதிவு செய்ய முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

# காங்கேசன்துறையில் மீண்டும் சீமெந்து தொழிற்சாலை ; ஆளுநர் தலைமையில் விசேட கலந்துரையாடல்

காங்கேசன்துறையில் சீமெந்து தொழிற்சாலையை நிறுவுவது தொடர்பான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் தலைமையில், ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், முதலீட்டு ஊக்குவிப்பு சபையின் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பிரதி பணிப்பாளர் எ.ஆர்.ஜெயமனோன், ஆய்வு நிறுவனத்தின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

உள்ளூர் மூலப்பொருட்களை பயன்படுத்தாது, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களை கொண்டு சீமெந்து தயாரித்து பொதி செய்து உள்நாட்டு தேவைக்காக விற்பனை செய்யும் நோக்குடன் இச்செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக ஆய்வு நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆளுநரிடம் தெரிவித்தனர்.

இந்திய முதலீட்டில் மேற்கொள்ளவுள்ள சீமெந்து தொழிற்சாலையில் அதிநவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்படுமெனவும் இதனூடாக உள்ளூர் மக்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

நிதி மூலம், தொழிற்சாலையை நிறுவுவதற்கான காணி கோரிக்கை, மூலப்பொருட்களின் இறக்குமதி, விற்பனை செயற்பாடுகள், செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கான கால எல்லை, சுற்றாடல் அறிக்கை உள்ளிட்ட அனைத்து விடயங்களும் அடங்கிய முழுமையான முன்மொழிவு திட்டத்தை விரைவாக சமர்பிக்குமாறு ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

# அறிவித்தல்

**மாத்தறை மாநகர சபை**

**2024 குறை நிரப்பப்படும் மதிப்பீட்டு அறிக்கை**

2024ஆம் வருடத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வரவு செலவுகள் உட்படுத்தப்பட்ட குறை நிரப்பப்படும் விலைமதிப்பு அறிக்கையை 2024.09.20ஆந் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்கு பொது மக்கள் பரிசீலனைக்காக இவ்வலுவலகத்தில் வெளிப்படையாக வைக்கப்பட்டிருக்கும் என்பதை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 214(2)(ஆ) ஆம் அதிகாரத்தின் கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.

**நெலும் ஏ. கமகே,**
**மாநகர சபைத் தலைவர்,**
**மாத்தறை மாநகர சபை.**

2024. ஆகஸ்ட் 22ஆம் திகதி
**மாத்தறை மாநகர சபை அலுவலகத்தில்**

# பகிரங்க ஏலவிற்பனை

ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ நிறுவனத்திற்குரிய அனைத்து தங்க கடன் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட தங்க கடனுடன் தொடர்புடைய 2024/09/15 திகதிக்கு காலாவதியாகும் இதுவரை மீட்கப்படாத அனைத்து தங்க நகைகளும் 2024/10/10 மற்றும் 2024/11/11 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00க்கு கீழுள்ள விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

Orient Finance
**ஓரியன்ட் பினான்ஸ் பீஎல்சீ,**
(PB1079/PQ)
இல. 19, புகையிரத வீதி, நுகேகொடை.
தொலைபேசி: 0117 577 577

skills


**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**


# வரையறுக்கப்பட்ட அரச சேவை கூட்டுறவு கடன் வழங்கல் மற்றும் சேமிப்புச் சங்கம்

## விசேட மகா சபைக் கூட்டம்

திகதி - 2024 ஒக்டோபர் 10ம் திகதி
இடம் - பியகம, P.T. கார்டின்ஸ் ஹோட்டல்
நேரம் - மு.ப. 9.30

அத்தினத்தில் கீழ்க்காணும் விடயங்களை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- ♦ தலைவர் மற்றும் புதிய பணிப்பாளர் இருவரின் பணிப்பாளர் சபை வெற்றிடங்களுக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்
- ♦ 2025 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்.
- ♦ 2018/2019/2020/2021 கணக்காய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.
- ♦ திருத்தப்பட்ட இடைக்கால யாப்பு மற்றும் செயற்பாட்டு கட்டளை கோவை திருத்தங்களுக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்.
- ♦ புதிய அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்.
- ♦ வேறு

**தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச் சீட்டு கொண்டுவருமாறு வேண்டிக் கொள்கிறேன்.**

திருத்தப்பட்ட இடைக்கால யாப்பு மற்றும் செயற்பாட்டு கட்டளை கோவை திருத்தங்களை www.pscs.lk இணைய தளத்தில் 2024.09.25 முதல் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு மற்றும் +94706001144 என்ற WhatsApp இலக்கத்திற்கு செய்தியொன்றை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

**டபிள்யூ.டீ. அபேவர்தன,**
**செயலாளர்,**
**வரையறுக்கப்பட்ட அரச சேவை கூட்டுறவு கடன் வழங்கும் மற்றும் சேமிப்புச் சங்கம்,**
**இல.19, சோன்டர்ஸ் பிளேஸ், கொழும்பு - 12,**
**தொ.பே.இல.: 0112327640/ 0112327643**

CSIAP THE WORLD BANK

# Invitation for Bids

## Ministry of Agriculture

## Climate Smart Irrigated Agriculture Project (CSIAP)

**IDA Credit No: 6346 LK - P163742**

**Procurement of 40 Nos Drip Irrigation system (1/4 ac) with fertigation (Lot1 ) and 40 Nos Sprinkler Irrigation (1/4 Ac) (Lot 2) 30 Nos of Solar Water pump (Lot 3) for Micro Irrigation Programme and Maha 2024/2025 in 10 Cascade, in Northern Province**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a credit from the International Development Association (IDA) – World Bank towards the cost of the Climate Smart Irrigated Agriculture Project of the Ministry of Agriculture, and intends to apply part of the proceeds of this credit to payments under the Contracts given in the table below.

2. The Chairman of Minor Project Procurement Committee (Northern Province) on behalf of the Climate Smart Irrigated Agriculture Project (CSIAP) – Ministry of Agriculture now invites sealed bids from eligible and qualified bidders for construction work as described below.

| Procurement No and Lot No | Description of Work | Bid Security amount (Rs.) and Validity period | Estimated Cost (Rs.Mn.) Excluding VAT | Non - refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|
| LK-MOA-432267-GO-RFB-NP – Lot 1 | Procurement of 40 Nos Drip irrigation system (1/4ac) with fertigation for Micro Irrigation Programme and Maha 2024/2025. | 138,000.00 Valid up to 6th March 2025 | 9.20 Mn | 3,500.00 |
| LK-MOA-432267-GO-RFB-NP – Lot 2 | Procurement of 40 Nos Sprinkler Irrigation (1/4 Ac) for Micro Irrigation Programme and Maha 2024/2025. | 39,000.00 Valid up to 6th March 2025 | 2.6 Mn | 3,500.00 |
| LK-MOA-432267-GO-RFB-NP – Lot 3 | Procurement of 30 Nos Solar water pump for Micro Irrigation Programme and Maha 2024/2025. | 360,000.00 Valid up to 6th March 2025 | 24.0 Mn | 3,500.00 |

3. Bidding shall be conducted through National Competitive Bidding Method.

4. To be eligible for Contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field. The State-owned enterprises (SOEs) or institutions may be eligible to compete and be awarded contracts only if they can establish, in a manner acceptable in line with section III Clauses 3.23 of the World Bank Procurement Regulations.

5. Qualification requirements to qualify for contract award are include in the bidding document.

6. Interested bidders may obtain further information from Deputy Project Director, Deputy Project Director's Office (Northern Province), Climate Smart Irrigated Agriculture Project, Kovinthankadai Junction, Wilson Road, Kilinochchi (T.P: 021 228 4881 Fax: 021 228 4880, Email - dpd.np@csiap.lk) and inspect the bidding documents free of cost at the same place on working days from **19th September 2024 to 10th October 2024**, 09.00 hrs. to 14.00 hrs.

7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Deputy Project Director (Northern Province), at the address mentioned above until 9th October 2024 from 0900 hrs to 14.00 hrs. upon payment of a non-refundable fee of Rs 3,500.00. The method of payment will be in Cash only on Working days from **19th September 2024 to 10th October 2024** from 09:00 hrs. to 14:00 hrs (2.00 p.m.).

8. Bids shall be delivered to the address, Deputy Project Director, Deputy Project Director's Office (Northern Province), Climate Smart Irrigated Agriculture Project, Kovinthankadai Junction, Wilson Road, Kilinochchi on or before 14.00 hrs (2.00 p.m) **10th October 2024**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

9. All bids shall be accompanied by an Unconditional Bid Guarantee issued by a Commercial Bank approved by Central Bank of Sri Lanka, on prescribe format in the Bidding Document for the value and date mentioned in above Table.

10. Pre-bid meeting will be held on **26th September 2024** at 10.30 hrs at Deputy Project Director's Office (Northern Province), Climate Smart Irrigated Agriculture Project, Kovinthankadai Junction, Wilson Road, Kilinochchi. Interested Bidders may participate in this meeting on their own expenses.

Chairman,
Minor Project Procurement Committee (Northern Province)
Climate Smart Irrigated Agriculture Project,
Deputy Project Director's Office (Northern Province),
Kovinthankadai Junction,
Wilson Road,
Kilinochchi
Date :19th September 2024

## பெயர் மாற்ற அறிவித்தல்

2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் விதிகளின் படி அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**கம்பனியின் பழைய பெயர்:**
எம்சிமெடிக்கல் குரூப் (பிரைவட்) லிமிட்டட்

**கம்பனி பதிவு இலக்கம்:**
PV - 00238239

**கம்பனியின் பதிவு முகவரி:**
இல. 284, வொக்ஷோல் வீதி, கொழும்பு - 02

**கம்பனியின் புதிய பெயர்:**
மெக்லரன்ஸ் கன்சல்டன்சி சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட் சபையின் கட்டளைப்படி,
மெக்லரன்ஸ் குரூப் மெனேஜ்மன்ட் லிமிட்டட்
**கம்பனி செயலாளர்கள்**


**Repeat Your ad For Better Offers**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.


CDU/TS/2024/17 & 18

# இலங்கை சுங்கம்

## அரசுரிமையாக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான கேள்வி

அரசுரிமையாக்கப்பட்ட வாகனங்கள் / தங்கம் / தங்க ஆபரணங்கள் / மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் சில நானாவிதப் பொருட்களை கேள்வி மூலம் விற்பனை செய்வதற்கான கேள்வி கோரல் 2024 செப்டெம்பர் 26ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இலங்கைச் சுங்கம், மத்திய அப்புறப்படுத்தல் பிரிவின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இந்தப் பொருட்களின் பட்டியல் மற்றும் பொருட்களின் விபரங்கள் அடங்கிய படிவமொன்றை மீளளிக்கப்படாத 25.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி இலங்கைச் சுங்கத்தின் 3ஆம் மாடியில் உள்ள மத்திய அப்புறப்படுத்தல் பிரிவில் 2024 செப்டெம்பர் 23, 24 மற்றும் 25 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விற்பனைக்குள்ள பொருட்களின் பட்டியல் www.customs.gov.lk எனும் சுங்கத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் 2024 செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதியிலிருந்து காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் எண்களுடன் தொடர்புகொள்ளவும்:

011-2430795
011-2143434 நீடிப்பு 7300

**சுங்கப் பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை சுங்கம்,**
**'சுங்க இல்லம்',**
**இல.: 40, பிரதான வீதி,**
**கொழும்பு-11.**

# பெறுகை அறிவித்தல்

## ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் - மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்

1. பின்வரும் ஆய்வுகூட உபகரணங்களை வழங்குவதற்காக கொழும்பு 08, டாக்டர் டெனிஸ்டர் த சில்வா மாவத்தை, 357ஆம் இலக்கத்திலுள்ள மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2024-10-11ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் படிவங்களை மேற்படி முகவரியிலுள்ள கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம். அல்லாவிட்டால் 2024-10-11ஆம் திகதிக்கு முன் அந்த முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

| உருப்படி இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | கேள்வி இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | Heat adjustable small incubator | 1 | Mycology Section-FB/03/2024 | 1,000.00 |
| 2 | Fluorescent microscope | 1 | Rabies Section- FB/15/2024 | 1,500.00 |
| 3 | Allergen Analyzer | 1 | Immunology Section-FB/14/2024 | 6,500.00 |
| 4 | Kjeldahl apparatus | 1 | Nutrition Section- FB/05/2024 | 2,000.00 |
| 5 | Autoclave-fully automated with dry function | 1 | Animal Section- FB/06/2024 | 2,000.00 |
| 6 | Automated food pathogen enumeration system | 1 | Food & Water Section-FB/09/2024 | 3,500.00 |
| 7 | Automated Zebrafish Unit | 1 | Animal Section- FB/08/2024 | 1,000.00 |
| 8 | Hybridizer | 1 | Haematology Section- MRI/FD/02/2024 | 1,000.00 |

2. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

3. மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகையை (மேற்கூறிய வகையில்) வெவ்வேறாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளரின் பெயரில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்விப் படிவங்களுடன் இணைத்தல் வேண்டும்.

4. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப்படிவங்களை சமர்ப்பிக்கும்போது விலைகளைச் சமர்ப்பிக்கும் மாதிரித் தொகுதிகளை இரண்டு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள், முகவர்கள், பிரதிநிதிகள் அல்லது பெயர் குறிப்பிடுபவர் பின்வரும் தேவைப்பாடுகளை நிறைவேற்றியதன் பின் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
   அ) வியாபாரப் பதிவுச் சான்றிதழ் சகிதம் கொழும்பு-08, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பம் மற்றும்
   ஆ) மீளளிக்கப்படாத கேள்வி வைப்புக் கட்டணத்தை செலுத்துதல்

5. கேள்வி ஆவணங்களை 2024-09-20ஆம் திகதி மு.ப. 10.00 மணி முதல் 2024-10-10ஆம் திகதி வரையில் பி.ப. 2.00 மணிக்கும் இடையிலான எந்தவொரு வேலை நாளிலும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

   (தொலைபேசி இல. 011-2693532/3/4 தொலைநகல்: 011-2691495)

**தலைவர்,**
**மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பிராந்திய பெறுகைக் குழு,**
**டாக்டர் டெனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு 08.**


OBSERVER aDz TRUSTED CLASSIFIED GUIDE it's what you want
தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 2 828 114 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

# முன்மொழிவுக்கான கோரிக்கையை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியின் நீடிப்பு

| | | |
|---|---|---|
| தொழில் வழங்குநர் | : | வீதி அபிவிருத்தி அதிகாரசபை திட்டம்: கண்டி பல்முறைத் தன்மை போக்குவரத்து முனைய அபிவிருத்தித் திட்டம் |
| ஒப்பந்தத் தலைப்பு | : | கண்டி தபால் அலுவலகத்திற்கு அருகில் கண்டி பல்முறைத் தன்மை போக்குவரத்து முனையத்திற்கு (KMTT) நுழைவாயிலில் ரயில் தண்டவாளத்திற்கு மேல் மேம்பாலத்தின் நிர்மாணத்திற்காக சாத்தியக்கூறு அறிக்கைக்கு ஆலோசனை சேவைகளை தேர்வு செய்தல் (ஒட்டு மொத்தம்) |
| நாடு | : | இலங்கை |
| RFP NO. | : | RDA /KMTT/FO/GOSL/FS/01 |
| வெளியிடப்பட்டது | : | 2024.09.05 |

2024 செப்டெம்பர் 05 ஆம் திகதி “டெய்லி நியூஸ்”, “தினமின” மற்றும் “தினகரன்” பத்திரிகைகளில் வெளியான விளம்பரங்கள் தொடர்பானது.

மேலுள்ள விளம்பரத்தில் வெளியான திகதிகள் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கு அறியத்தருகிறோம்:-

“முன்மொழிவுகளுக்கான கோரிக்கைகளை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2024 ஒக்டோபர் 11 அன்று 14:00 மணி தாமதிக்காது இருத்தல் வேண்டும்....”

**தலைவர்,**
**அமைச்சு ஆலோசனைப் பெறுகைக் குழு (CPCM),**
**அவதானத்திற்கு, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**08ஆவது மாடி, மகனெகும மஹமெதுர**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த,**
**பத்தரமுல்லை,**
**இலங்கை.**

# 2024/26ம் ஆண்டிற்காக ஸ்டேட் பேர்டிலைசர் கம்பனி லிமிட்டட் இனால் இறக்குமதி செய்யப்பட்டு பாவனைக்கு எடுக்க முடியாத கிளை போசேட் (Glyphosatre) களை நாசினி மற்றும் அது சார்ந்த கொள்கலன்களை பாதுகாப்பாக அகற்றுதல் அல்லது மீள்சுழற்சி செய்தலை நடத்திச் செல்வதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக அழைப்பு விடுத்தல்

STATE FERTILIZER

01. ஸ்டேட் பேர்டிலைசர் கம்பனி லிமிட்டட் இனால், கிளை போசேட் ( Glyphosatre) களை நாசினியை இறக்குமதி செய்து சந்தைக்கு விற்பனை செய்வதற்கான செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மொத்தமாக இறக்குமதி செய்யும் கிளை போசேட் ( Glyphosatre) களை நாசினியை பாதுகாப்பாக அப்புறப்படுத்தல் பிரதான சேவை ஆவதுடன் அவ் இரசாயனத்தை பொதி செய்துள்ள கொள்கலன்களை அகற்றுதல் அல்லது மீள் சுழற்சி செய்யும் சேவை வழங்கலுக்காக முன் தகைமையுள்ள வழங்குநர்களை பதிவு செய்வதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். இப் பதிவு 2024.09.20 முதல் 2026.08.31 வரையான காலத்திற்கு பொருந்தும்.
02. ஸ்டேட் பேர்டிலைசர் கம்பனிக்கு மேற்படி சேவையை நடத்திச் செல்வதற்காக 2024/26ம் ஆண்டிற்கு வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024.09.20 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் 2026.07.31ம் திகதியுடன் முடிவுறும்.
03. இதற்காக விநியோகிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை கீழ்க்காணும் முகவரியில் பெறுகை பிரிவில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் பதில் முகாமையாளர் (பெறுகை மற்றும் நிறுவனங்கள்) பெறுகைப் பிரிவு ஸ்டேட் பேர்டிலைசர் கம்பனி லிமிட்டட், லக்பொஹெர சுவர்ண ஜயந்தி மாவத்த, ஹுணுப்பிட்டிய, வத்தளை முகவரிக்கு அனுப்பலாம்.
04. கம்பனியினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பத்தை மதிப்பீட்டிற்கு உற்படுத்தி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள சேவை வழங்குநர்கள் கம்பனியின் கீழ் வழங்குநராக பதிவு செய்யப்படுவதுடன், தேர்ந்தெடுக்கப்படாத வழங்குநர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும்.
05. இது பற்றிய மேலதிக விபரங்களை செயற்றிட்ட முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.
(தொ.பே.இல: 0772069979/ பெக்ஸ்: 0112930423)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்டேட் பேர்டிலைசர் கம்பனி லிமிட்டட்,**
**லக்பொஹொர சுவர்ண ஜயந்தி மாவத்த,**
**ஹுணுப்பிட்டிய, வத்தளை,**
**2024.09.20**

# பெறுகை அறிவித்தல்

## தேசிய தொற்றுநோய் நிறுவனம்

## ஐ.டி.எச்.அங்கொடை

01. தேசிய தொற்றுநோய் நிறுவனத்தின் பிரதேச பெறுகைக் குழுவினால் கீழ்க்காணும் செயற்றிட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவுசெய்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்வி பத்திரங்கள் விநியோகிக்கும் இறுதித்திகதி : 2024.10.10
கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி : 2024.10.11
கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நேரம் : 2024.10.11/பி.ப.2.00

| தொடர் இல | வேலை விபரம் | மதிப்பிடப்பட்ட தொகை ரூ.(வெட் இன்றி) | CIDA பதிவு வகுதி |
|---|---|---|---|
| 01 | வைத்தியசாலை கொரிடோவை மறுசீரமைத்தல் | 13.6 மில்லியன் | C-5/C-6 |

02. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத தகைமையுடைய கேள்விதாரர்களுக்கு காசாக மீளளிக்கப்படாத ரூ.3500/- கட்டணத்தைச் செலுத்தி முழுமையான ஒரு கேள்வி கோரல் பத்திரத்தை பணிப்பாளர், தேசிய தொற்றுநோய் நிறுவனம், அங்கொடை என்ற முகவரிக்கு வியாபாரக் கடிதத்தலைப்பில் எழுதப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பித்து 2024.10.10 வரையான காலத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம்.
03. இந் நிறுவனத்தின்தலைமையகத்தில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 - பி.ப.4.00 இற்குள் வருகைதந்து கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்க முடியுமாவதுடன் மேலதிக விபரங்கள் மற்றும் தெளிவுபடுத்தலுக்காக 0112411223/4, 590/1 (நீடிப்பு 270/203) உடன் தொடர்பாகியபின் பெற்றுக்கொள்ளலாம்.
04. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் போது ரூ.204,000.00 பெறுமதியுடைய நிபந்தனையற்ற கோரும்போது செலுத்தப்படும் கேள்விப் பிணையொன்றை பணிப்பாளர், தேசிய தொற்றுநோய் நிறுவனத்தின் பெயருக்கு வழங்க வேண்டியதுடன் அதனை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியிலிருந்து அல்லது இலங்கை காப்புறுதிச் சபையில் அனுமதிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணையொன்றாக இருத்தல் வேண்டும். வங்கிப்பிணை கேள்வி திறக்கப்படும் தினத்தில் இருந்து 105 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
05. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணத்தை உறையொன்றில் இட்டு அவ் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “வைத்தியசாலை கொரிடோவை மறுசீரமைத்தல்” என்று குறிப்பிட்டு 2024.10.11 பி.ப.2.00 இற்கு முன்பு வைத்தியசாலை கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்யலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்வி ஆவணங்கள் திறக்கப்படுவதுடன், அதற்காக கேள்விதாரருக்கு அல்லது பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.
06. கேள்வி வழங்கலில் இருந்து 02 மாதத்திற்குள் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு இணங்குதல் வேண்டும்.
07. இப்பெறுகை சம்பந்தமான இறுதித்தீர்மானம் தேசிய தொற்றுநோய் நிறுவனத்தின் பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**தேசிய தொற்றுநோய் நிறுவனம்,**
**ஐ.டி.எச்.அங்கொடை**

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

## நுகர்வோர் ஆலோசனைக் குழுவில் (CCC) கிழக்கு, தென், மேல், வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான வாய்ப்புகள்

இலங்கையின் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சாரத் தொழிற்துறையின் பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்பு ஒழுங்குறுத்துகை மற்றும் இலங்கையில் நீர் சேவைகள் மற்றும் கீழ்நிலை பெற்றோலியத் தொழில்களுக்கான நியமிக்கப்பட்ட ஒழுங்குறுத்துகை அமைப்பாகும். ஆணைகுழுவால் ஒழுங்குறுத்துகை மேற்கொள்ளப்படும் துறைகளில் நுகர்வோர் பாதுகாப்பு அதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

ஆணைக்குழு பரிந்துரைக்க வேண்டிய பொருத்தமான தரநிலைகள் குறித்து ஆணைகுழுவுக்கு ஆலோசனை வழங்கவும், நுகர்வோரின் தேவைகள் திருப்திகரமாக உள்ளதா என்பதைக் கண்காணிக்கவும் மற்றும் நுகர்வோர் மத்தியில் விழிப்புணர்வை விருத்தி செய்யவும் ஒரு நுகர்வோர் ஆலோசனைக் குழுவை (CCC) நிறுவியுள்ளது. கிழக்கு, தென், மேல், வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் ஒவ்வொரு மாகாணத்திலும் ஆணைக்குழுவினால் ஒழுங்குறுத்துகை மேற்கொள்ளும் கைத்தொழில்களில் நுகர்வோர் நலனுக்காக பணியாற்றுவதற்கு தகுதியான ஒருவருக்கு ஒரு வாய்ப்பாக இது இருக்கும்.

**விண்ணப்பதாரர்களிடம் எதிர்பார்ப்பது**

- இந்த அறிவிப்பு திகதியின்படி, 65 வயதுக்கு குறைவானவர்கள்
- கிழக்கு, தென், மேல், வடக்கு மற்றும் வட மத்திய மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள்
- பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணத்திற்குள் சமூகம்/சமூக சேவைகளில் பணிபுரிந்த/தன்னார்வத் தொண்டு செய்ததற்கான நிரூபிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- சிங்களம் அல்லது தமிழ் மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கிலத்தில் பணிபுரியும் திறன் விரும்பத்தக்கது.

**விண்ணப்பத்துடன் கீழே குறிப்பிட்ட விடயங்கள் இணைக்கப்பட வேண்டும்:**

- விண்ணப்பம் (சமூகம்/சமூக சேவை சங்கங்களுடன் பணிபுரிந்த அனுபவம்)
- குறித்த மாகாணத்தில் உள்ள நுகர்வோரின் விருத்திக்காக அவர்/அவள் எப்படி வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறார் என்பது பற்றிய சுருக்கமான கட்டுரை (500 சொற்களுக்கு மிகைப்படாமல்)
- கிராம உத்தியோகத்தர் வழங்கிய வசிப்பிடச் சான்றிதழ்
- பிரதேசத்தில் உள்ள சிவில் சமூகத் தலைவரால் வழங்கப்பட்ட நற்சான்றிதழ்

CCC மற்றும் அதன் உறுப்பினர்களுக்கான குறிப்பு விதிமுறைகள் பற்றிய மேலதிக விவரங்களுக்கு ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்து (www.pucsl.gov.lk) பெறலாம் அல்லது 0112392607/8 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக ஆணைகுழுவின் நுகர்வோர் விவகாரப் பிரிவைத் தொடர்புகொள்ளலாம்.

**விண்ணப்பத்தை 2024 அக்டோபர் 21 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்:**

தலைவர்
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

தொலைபேசி: 011 2392607/8
பெக்ஸ்: 011 2392641
மின்னஞ்சல்: careers@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

திகதி:20.09.2024

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## அபிவிருத்தி லொத்தர் சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஆக்கபூர்வமான விளம்பர முகவரகங்களின் சேவைகளை பெற்றுக்கொள்ளல் – 2024/2025

பின்வருமாறு பட்டியல்படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம் அபிவிருத்தி லொத்தர் சபைக்கு ஒரு வருட காலத்திற்கு ஆக்கபூர்வமான விளம்பர முகவரகங்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக விளம்பரத் துறையில் குறைந்தபட்சம் 03 வருட கால அனுபவத்தைக் கொண்ட புகழ்பெற்ற விளம்பர முகவர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பில் சிறு அளவிலான பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

விலைக்கோரல் சுருக்கம்

| தொ. இல. | விலைக்கோரல் இல. | விலைக்கோரலின் பெயர் | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி |
|---|---|---|---|---|
| 1 | DLB/PRO/2024/27 | கோப்பரேட் விளம்பரம் | ரூபா 5,000.00 | ரூபா 68,000.00 |
| 2 | DLB/PRO/2024/28 | லங்க வாசனா | ரூபா 5,000.00 | ரூபா 68,000.00 |

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (NCB) நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
03. விலைமனுக்கோரல் இரு கடித உறை முறை மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
04. 2024-09-20ஆம் திகதியிலிருந்து 2024-10-11ஆம் திகதி வரையில் (வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாக மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தொகையை செலுத்திய பின்னர், கொழும்பு-02, 356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவிற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் விலைமனுதாரர் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம் மற்றும் பரீட்சித்துப் பார்க்கலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ள வேண்டும்.
05. விலைமனு ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து விபரமான விபரங்களையும் விலைமனுதாரர்கள் வழங்குதல் வேண்டும்.
06. விலைக்கோரல் நிபந்தனைகளின் பிரகாரம், முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் தலைவர், சிறியளவிலான பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை இல. 356, டொக்டர் கொல்வின் ஆர்.த சில்வா மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “ஆக்கபூர்வமான விளம்பர முகவரகங்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளல் (லொத்தரின் பெயர்) லொத்தர் 2024/2025 **BID No: DLB/PRO/2024/(NO)**” எனக் குறிப்பிட்டு 2024-10-14ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு பிந்தாத வகையில் கிடைக்கச் செய்தல் வேண்டும். இதற்கு பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
07. விலைமனுக்களை 2024-10-14ஆம் திகதி பி.ப. 02.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கொழும்பு-02, 356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, அபிவிருத்தி லொத்தர் சபையின் சிறியளவிலான பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். 2024-10-14ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும்.
08. அபிவிருத்தி லொத்தர் சபையின் இணையதளத்திலும் விலைமனு ஆவணங்களைப் பார்வையிடலாம். www.dlb.lk

**தலைவர்,**
**சிறியளவிலான பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-02.**
**தொலைபேசி: 011-4824824.**
**www.dlb.lk**
**2024-09-20.**

DLB DEVELOPMENT LOTTERIES

# பெறுகை அறிவித்தல்

## களுத்துறை மாநகர சபை

### மேல் மாகாண அபிவிருத்தி ஒதுக்கீட்டின் கீழ் களுத்துறை மாநகர சபைக்குரித்தான ஹிமிதிரியாவ தகனச்சாலை மற்றும் மயான இடப்பரப்பை அபிவிருத்தி செய்தல்

இங்கு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-10-11ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். அன்றைய தினமே (2024-10-11) மு.ப. 10.05 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.

01. பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் குறித்த படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகையைச் செலுத்தி 2024-09-20ஆம் திகதி முதல் 2024-10-10ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை களுத்துறை மாநகர சபை அலுவலகத்தில் வேலை நாட்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை) விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. விலைக்கோரல் விண்ணப்பங்கள் இரு நகல்களில் வழங்கப்படும் என்பதுடன், அவற்றை முறையாகப் பூர்த்தி செய்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறைகளில் இட்டு ‘‘மாநகர ஆணையாளர், களுத்துறை மாநகர சபை, களுத்துறை’’ எனும் முகவரிக்கு 2024-10-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் மாநகர ஆணையாளர் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
03. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது குறித்த விண்ணப்பதாரர் வெட் வரிக்காக பதிவு செய்திருந்தால் அதன் இலக்கத்தைக் குறிப்பிடுதல் கட்டாயமாகும் என்பதுடன் வெட் வரி பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை கேள்விப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
04. இந்தச் செயற்றிட்டத்தின் நிர்மாண வேலைகளை 60 நாட்களுக்குள் நிறைவு செய்து விலைப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் ஒப்பந்தக்காரர்கள் CIDA நிறுவனத்தின் (கட்டிடம் மற்றும் பெருந்தெருக்கள்) C5, C6 அல்லது C7 பதிவு செயற்பாட்டு நிலையில் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். குறித்த விண்ணப்பதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.
06. விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும்போது விண்ணப்பதாரர் தமது தேசிய அடையாள அட்டை அல்லது வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் மூலம் தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும்.
07. 2024-10-11ஆம் திகதி மு.ப. 10.05 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் மட்டும் கலந்துகொள்ளலாம்.
08. மேலதிக விபரங்கள் மற்றும் பெறுகை நிபந்தனைகளை இந்த அலுவலகத்தில் விசாரித்தறிந்து கொள்ளலாம்.
09. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். தொலைபேசி இல. 0342222275/0342222273

**அட்டவணை**

| தொ. இல. | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூபா) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 01 | களுத்துறை மாநகர சபைக்குரித்தான ஹிமிதிரியாவ தகனச்சாலை மற்றும் மயான இடப்பரப்பை அபிவிருத்தி செய்தல் | 8,140,575.08 (வெட் இன்றி) | 3,500.00 | 100,000.00 |

**டீ.என். பியூமாலி குலரத்ன,**
**மாநகர ஆணையாளர்,**
**களுத்துறை மாநகர சபை அலுவலகம்.**
**2024-09-18.**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

LG-1537 ISUZU 2008, LORRY கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பி எல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 071 4 5 4 2 958/ 0711210810. 063614

LO-4844 ISUZU ELF, 2017, LORRY கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பி எல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 071 4 5 4 2 958/ 0711210810. 063613

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

BHV-8019 HONDA DIO 2019, MOTOR CYCLE கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0711210 810/ 0705999163. 063611

YE-2459 BAJAJ 2010, YB-3287 BAJAJ 2010, THREE WHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0711210 810/ 0705999163. 063615

## வேலைவாய்ப்பு

### 310 வெற்றிடங்கள்

எழுது வினைஞர்/ செயலாளர்கள்

கொழும்பில் அமைந்துள்ள பிரபல நீர்க்குழாய் கம்பனியான Allied Traing International (pvt) Ltd நிறுவனத்திற்கு ஆங்கில மொழி மற்றும் கணனி அறிவுடைய ஆண்/பெண் இலிகிதர்கள் தேவை. கொழும்புக்கு அருகில் இருப்போர் மட்டும் அழையுங்கள். 070 3598858/ 011 7397777/ 077 7776095 (இல. 301, பழைய சோனகத் தெரு, கொழும்பு -12 .) 063292

Repeat Your ad For Better Offers




Green Light for Online Transfer
Lake House Branch Acc. No. 000000377
WE ACCEPT
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 I 011 2 429 342/ 343

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK

Funded by The European Union

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

இல. **123/2,** பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல, தொலைபேசி: **0112877550/ 0112073044/ 0112877559**
தொலைநகல்: **+94 112877546** மின்னஞ்சல்: **agriculturesectormodernizationproject@hotmail.com**

**IDA Credit No.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

### அம்பாறை மாவட்டத்திலுள்ள ஜம்போ நிலக்கடலை கொத்தணிக்கு பதப்படுத்தல் இயந்திராதிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்

1. கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 28 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து (EU) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை அம்பாறை மாவட்டத்திலுள்ள ஜம்போ நிலக்கடலை கொத்தணிக்கு பதப்படுத்துதல் இயந்திராதிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் எனும் ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.
2. அம்பாறை மாவட்டத்திலுள்ள ஜம்போ நிலக்கடலை கொத்தணிக்கு பதப்படுத்துதல் இயந்திராதிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| அம்பாறை மாவட்டத்திலுள்ள ஜம்போ நிலக்கடலை கொத்தணிக்கான பதப்படுத்துதல் இயந்திராதிகள் | LK-MOA-PMU-365195-GO-RFB | 582,000.00 | 12,500.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்திலிருந்து 2024-09-20ஆம் திகதியிலிருந்து 2024-10-11ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் 0112877547 நீடிப்பு 211 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6. விலைமனுக்களை 2024-10-11ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. 2024-10-11ஆம் திகதி மேற்படி முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தைக் குறிப்பிட்டு "அம்பாறை மாவட்டத்திலுள்ள ஜம்போ நிலக்கடலை கொத்தணிக்கு பதப்படுத்துதல் இயந்திராதிகளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 0112696086 அல்லது 0764688576**
**திகதி: 2024-09-20.**

# கேள்வி கோரல்

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**கேள்வி பத்திர இலக்கம் : 021/T/2023**

**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், மட்டக்களப்பு சர்வதேச விமானநிலையம், யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையங்களுக்கு நான்கு இருக்கைகளைக் கொண்ட 280 இரும்பு கதிரைகளை (Steel Tandem Chairs) வழங்கீடு செய்தல்**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், மட்டக்களப்பு சர்வதேச விமானநிலையம், யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையங்களுக்கு நான்கு இருக்கைகளைக் கொண்ட 280 இரும்பு கதிரைகளை (Steel Tandem Chairs) வழங்கீடு செய்வதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

திருப்பித் தரப்படாத கேள்விப் பத்திர கட்டணமாக பதினெட்டாயிரம் (ரூபா 18,000.00) மாத்திரம் காசாக செலுத்தி பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் மற்றும் வேண்டுதல் கடிதமொன்றை காண்பித்தலின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்வியாளர்கள் கேள்விப்பத்திர ஆவணங்களை பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கீட்டுத் தொடர் முகாமைத்துவ பிரிவில் வேலை செய்யும் நாட்களில் 23/09/2024 ஆந் திகதி முதல் 14/10/2024 வரை மு.ப.9.00 மணிக்கும் பி.ப.03.00 மணிக்கும் இடையே, பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை பொறுப்பேற்றல் ஒக்டோபர் 15ம் திகதியன்று செவ்வாய்க்கிழமை பி.ப 02.00 மணிக்கு முடிவடைவதுடன் அதற்கு பின்னர் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவில் கேள்விப் பத்திரங்கள் திறந்து வைக்கப்படும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனிக்கு மத்திய வங்கியின் அனுமதிபெற்ற ஏதேனும் ஒரு வங்கிக் கிளையில் குறித்த ஒரு கேள்விக்காக கேள்விப்பத்திர ஆவணங்களுடன் ஒரு இலட்சத்தி இருபதாயிரம் (ரூபா 1,200,000.00) மாத்திரம் பெறுமதியான கேள்விப்பத்திர உத்தரவாதமொன்றை முன்வைத்தல் வேண்டும்.

விலைக்கேள்வியுடன் தொடர்புடைய விபரங்களைத் தெளிவுபடுத்தல்கள் 2024.10.04 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச கட்டுநாயக்க விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் முகாமைத்துவ கிளைத் தலைவர் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவின், தொலைபேசி இலக்கம். 011-2264106 அல்லது 0112264107 ஊடாக அழைப்பதன் மூலம் head.scm@airport.lk அல்லது www.airport.lk இணைய தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**Departmental Procurement Committee - 02**
**வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க**

# விலைமனுக்கோரல்

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**அம்பாந்தோட்டை மத்தளை சர்வதேச விமானநிலையத்தின் விமானங்களின் காப்புத்தளத்தில் (APRON) மூட்டிணைப்புகளில் பிரயோகிக்கப்பட்ட நீர்காப்பு ஒட்டுப்பொருள் மீள்நிலைப்படுத்துவதற்காக விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன.**

**(REPLACEMENT OF JOINT SEALANT TN APRON MRIA)**

**விலைக்கேள்வி இலக்கம்: 003/T/2024**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி சார்பாக, கம்பனியின் தவிசாளரினால் அம்பாந்தோட்டை மத்தளை சர்வதேச விமானநிலையத்தின், விமானங்களின் காப்புத்தளத்தில் (APRON) மூட்டிணைப்புகளில் பிரயோகிக்கப்பட்ட நீர்காப்பு ஒட்டுப் பொருள் மீள்நிலைப்படுத்துவதற்காக முத்திரைக் குறியிடப்பட்ட தகைமைப்பெற்ற மற்றும் தகுதியுடைய விலைகூறுநர்களிடமிருந்து இத்துடன் அழைக்கப்படுகின்றன. கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு பழுது பார்த்தல்களுக்காக சுமார் 32 மில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்துக்குரிய கட்டுமானப் பணிகளுக்கும் தேவையான அனைத்து கட்டிடப்பொருட்கள், தொழிற்படை தேவைப்பாடுகள், விவரக்குறிப்பீட்டில் உள்ளவாறும் மற்றும் குறித்த திட்டமிடல்கள் மற்றும் விவரக்குறிப்பீடுகளுக்கமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

நிறைவு செய்யப்பட வேண்டிய காலவெல்லை தொண்ணூறு நாட்களாகும். (90).

தேசிய போட்டியிடல் விலைக்கூறல் நடைமுறைகளுக்கமைவாகவே, விலைக்கூறல்கள் இடம்பெறும், இவ் ஒப்பந்தம் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்துள்ள தகைமைகளைக் கொண்ட விலைக்கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், இந்த நிறுவனத்தில் இதற்கு முன்னர் தடுப்புப் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர்/தாபனமாக இருத்தல் வேண்டும். கட்டிட நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டிடங்கள் நிர்மாணம் தொடர்பாக C5 தரம் மற்றும் அதற்குமேல் தரத்தில் மாத்திரம் பதிவுசெய்த, கட்டுமானப் பணிகள் தொடர்பான அனுபவமுள்ள ஒப்பந்ததாரராக இருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு, மேலதிக தகவல்களை பெற வேண்டுமாயின் 2024/09/23 முதல் 2024/10/14 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலைசெய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 4.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், கிளைத்தலைவர், கருத்திட்ட தொலைபேசி இலக்கம் 011-2263700 அழைப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

இவ் விடயம் தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு 2024/09/23 ஆந் திகதி முதல் 2024/10/14 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவின் அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றினை முன்வைத்ததன் பின்னர் விலைக்கேள்வி கட்டணமாக திருப்பித்தரப்படாத ரூபா எட்டாயிரத்து ஐந்நூறு (ரூபா 8,500) காசாகச் செலுத்தி, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட அக்குறித்த விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்புகளைக் கொள்வனவு செய்துகொள்ள முடியும். உரிய விலைக்கேள்வி ஆவணங்கள், மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு நேரடியாக சமுகமளித்து 2024/09/23 ஆம் திகதி முதல் 2024/10/14 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணிக்கும் பி.ப 04.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள், கட்டணமின்றி இலவசமாக பார்வையிடுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்விகள் 2024/10/15 ஆந் திகதி பி.ப 02.00 மணிக்கு அல்லது முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாக சமுகமளித்து அல்லது பதிவுத் தபால் மூலம், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில், கொள்முதல் 02 கொண்ட பெறுகைக் குழுவின், தலைவருக்கு கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் அக்குறித்த நேரத்திற்கு விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் நேரம் முடிந்ததும், விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் அக்குறித்த விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக சகல விலைக்கேள்வியாளர்கள், ஒரு விலைக்கேள்விக்காக மூன்று இலட்சத்து இருபதாயிரம் (ரூபா.320,000.00) காசு வைப்புச் செய்த பற்றுச்சீட்டு அல்லது விலைக்கேள்வி தகவல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தாபனமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியின் அடிப்படையிலான விலைக்கேள்வி பிணைமுறியுடன் அக்குறித்த விலைக்கேள்விகள் சமரப்பிக்கப்படுதல் வேண்டும்.

சகல விலைக்கேள்வியாளர்களுக்கும் மற்றும் அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கும் 2024/10/04 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு அம்பாந்தோட்டை மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தின், பொறியியலாளர் அலுவலகத்தில் நடைபெறும் ஆரம்ப விலைக்கேள்வி கூட்டத்தில் பங்கேற்குமாறு இத்துடன் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க**

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வானூர்தித் தளத்தில் குறியிடுவதற்காகத் (Aerodrome marking) தேவைப்படுகின்ற தீந்தை (நீர் சார்ந்த) - வெள்ளை, மஞ்சள் கறுப்பு, சிவப்பு, (20 லீற்றர்) மற்றும் கண்ணாடி பாசிமணி (Glass beads) வழங்குவதற்காக விலைக்குறிப்பீடுகளை அழைத்தல்**

**பெறுகை இலக்கம் : 075/T/2024**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வானூர்தித் தளத்தில் குறியிடுவதற்காகத் (Aerodrome marking) தேவைப்படுகின்ற தீந்தை (நீர் சார்ந்த) - வெள்ளை, மஞ்சல் கறுப்பு, சிவப்பு, (20 லீட்டர்) மற்றும் கண்ணாடி பாசிமணி (Glass beads) வழங்குவதற்காக விலைக்குறிப்பீடுகள் அழைக்கப்படுகின்றன.

விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்பு கட்டணமாக திருப்பிச் செலுத்தப்படாத ரூபா பதினான்காயிரம் (ரூபா 14,000.00) காசு வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவுக்கு செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன் அதற்காக விலைக்கேள்வியாளரினால் எழுத்து மூலமான கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்து பிரிவினால் 2024.09.23 ஆந் திகதி முதல் 2024.10.14 ஆந் திகதி வரை ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 9.00 மணியிலிருந்து 3.00 மணி வரை விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்பினை வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2024.10.15 திகதி பி.ப 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் உடனடியாக வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளை திறக்கும் சந்தர்ப்பத்தில் அதில் பங்கேற்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியிற்கு கேள்வியின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா ஒரு மில்லியன் (ரூபா 1,000,000.00) பெறுமதிவாய்ந்த வங்கி பிணை முறி, விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

04.10.2024 ஆம் திகதி மு.ப : 10.00 இற்கு கட்டுநாயக்கவில் அமைந்துள்ள, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (தனியார்) கம்பனியின், சிவில் பொறியியல் (பராமரிப்பு) பிரிவு கலந்துரையாடும் கூடத்தில் நடாத்தப்படுகின்ற ஆரம்ப விலைக்கேள்வி கூட்டத்தில் பங்கேற்குமாறு, அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கும் மற்றும் அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கும் இத்துடன் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

தவிசாளர், பெறுகைக் குழு எந்தவித காரணமும் குறிப்பிடாது கம்பனியின் நலன்கருதி விலைக்கேள்வியின் அனைத்து பகுதிகள் அல்லது ஏதேனுமொரு பகுதி நிராகரிக்கும் உரிமை தக்கவைத்துள்ளார்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவின் தொலைபேசி இலக்கங்கள் 011-2264103/ 011-2264102 அழைப்பதன் மூலம், head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.1k இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க**

## இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட்:

# நிதான துடுப்பாட்டத்தின் மூலம் வலுப்பெற்றது நியூசிலாந்து அணி




இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்டில் தனது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடும் நியூஸிலாந்து அணி இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் உள்ளது.

காலியில் நடைபெற்று வரும் இந்த டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக 305 ஓட்டங்களைப் பெற்றிருக்கும் நிலையில் நியூலாந்து அணி 6 விக்கெட்டுகள் கைவசம் இருக்க 50 ஓட்டங்களாலேயே தொடர்ந்து பின்தங்கியுள்ளது.

இதில் 302 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று (19) தனது முதல் இன்னிஸை தொடர்ந்த இலங்கை அணி மேலும் 3 ஓட்டங்களைப் பெறுவதற்குள் எஞ்சிய 3 விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. முன்னதாக இலங்கை சார்பில் கமிந்து மெண்டிஸ் பெற்ற அபார சதம் அணி ஸ்திரமான ஓட்டங்களைப் பெற உதவியது.

இதன்மூலம் இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸுக்கு 91.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 305 ஓட்டங்களைப் பெற்றது. இதன்போது நியூசிலாந்து அணி சார்பில் வேகப்பந்து வீச்சாளர் வில்லியம் ஒருக் 5 விக்கெட்டுகளை பதம்பார்த்ததோடு அஜாஸ் படேல் மற்றும் கிளன் பிலிப்ஸ் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனைத் தொடந்து நேற்று தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து அணிக்கு ஆரம்ப வீரர் டொம் லதம் கைகொடுத்தார். மறுமுனையில் ஆடிய டெவோன் கொன்வோயை ரமேஷ் மெண்டிஸ் 17 ஓட்டங்களில் வீழ்த்தியபோதும் முதல் வரிசையில் வந்த கேன் வில்லியம்சன் ஓட்டங்களை அதிகரிக்க உதவினார்.

இதன்போது லதம் மற்றும் வில்லியம்சன் இரண்டாவது விக்கெட்டுக்கு 73 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். இதன்போது டொம் லதம் 111 பந்துகளில் 6 பௌண்டரிகளுடன் 70 ஓட்டங்களைப் பெற்றதோடு வில்லியம்சன் 104 பந்துகளில் 4 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 55 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து வந்த ரச்சின் ரவிந்திரா 39 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

மைதானத்தைச் சுற்றி கடும் காற்று வீசிய நிலையில் இலங்கை அணியின் மூன்று சுழற்பந்து வீச்சாளர்களும் பந்தை கட்டுப்பாட்டுடன் வீசுவதற்கு சிரமப்பட்டனர். மறுபுறம் அணியில் இடம்பெற்றிருக்கும் இரு விசேட வேகப்பந்து வீச்சாளர்களான அசித்த பெர்னாண்டோ மற்றும் லஹிரு குமார இருவரும் இரண்டாம் நாள் ஆட்டத்தில் விக்கெட் வீழ்த்தத் தவறினர்.

இதனால் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின்போது நியூசிலாந்து அணி 72 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 255 ஓட்டங்களுடன் வலுவான நிலையைப் பெற்றுள்ளது.

டெரில் மிச்சல் 41 ஓட்டங்களுடனும் டொம் பிளன்டல் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

இலங்கை சார்பில் அணித்தலைவர் தனஞ்சய டி சில்வா 2 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு ரமேஷ் மெண்டிஸ் மற்றும் பிரபாத் ஜயசூரிய தலா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இன்று போட்டியின் மூன்றாவது நாளாகும்.





# பேஜரை அடுத்து வோக்கி டோக்கிகள் வெடிப்பு: இஸ்ரேல்–லெபனான் போர் பதற்றம் அதிகரிப்பு

## வெடிப்புச் சம்பவங்களில் மொத்தம் 32 பேர் பலி: ஆயிரக்கணக்கானோர் காயம்

லெபனானில் ஹிஸ்புல்லா போராளிகள் பயன்படுத்திய பேஜர் மற்றும் வோக்கி டோக்கி கருவிகள் அடுத்தடுத்த நாட்களில் வெடித்து பலரும் கொல்லப்பட்ட சம்பவத்தால் அந்த அமைப்புக்குள் பெரும் குழப்பம் நிலவுவதோடு, இதன் பின்னணியில் இஸ்ரேல் உளவுப் பிரிவான மொசாட் இருப்பதாக குற்றம் சாட்டப்படும் நிலையில் பிராந்தியத்தில் முழு அளவில் போர் வெடிக்கும் அச்சம் அதிகரித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆயிரக்கணக்கான பேஜர்கள் வெடித்த நிலையில் அந்த அதிர்ச்சி நீங்குவதற்கு முன்னர் கடந்த புதனன்று ஆயிரக்கணக்காக வோக்கி டோக்கி கருவிகள் வெடித்துள்ளன. இந்தத் தாக்குதல்களில் இரு சிறுவர்கள் உட்பட மொத்தம் 32 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு 3,000க்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருப்பதாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது ஹிஸ்புல்லா உறுப்பினர்களின் பேஜர்கள் மற்றும் வோக்கி டோக்கிகள் வீடுகள், வீதிகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் என நாடு முழுவதும் சமகாலத்தில் வெடித்து அதனை வைத்திருந்தவர்கள் அருகில் இருந்தவர்களுக்கு காயத்தை ஏற்படுத்தியது.

பெய்ரூட்டில் உள்ள ஒரு மருத்துவமனையைச் சேர்ந்த கண் மருத்துவர், சுமார் 60 வீதமானோர் குறைந்தது ஒரு கண்ணையாவது இழந்துள்ளதாகவும் பெரும்பாலானவர்கள் இரு கையையும் இழந்துள்ளதாகக் கூறினார்.

'ஒரு மருத்துவராக என் வாழ்வின் மிக மோசமான நாள் இது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும், காயமடைந்தவர்களின் நிலையும் மிக மோசம்' என்று மருத்துவர் எலியாஸ் வார்ராக் கூறினார்.

இது ஹிஸ்புல்லா அமைப்பின் பாதுகாப்பு கட்டமைப்பில் ஏற்பட்டிருக்கும் பெரும் ஊடுருவலாக பார்க்கப்படுவதோடு முன்னெப்போதும் நிகழாத இந்தத் தாக்குதல் தொடர்பில் இஸ்ரேல் வெளிப்படையாக எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

எனினும் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர், யோவ் கல்லன்ட், 'மையப் புள்ளி வடக்கை நோக்கி நகர்த்தப்படுகிறது' என்று புதன்கிழமை குறிப்பிட்டார். இதில் அவர் காசாவை மையம் கொண்டு இஸ்ரேல் நடத்தி வரும் போர் இஸ்ரேலின் லெபனானுடனான வடக்கு எல்லைக்கு மாற்றப்படுவதையே குறிப்பிட்டு கூறியிருந்தார்.

'போரின் புதிய கட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் காசாவில் இஸ்ரேலுடன் சண்டையிட்டு வரும் ஹமாஸ் அமைப்பின் கூட்டாளியாக உள்ள ஹிஸ்புல்லா, லெபனான் எல்லையில் இஸ்ரேலுடன் கிட்டத்தட்ட தினசரி மோதலில் ஈடுபட்டு வருகிறது. கடந்த 11 மாதங்களுக்கு மேலாக இடம்பெறும் இந்த மோதல்களில் இரு பக்கங்களினதும் எல்லைகளில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தப் பதற்றத்திற்கு மத்தியில் தொலைத்தொடர்பு சாதனங்களில் ஏற்பட்டிருக்கும் வெடிப்புச் சம்பவம் பிராந்தியத்தில் முழு அளவில் போர் வெடிக்கும் அபாயத்தை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது.

**அடுத்தடுத்த அதிர்ச்சி**

ஹிஸ்புல்லா உறுப்பினர்களின் பேஜர் சாதனங்கள் கடந்த செவ்வாயன்று வெடித்த சம்பவத்தில் இரு சிறுவர்கள் உட்பட 12 பேர் கொல்லப்பட்டு சுமார் மூவாயிரம் பேர் காயமடைந்த நிலையில் கடந்த புதனன்று மாலை அந்த அமைப்பைச் சேர்ந்தவர்களின் வோக்கி டோக்கிகள் வெடித்ததில் மேலும் 20 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு 450க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

தலைநகர் பெய்ரூட்டின் தெற்கு புறநகர்ப் பகுதிகள், பெக்கா பள்ளத்தாக்கு, தெற்கு லெபனான் போன்ற ஹிஸ்புல்லா கோட்டைகளாகக் கருதப்படும் பகுதிகளிலேயே வெடிப்புகள் இடம்பெற்றுள்ளன. பேஜர் வெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் இறுதிக் கிரியைகளிலும் சில வோக்கி டோக்கி வெடிப்புகள் நிகழ்ந்தன.

இவ்வாறு வெடித்த வோக்கி டோக்கி கருவிகளில் ஐகொம் என்ற ஜப்பான் தொலைத்தொடர்புகள் மற்றும் தொலைபேசிய நிறுவனத்தன் முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருவிகளில் தமது நிறுவத்தின் முத்திரை இருப்பது தொடர்பில் விசாரணை நடத்துவதாக ஐகொம் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

தமது அனைத்து வானொலி கருவிகளையும் ஜப்பானில் தயாரிப்பதாகக் ஐகொம் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. என்றாலும் குறித்த கருவிகளை தயாரிப்பதை 10 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுத்தியதாகவும் அவைகள் எவ்வாறு விநியோகிக்கப்பட்டது என்பதை உறுதி செய்ய முடியாதுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

அதேபோன்று வெளிநாட்டு சந்தைகளுக்கான தமது தயாரிப்புகள் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மூலம் பிரத்தியேகமாக விற்கப்படுவதாகவும் ஜப்பானின் பாதுகாப்பு வர்த்தக கட்டுப்பாட்டு விதிமுறைகளின்படி அதன் ஏற்றுமதிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் ஒசாகாவைத் தளமாகக் கொண்ட அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

தமது கருவிகளைப் போன்ற போலியானவை சந்தையில் இருப்பதாகவும் குறிப்பாக தாம் உற்பத்தியை நிறுத்திய கருவிகள் சந்தையில் இருப்பது பற்றி ஐகொம் நிறுவனம் ஏற்கனவே எச்சரித்துள்ளது.

கையில் வைத்திருக்கக் கூடிய இந்த வோக்கி டோக்கி கருவிகளை ஹிஸ்புல்லா அமைப்பு ஐந்து மாதங்களுக்கு முன்னர் பேஜர்களை வாங்கிய அதே காலப்பகுதியில் வாங்கியிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.




இஸ்ரேலிய உளவுத்துறை, ஹிஸ்புல்லாவுக்கு இந்த வோக்கி டொக்கிகள் வழங்கப்படுவதற்கு முன்னர், ஆயிரக்கணக்கான வோக்கி டோக்கிகளில் பொறிகளைப் பொருத்தியதாக, இரண்டு ஆதாரங்களை மேற்கோள் காட்டி, தி ஒக்சியோஸ் என்ற செய்தி இணையதளம் குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக வெடித்த பேஜர்கள் கண்ணி வெடிகள் போன்று பயன்படுத்தப்பட்டிருப்பதாக லெபனானின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

'சாதனங்களின் மின்கலத்துடன் வெடி பொருட்கள் வைக்கப்பட்டு வெடிக்கச் செய்வதற்கு முன்கூட்டியே நிரலாக்கம் செய்யப்பட்டிருப்பதை தரவுகள் காட்டுகிறது' என்று புலன்விசாரணை தொடர்பில் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவத்துள்ளார்.

பேஜர்களுக்குள் சிறிய அளவிலான வெடிபொருட்களை இஸ்ரேல் மறைத்து வைத்ததாக நியூயோர்க் டைம்ஸ் மற்றும் ரோய்ட்டர்ஸிடம் அமெரிக்க, லெபனான் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவங்களை அடுத்து விமானங்களில் வோக்கி டோக்கிகள் மற்றும் பேஜர்களை எடுத்துச் செல்வதற்கு லெபனானில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**போர் மேகம்**

'லெபனானின் பாதுகாப்பு மற்றும் இறைமை மீதான அப்பட்டமான தாக்குதல்' முழு அளவிலான போர் ஒன்றுக்கான அபாயகரமான சமிக்ஞையை காட்டுகிறது என்று லெபனான் வெளியுறவு அமைச்சர் அப்துல்லா பவு ஹபிப் எச்சரித்துள்ளார்.

இந்த வெடிப்புகளில் பெய்ரூட்டில் உள்ள தமது தூதுவர் காயமடைந்திருக்கும் நிலையில் பதில் நடவடிக்கை எடுப்பதற்கு தமது நாட்டுக்கு உரிமை இருப்பதாக ஐ.நாவுக்கான ஈரான் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டும் முயற்சியில் தீவிரம் காட்டி வரும் அமெரிக்கா, போர் பதற்றத்தை அதிகரிப்பதற்கு எதிராக அனைத்துத் தரப்புகளையும் எச்சரித்தது.

'மேலதிக இராணுவ நடவடிக்கை மூலம் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும் என்று நாம் ஒருபோதும் நம்பவில்லை' என்று அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபை பேச்சாளர் ஜோன் கிர்பி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

பல முனைகளிலும் அபாயகரமான விரிவாக்கத்தைச் செய்து மத்திய கிழக்கை பிராந்திய போர் ஒன்றுக்குள் இழுத்துச் செல்வதாக ஜோர்தான் வெளியுறவு அமைச்சர் ஐமன் சபாதி, இஸ்ரேல் மீது குற்றம் சுமத்தினார்.

ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ், 'இது மிகத் தீவிரமான விடயம்' என்று எச்சரித்தார். அத்தோடு, 'அதிகபட்ச கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்குமாறு' அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுத்தார்.

'இந்தச் சாதனங்கள் அனைத்தையும் வெடிக்கச் செய்ய ஒரு பெரிய திட்டமிடப்பட்ட இராணுவ நடவடிக்கை முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்,' என்றும் அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

இதேவேளை ஹிஸ்புல்லா அமைப்பு கடந்த புதனன்று இஸ்ரேல் மீது சுமார் 20 ரொக்கெட் குண்டுகளை வீசியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் இவற்றில் பெரும்பாலானவை இஸ்ரேலிய வான் பாதுகாப்பு அமைப்பினால் இடைமறிக்கப்பட்டு என்று இஸ்ரேல் இராணுவம் கூறியது.

எனினும் லெபனானில் இருந்து வீசப்பட்ட டாங்கி எதிர்ப்பு ஏவுகணையால் இஸ்ரேலியர் பலர் காயமடைந்ததாக இஸ்ரேல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மறுபுறம் தெற்கு லெபனான் மீது இஸ்ரேல் சரமாரி வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது. ஹிஸ்புல்லா இலக்குகள் மீதே தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

இதேவேளை ஈரான் ஆதரவு படுகொலை சதி ஒன்றுடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் இஸ்ரேலிய பிரஜை ஒருவர் கடந்த மாதம் கைது செய்யப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்பு சேவை நேற்று தெரிவித்தது. துருக்கியுடன் தொடர்புபட்ட இந்த வர்த்தகர் ஈரானில் குறைந்தது இரு கூட்டங்களில் பங்கேற்று பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, பாதுகாப்பு அமைச்சர் அல்லது ஷின் பெட் உளவு நிறுவனத்தின் தலைவரை படுகொலை செய்ய சதி செய்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# இஸ்ரேல் ஆக்கிரமிப்புக்கு எதிரான ஐ.நாவின் தீர்மானம் நிறைவேற்றம்



பலஸ்தீன நிலங்களில் இருந்து ஓர் ஆண்டுக்குள் இஸ்ரேலின் சட்டவிரோத ஆக்கிரமிப்பு முடிவுக்குக் கொண்டுவர வலியுறுத்தும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை தீர்மானம் அதிக பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

செயற்படுத்தும் கடப்பாடு அற்ற இந்தத் தீர்மானம் நேற்று முன்தினம் (18) வாக்கெடுப்புக்கு வந்தபோது 124 நாடுகள் ஆதரவாக வாக்களித்ததோடு 14 நாடுகள் எதிர்த்தன. மேலும் 43 நாடுகள் வாக்களிப்பதைத் தவிர்த்துக் கொண்டன.

'ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன நிலப்பகுதியில் சட்டவிரோதமாக நிலைகொண்டிருப்பதை இஸ்ரேல் தாமதம் இன்றி முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதோடு இந்தச் செயல் சர்வதேச பொறுப்பை மீறுவதாகும். 12 மாதங்களுக்கு மேல் இதனைத் தொடரக்கூடாது' என்று ஐக்கிய நாடுகள் பொதுச்சபை வலியுறுத்தியுள்ளது.

ஆக்கிரமிப்பு மூலம் செய்த சேதங்களுக்கு பலஸ்தீனர்களுக்கு இழப்பீடு வழங்கவும் அது கோரியுள்ளது.

பலஸ்தீன நிலங்களில் இஸ்ரேல் நிலைகொண்டிருப்பது சட்டவிரோதமானது மற்றும் அவசியம் முடிவுக்குக் கொண்டவரப்பட வேண்டும் என்ற ஐ.நா. உயர் நிதிமன்றமான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் கருத்தை ஆதரிப்பதாக இந்தத் தீர்மானம் உள்ளது. இதனை பலஸ்தீன அதிகார சபையே கொண்டுவந்தது.

இதில் இஸ்ரேலின் நெருங்கிய நட்பு நாடான அமெரிக்கா, ஹங்கேரி, ஆர்ஜன்டீனா மற்றும் சிறிய பசுபிக் தீவு நாடுகள் இந்தத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்திருந்தன.

1967 மத்திய கிழக்குப் போரில் மேற்குக் கரை, காசா மற்றும் கிழக்கு ஜெரூசலத்தை இஸ்ரேல் கைப்பற்றியதோடு 1980 இல் ஒட்டுமொத்த புனித நகரையும் தமது அட்புலத்திற்குள் இணைத்தது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 20ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## மீட்கப்படாத அடகுத்தங்க நகைகளின்

# ஏல விற்பனை

வ/ப யட்டியாந்தோட்ட பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் யட்டியந்தோட்ட, கிதுல்கல, பெரன்னாவ, புனுகல, தெலிகம, கல்பாத்த, மத்தமகொட ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2022.12.31 வரை அடகு வைக்கப்பட்டு ஏலவிற்பனை தினம் வரை மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள் 2024 ஒக்டோபர் 12 மற்றும் 13ம் திகதிகளில் மு.ப.9.30 முதல் சங்க அலுவலக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பொது முகாமையாளர்,**
**வ/ப யட்டியந்தோட்டை**
**பலநோக்குக் கூட்டுறவுச்சங்கள்**
**யட்டியந்தோட்டை**

## 2024 இன் 48 ஆம் இலக்க வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் ( திருத்தப்பட்டது) சட்டம்

2024 இன் 48 ஆம் இலக்க வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் (திருத்தப்பட்டது) சட்டத்தினால் 2016 இன் 03 ஆம் இலக்க வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தின் பிரிவு 3(I) இற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரம், ஏதேனுமொரு தொழிலிலுள்ள அல்லது சேவையிலுள்ள அனைத்து வேலையாட்களுக்கும் செலுத்தக்கூடிய தேசிய குறைந்தபட்ச மாதாந்த வேதனம் ரூபா. 12,500/- இலிருந்து ரூபா. 17,500/- ஆகவும் மற்றும் தேசிய குறைந்தபட்ச நாளாந்த வேதனம் ரூபா. 500/- இலிருந்து ரூபா. 700/- ஆகவும், 2024 செத்தெம்பர் 11 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இத்திருத்தம் ஆனது, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2024 ஆம் ஆண்டின் செத்தெம்பர் மாதம் 13 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையின் பகுதி II இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட குறைந்தபட்ச வேதனத் திருத்தத்திற்கும் மேலதிகமாக, 2005 இன் 36 ஆம் இலக்க வரவுசெலவுத் திட்ட நிவாரணபடிச் சட்டம் மற்றும் 2016 இன் 04 ஆம் இலக்க நிவாரணப்படிச் சட்டம் என்பவற்றின் கீழ் முறையே ரூபா. 1000/- மற்றும் ரூபா.2500/- தொகையினைக் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

| உரிய சட்டம் | மாதாந்தம் (ரூபா.) | நாளாந்தம் (ரூபா.) |
|---|---|---|
| தேசிய குறைந்தபட்ச வேதனம் (2024 இன் 48ஆம் இலக்க வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் (திருத்தப்பட்டது) சட்டம்.) | 17,500.00 | 700.00 |
| 2005 இன் 36ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட நிவாரணப்படிச் சட்டம். | 1000.00 | 40.00 |
| 2016 இன் 04 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட நிவாரணப்படிச் சட்டம். | 2,500.00 | 100.00 |
| கட்டாயம் கொடுக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச தொகை | 21,000.00 | 840.00 |

**எச். கே. கே. ஏ. ஜயசுந்தர**
**தொழில் ஆணையாளர் நாயகம்**
**தொழில் திணைக்களம்**
**“மெஹெவர பியெச”**
**கொழும்பு. 05**

**2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19ஆந் திகதி**

## விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB)

SLIBTEC

### தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB)

### ஹோமாகம, பிட்டிபன, தலகல வீதி, மஹஹேனவத்த, 1ஆம் படிநிலைக் கட்டிடம், வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனத்தின் (SLIBTEC), Cell Culture ஆய்வுகூடத்தின் நவீனமயப்படுத்தலுக்கான பெறுகை

**ஒப்பந்த இலக்கம்: SLIBTEC/PROC/179/NCB/Works/ Modification in the Cell Culture Laboratory**

1. ஹோமாகம, பிட்டிபன, தலகல வீதி, மஹஹேனவத்த, 1ஆம் படிநிலைக் கட்டிடம், வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனத்தின் (SLIBTEC), Cell Culture ஆய்வுகூடத்தின் நவீனமயப்படுத்தலுக்கான பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனத்தின் (SLIBTEC) திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

2. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தகைமை மூலப்பிரமாணத்தின் பிரகாரம் தொடர்புடைய துறையில் வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 செப்டெம்பர் 20ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 04ஆம் திகதி வரையில் SLIBTEC இணையதளத்திலிருந்து (https://www.slibtec.gov.lk/procurement) ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மேற்கூறிய முகவரியில் 2024 செப்டெம்பர் 25ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

4. மீளளிக்கப்படாத 4,000.00 இல. ரூபா கட்டணத்தை மக்கள் வங்கி, ஹோமாகம கிளையில் பேணப்படும் வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனத்தின் 049-1-001-7-0067474 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும். (கவனிக்கவும்: பண வைப்புப் பற்றுச்சீட்டில் தயவு செய்து வைப்பாளர்களின் விபரங்களைப் பூர்த்தி செய்து மற்றும் வைப்பிற்கான காரணம் என்பதற்கு ‘‘மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு’’ எனக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் மேற்கூறிய பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனுக்களுடன் இணைத்தல் கட்டாயமாகும். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாக செலுத்துதல் வேண்டும் என்பதுடன் ஏனைய கொடுப்பனவுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)

5. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனம் (SLIBTEC), படிநிலை 1 கட்டிடம், மஹஹேனவத்த, தலகல வீதி, பிட்டிபன, ஹோமாகம எனும் முகவரிக்கு 2024 ஒக்டோபர் 04ஆம் திகதி பி.ப. 3.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச்செய்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

6. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 60 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் என்பதுடன் அனைத்து விலைமனுக்களுடனும் விலைக்கோரல் தொகையின் 1% பெறுமதிக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது விலைமனுக்கள் செல்லுபடியாகும் தினத்திற்கு அப்பால் 28 நாட்களுக்கு (2025 ஜனவரி 01ம் திகதி) செல்லுபடியாதல் வேண்டும்.

7. வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனம் (SLIBTEC) மற்றும் கல்வி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் ஏனைய நிறுவனங்களின் ஒரு பணியாளர் அல்லது நிறுவனம் மற்றும்/ அல்லது பணியாளர்களின் நெருங்கிய தனிப்பட்ட குடும்ப உறவினர்கள் இந்த ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியற்றவர்கள் ஆவர்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பவியல் தனியார் நிறுவனம் (SLIBTEC)**
**2024 செப்டெம்பர் 20ஆம் திகதி.**

# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABB-7470 | பஜாஜ் | 2015 | கண்டி |
| ABC-0233 | பஜாஜ் | 2015 | ராகம |
| ABE-4992 | பஜாஜ் | 2015 | ராகம |
| AAR-7056 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAR-1085 | பஜாஜ் | 2014 | திருகோணமலை |
| YS-6729 | பஜாஜ் | 2011 | ராகம |
| YU-0152 | பஜாஜ் | 2011 | ராகம |
| YB-8114 | பஜாஜ் | 2010 | அனுராதபுரம் |
| YC-7765 | பஜாஜ் | 2010 | குருநாகல் |
| QK-1313 | பஜாஜ் | 2007 | நுவரேலியா |
| QH-8960 | பஜாஜ் | 2006 | ராகம |
| JL-2226 | பஜாஜ் | 2004 | அனுராதபுரம் |

| மோட்டார் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| CBA-6997 | சுசுகி | 2018 | மாதரா |
| CAZ-8566 | லேண்ட் ரோவர் | 2018 | ராகம |
| CAB-2513 | டொயோட்டா | 2014 | ராகம |
| KP-0838 | டொயோட்டா | 2008 | சிலாவ் |
| JM-6492 | புரோட்டான் | 2001 | குருநாகல் |
| 19-7620 | டொயோட்டா | 1992 | ராகம |
| 18-4693 | சுபாரு | 1992 | ராகம |
| 65-0736 | நிசான் | 1990 | பாணடுரா |
| 17-1495 | நிசான் | 1990 | சிலாவ் |

| டூயல் பர்போஸ் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| 253-6765 | மஸ்தா | 1995 | பாணடுரா |
| 20 SRI 1267 | மிட்சுபிஷி | 1981 | ராகம |

| டூயல் பர்போஸ் கேப் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| PT-4121 | டாடா | 2012 | நுவரேலியா |
| PQ-1620 | டாடா | 2011 | ராகம |

| மோட்டார் சைக்கிள் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| LH-6130 | டாடா | 2010 | பாணடுரா |
| JB-8350 | மிட்சுபிஷி | 2000 | ராகம |

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAG-8071 | மஹிந்திரா | 2018 | மாதரா |

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| BEU-1678 | சுசுகி | 2016 | அனுராதபுரம் |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

| | |
|---|---|
| ராகம 0778 523 285 | திருகோணமலை 0773 382 612 |
| ரத்தினபுரி 0774 857 351 | கண்டி 0773 972 860 |
| நுவரெலியா 0777 717 562 | அனுராதபுரம் 0767 139 916 |
| அம்பாரா 0773 547 556 | குருநாகல் 0764 425 205 |
| எம்பிலிபிட்டிய 0773 610 188 | பாணடுரா 0775 215 263 |
| மாத்தறை 0743 601 121 | சிலாவ் 0770 288 804 |

## உங்கள் வரிப்பணம் – நகரத்தின் அபிவிருத்திக்காக
## இரத்தினபுரி மாநகர சபை
## பங்களிப்பு வரவு – செலவு தயாரித்தல் – 2025
## மக்கள் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள்

**அன்புள்ள பொதுமக்களே, தொண்டர் ஏற்பாட்டாளர்களே,**

2025ம் ஆண்டின் வரவு - செலவு ஆவணம் தயாரித்தல் தொடர்பாக இரத்தினபுரி மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் வசிக்கும்/ செய்கை பண்ணும் உங்களது/உங்கள் ஏற்பாட்டில் இணைந்த அபிவிருத்தி கருத்துக்கள் 2024 ஒக்டோபர் 15ம் திகதிக்கு முன் கீழ்க்காணும் முறைமைக்கு அமையகிடைக்கப் பெறும் விதத்தில் தயாரிக்கும் படி அறியத்தருகிறேன்.

| நகர சபை வலயம் | அபிவிருத்தி கருத்துக்கள் | நன்மை பெறும் குடும்பங்கள் | மதிப்பீடு ரூபா. |
|---|---|---|---|
| | | | |

அபிவிருத்தி கருத்துக்கள் அனுப்ப வேண்டிய முகவரி,

**நகர சபை ஆணையாளர்**
**மாநகர சபை**
**இரத்தினபுரி**
**045-2222759**
**E-Mail: Ratnapuramunicipalcouncil@gmail.com**

## பெறுகை அறிவித்தல்

### மத்திய மாகாண சபை - பிரதான அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு

### தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் (NCB)

1. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான நிர்மாண வேலைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி போடப்பட்ட விலைமனுக்களை பிரதான அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் தலைவர் அழைக்கின்றார். பொறியியல் அளவுப் பத்திரதொகை மற்றும் நிர்மாண காலப்பகுதி ஆகியன கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.
2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான உரிமைக்காக தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் பெற்றவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கட்டிட நிர்மாணத் துறையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் CIDA பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
3. மேலதிக தகவலை கண்டி, யட்டிநுவர வீதி, வீதி அபிவிருத்தி அமைச்சுக் கட்டிடம், 3 ஆம் மாடி, கல்வி கட்டிட அலுவலகம், மாகாண பிரதி பணிப்பாளரிடமிருந்து (கல்வி கட்டிடம்) (தொலைபேசி இலக்கம்: 081-2203892) பெற்று, அதே அலுவலகத்தில் இலவசமாக கேள்விக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. 2024.09.20 ஆம் திகதியிலிருந்து 2024.10.10 ஆம் திகதியன்று வரையும் அரச வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பொறியியல் சேவைகள் திணைக்கள மாகாண பிரதிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள கேள்விக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று பெற்றுக் கொள்ளப்படலாம்.
5. 2024.09.03 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கண்டி, யட்டிநுவர வீதி, 3 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் கட்டிடம் - கல்விசார் கட்டிடங்கள் - மாகாண பிரதிப் பணிப்பாளரின் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தில் இது தொடர்பான விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த விலைமனு முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றலாம்.
6. 2024.10.11 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பெற்றுக் கொள்ளும் தன்மையில் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பல்லேகெலே, பிரதான அமைச்சு மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உட்சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மூடப்பட்ட பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
7. கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள பெறுமதிக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து அல்லது பொறியியல் சேவைகள் திணைக்கள பிரதிப் பணிப்பாளரிடம் (நிதி) ரொக்கப் பணத்தில் செலுத்தப்பட்ட பிணைத் தொகைக்கான பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. தேவைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களின் தொழில்நுட்ப, நிதிசார் மற்றும் ஏனைய தகைமைகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள தொழில்நுட்ப, நிதிசார் மற்றும் ஏனைய தகைமைகளை பூர்த்தி செய்யாத விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
10. விலைமனுவின் பெறுமதியானது 5 மில்லியனுக்கு மேற்படின், தெரிவு செய்யப்படும் விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் அத்தியாயத்தின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
11. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடத்தப்படும். இந்த பெறுகையின் கீழான நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீட்டின் பெறுமதியானது (பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக) 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமைகள் 2021.02.18ம் திகதிய 04/2016 (iii) என்ற அரச நிதிச் சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.

| தொ. இல. | வேலை | விலைமனு இல. | நிதி வளம் | பெசேவ நீங்கலாக பொறியியல் அளவைப் பட்டியலின் தொகை(ரூபா) | தேவைப்படும் CIDA பதிவு | மீளளிக்கப்படும் ரொக்கப் பண வைப்பு அல்லது பிணைத் தொகை | | ஒப்பந்தக் காலம் நாட்கள் | பிணைத் தொகையின் செல்லு படியாகும் காலம் (நாட்கள்) | விலைமனுக் கோரல் ஆவணக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைத் தொகை(ரூ) | ரொக்கப் பண வைப்பு (ரூ) | | | |
| 1. | குண்டசாலை ஆரம்ப சிறுவர் பராய அபிவிருத்தி நிலையத்தின் நீர் கோபுரத்தை நிர்மாணித்தல் | CPC/CMS/ ACC/ 06/2024/16/01 | ஒப்பீட்டு வழங்கல் | 2,500,000.00 | C7/C8 | 50,000.00 | 25,000.00 | 60 | 91 | 2,000.00 |
| 2. | மஹ/ ரணபிம ரோயல் கல்லூரியின் விடுதியின் மலசலகூட அமைப்பின் அத்தியாவசிய பழுதுபார்த்தல் வேலைகள் (கட்டம் 02) | CPC/CMS/ ACC/ 06/2024/16/02 | கல்வி பராமரிப்பு | 5,300,000.00 | C6/C7 | 106,000.00 | 53,000.00 | 60 | 105 | 3,000.00 |
| 3. | மப/நு/ அக்கரபத்தன சிங்கள வித்தியாலயத்தின் ஆசிரியர் இல்லம் பழுதுபார்த்தல் | CPC/CMS/ ACC/ 06/2024/16/03 | கல்வி பராமரிப்பு | 3,900,000.00 | C7/C8 | 78,000.00 | 39,000.00 | 60 | 91 | 2,500.00 |
| 4. | மஹ/ சில்வெஸ்டர் கல்லூரியின் 50'x20' மூன்றுமாடி கட்டிடத்தின் தரைமாடியை நிர்மாணித்தல் (கட்டம் 01) | CPC/CMS/ ACC/ 06/2024/16/04 | மாகாண நிலையான அபிவிருத்தி வழங்கல் | 10,800,000.00 | C6/C5 | 216,000.00 | 108,000.00 | 60 | 105 | 4,000.00 |

**அமைச்சு செயலாளர் மற்றும் பெறுகைக் குழுத் தலைவர்,**
**முதல் மற்றும் கல்வி அமைச்சு, மாகாண சபைக் கட்டிடத்தொகுதி,**
**பல்லேகெலே, குண்டசாலை.**

**தொலைபேசி/ தொலைநகல்: 081-4481322/081-2424938**

# கேள்வி அறிவித்தல்

## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

### எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி

### ஆபத்தான மற்றும் பலகை மரங்களை வெட்டி அகற்றுவதற்கான கேள்வி கோரல்

**கேள்வி இல: EPL/PL/TB/T-12/2024_ Timber**

எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் நிருவகிக்கப்படும் கீழ்க்காணும் தோட்டங்களில் மரங்களை வெட்டி அகற்றுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தோட்டம் | மரவகை | மரங்களின் அளவு | வேறு விடயங்கள் | லொட் இலக்கம் | மீளளிக்கப் படும் வைப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|
| நாலந்த | தேக்கு | 100 | வன முகாமைத்துவ திட்டமிடலுக்கு உரித்தான மரங்கள் | 01 | 25,000/= |
| நாலந்த | தேக்கு | 100 | வன முகாமைத்துவ திட்டமிடலுக்கு உரித்தான மரங்கள் | 02 | 25,000/= |
| நாலந்த | தேக்கு மற்றும் கெட்டகால | 85 | வன முகாமைத்துவ திட்டமிடலுக்கு உரித்தான மரங்கள் | 03 | 25,000/= |
| நாலந்த | தேக்கு | 45 | வன முகாமைத்துவ திட்டமிடலுக்கு உரித்தான மரங்கள் | 04 | 15,000/= |
| செலகம தோட்டம் | பபூகெலிப்டஸ் அங்வீசியா உட்பட கலப்பு மரங்கள் | 05 | விழுந்த மரங்கள் | 05 | 5,000/= |
| பிட்டகந்த தோட்டம் தம்பலகல பிரிவு | கிரவலியா, யூகெலிப்டஸ் உட்பட கலப்பு மரங்கள் | 15 | இறந்த மரங்கள் | 06 | 5,000/= |
| பிட்டகந்த தோட்டம் மஹசேலவா கந்த பிரிவு | கிரவலியா, யூகெலிப்டஸ் உட்பட கலப்பு மரங்கள் | 26 | இறந்த மரங்கள் | 07 | 5,000/= |
| பிட்டகந்த தோட்டம் பிட்டகந்த கின்ரார பிரிவு | கிரவலியா, யூகெலிப்டஸ் உட்பட கலப்பு மரங்கள் | 07 | இறந்த மரங்கள் | 08 | 5,000/= |
| ரத்வத்த தோட்டம் ஓவிலிகந்த பிரிவு | எல்வீசியா, கிரவலியா உட்பட கலப்பு மரங்கள் | 27 | இறந்த மற்றும் விழுந்த மரங்கள் | 09 | 5,000/= |

கேள்விப் பத்திரங்கள் மற்றும் நிபந்தனைகள் 2024.09.20 முதல் 2024.10.04 பி.ப 1.00 வரை குறித்த தோட்ட அலுவலகங்களில் அல்லது 2024.10.04ம் திகதி பி.ப 12.30 வரை எல்கடுவவில் அமைந்துள்ள தலைமையகத்தில் ரூ.2000/= பெறுமதியான மீளளிக்கப்படாத தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள், 2024.10.04 பி.ப 12.30 வரை எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் ரத்வத்த, உக்குவெலயில் அமைந்துள்ள தலைமையகத்தின் கேள்விச் சபையின் தலைவரால் ஏற்கப்படுவதுடன் கேள்விதாரர்கள் முன்னிலையில் 2024.10.04 பி.ப 1.00 இற்கு திறக்கப்படும். கேள்விச் சபையின் தலைவரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

திருப்திப்பட முடியாத அதிகூடிய விலைமனுக்கள் சம்பந்தமாக, கலந்து கொண்ட சகல கொள்வனவாளர்களுடனும் கலந்துரையாடும் அதிகாரம் தலைவருக்குரியது.

**தலைவர்,**
**பெறுகைச் சபை,**
**எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி,**
**தலைமையகம்**
**ரத்வத்த,**
**உக்குவெல.**

**தொலைபேசி இலக்கம் :**
**066- 2242522 - தலைமையகம்**
**066- 3682755 - நாலந்த தோட்டம்**
**066- 3682457 - பிட்டகந்த தோட்டம்**
**066- 3669897 - செலகம தோட்டம்**
**066- 3682734 - ரத்வத்த தோட்டம்**

---

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

## வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

### வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக் குழு தலைவரினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்காக முன் தகைமை கொண்ட விலைமனுதாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விலைமனு இலக்கம் | பெறுகை இலக்கம் | வேலை விபரம் | பொறியியலாளர் மதிப்பீட்டு பெறுமதி (வெட் இன்றி) (ரூபா மில்.) | CIDA நிறுவனத்தின் பதிவு | மீளளிக்கப் படாத விலைமனு விண்ணப்பக் கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20/ B/10/2024 | ஹோட்டன்தென்ன தேசிய பூங்காவின் நுழைவுச் சுவரை சீரமைத்தல் | 7.0 | C8/C7/C6 (கட்டிடம்) | 2600.00 | 106,000.00 2024.12.04 அன்று வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். |

02. விலைமனுக் கோரல் தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரலின் கீழ் மேற்கொள்ளப்படும்.
03. விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாத விலைமனுதாரர்களாக இருத்தல் வேண்டும்.
04. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு விலைமனு ஆவணங்களை 2024.10.15 ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை பத்தரமுல்லை, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாக பரீட்சிக்க முடியும்.
05. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் குறித்த திட்ட வளவை பரீட்சித்துப் பார்த்து விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.
06. ஒப்பந்தம் வழங்குவதற்கு கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - கடந்த 05 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களின் வருடாந்த அளவு குறைந்தது 33.0 மில்லியன் ரூபா இருத்தல் வேண்டும்.
    - ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ள முடியுமான எந்த ஒரு முற்கொடுப்பனவையும் தவிர்த்து மற்ற ஒப்பந்தக் கடப்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட பின் குறைந்தபட்ச திரவச் சொத்து மற்றும்/ அல்லது கடன் வசதியின் அளவு 5 மில்லியன் ரூபாவுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.
07. விலைமனுக்களை சமர்ப்பிக்கின்ற அனைத்து விலைமனுதாரரினாலும் கடந்த 06 மாதங்களின் வங்கி அறிக்கை, 05 ஆண்டு கணக்கு அறிக்கை மற்றும் 05 ஆண்டுகளுக்குள் நிறைவு செய்யப்பட்ட இதற்கு இணையான 02 வேலைகளை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, 10 மில்லியனை விஞ்சிய வேலைக்காக விலைமனு ஆவணங்களில் கோரப்பட்ட தகைமையை உறுதி செய்வதற்கு அங்கீகரிக்க முடியுமான அறிக்கைகளை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
08. விலைமனு ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதோடு மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை 2024.10.15 ஆம் திகதி வரையில் வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்ற பெயரில், குறித்த நிறுவனத்தில் முத்திரை பொறிக்கப்பட்ட கடிதத் தாளில் மேற்கொள்ளும் எழுத்துமூல கோரிக்கை மற்றும் CIDA பதிவுப் புத்தகத்துடன் திணைக்கள சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத பண வைப்பு ஒன்றை மேற்கொண்ட பின் வழங்கப்படும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் குறித்த விலைமனு ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
09. மேல் குறிப்பிடப்பட்ட விலைமனு பிணையை வங்கி ஒன்றின் மூலம் முன்வைப்பதாயின் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகும் வகையில் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அதனை பணமாகச் செலுத்துவதாயின் திணைக்கள சிறாப்பருக்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியை இணைத்தல் வேண்டும். விலைமனு ஆவணத்துடன் விலைமனு பிணையை சமர்ப்பிக்காத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 1987 இன் 03 ஆம் இலக்கம் கொண்ட பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காக நிறுவன பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து PCA 03 சான்றிதழை விலைமனு ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
10. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறாக கடித உறைகளில் இட்டு முத்திரை இட்டு மீண்டும் ஓர் உறையில் இட்டு முத்திரை இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2024.10.16 ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட முடியும் என்பதோடு, தாமதித்துக் கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களைத் திறப்பது அன்றைய தினம் (2024.10.16) பி.ப. 2.30க்கு மேற்கொள்ளப்படுவதோடு, அதற்காக நீங்கள் அல்லது உங்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.
